Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.




புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 புரட்டாதி திங்கள் 18-ம் நாள் (4—10—1959) ஞாயிற்றுக்கிழமை ற. ஆகிர் பிறை 1 இதழ் 18

# பிரதமர் மறைவும் பிலிப்பும்



காலஞ் சென்ற பிரதமர்
திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா

**தோற்றம்; 8-1-1899** **மறைவு: 26-9-1959**

தமது 26-வது வயதில் அரசியலில் பிரவேசித்த திரு பண்டாரநாயகா இறுதிவரை அரசியல் வாதியாக, அதிலும் உச்சிப் படியில் சுமார் மூன்று ஆண்டுக் காலம் பிரதமராக இருந்து 60-வது வயதில் புத்த பிக்கு ஒருவரின் குண்டுக்குக் கோரமாகப் பலியாகினர். குண்டு பட்டு சுருண்டு போன பிரதமர் மறுநாள் காலமானர். பிரதமர் தம்மைக் கும்பிடும் சமயம் பார்த்து பிக்கு ஈவிரக்கமற்ற முறையில் மிருகத்தனமாக அவரைச் சுட்ட பரிதாபத்தை என்னென்று சொல்வது! (செய்தி 9-ம் பக்கம் பார்க்க)

## இழவு வீட்டில் சிறிமாவோ சீற்றம்

(சுதந்திரன் நிருபர்)

"உங்களுக்கு இந்த வீட்டில் என்ன வேலை? உடனே வெளியேறிவிடுங்கள். உங்கள் அனுதாபமும் ஆதரவும இறந்த பின்னர் கூட என் கணவருக்குத் தேவைப்படா"-இவ்வாறு திரு பிலிப் குணவர்த்தன கோஷ்டியைப் பார்த்து திருவாட்டி சிறிமாவோ பண்டாரநாயகா கூறினர் என்று தெரிகிறது.

இச்சம்பவம் காலஞ்சென்ற பிரதமரின் இழவு வீட்டிலேயே நடைபெற்றதாகவும், ஆனல் திரு பிலிப் மேற்படி பாணத்தினல் சற்றும் பாதிக்கப்படாதவராக தலைகவிழந்து மௌனமாக நின்றதாகவும் சொல்லப்படுகிறது,

காலஞ்சென்ற பிரதமர் திரு பண்டாரநாயகாவின் பூதவுடல் ரோஸ்மிட் பிளேசிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்த போது அங்கு திரு பிலிப் குணவர்த்தன, திருவாட்டி குசுமா குணவர்த்தன, மாத்தளைப் பிரதிநிதி திரு நிமால் கருணரத்ன, கொழும்பு மத்திய தொகுதி மூன்ருவது பிரதிநிதி திரு எம். எஸ். தேமிஸ் ஆகியோர் அங்கு சென்ருர்கள்.

### சீற்றம்

அவர்களைக் கண்டபோது தான் திருவாட்டி சிறிமாவோ பண்டாரநாயகா அவர்கள் மீது சீற்றங் கொண்டு 'உங்களுக்கு இந்த வீட்டில் என்ன வேலை? உடனே வெளியேறிவிடுங்கள். உங்கள் அனுதாபமும் ஆதரவும் இறந்த பின்னர் கூட என் கணவருக்குத் தேவைப்படாது" என்று சீறி விழுந்ததாகத் தெரிய வருகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)



புதிய பிரதமர் திரு. டபிள்யு. தகநாயகா
(8-ம் பக்கம் பார்க்க)

## இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது



ரிச்லெட்ஸ்
பெக்டோரல்

(Richelet's Pectoral)

ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, தொய்வுக்கு இது ஒரு வரப் பிரசாதம்!

● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்கு வரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்-நுறை-போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்


தொய்வினல் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப் படத்தக்க விதத்தில் பூரண சுணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

63, பாங்ஷால் வீதி, கொழும்பு—11.



பொது மக்கள் தமது இறுதி மரியாதையைச் செலுத்துவதற்காக மறைந்த பிரதமரின் பூதவுடல் பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் காட்சி, முதலில் மந்திரிமாரும், உதவி மந்திரிமாரும் முக்கிய பிரமுகர்களும் மரியாதை செலுத்துகிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்க இயக்கம்

## சட்ட நுணுக்கம்—2

சென்ற வாரம் 'ராப் வேல்' (Taff Vale) வழக்கையும் அதனுல் குறித்த தொழிற் சங்கத்திற்கு நேர்ந்த செலவுகளையும் நட்டத்தையும் கண்காணித்தோம். இந்த வழக்கில் கிடைத்த தீர்ப்பில் இருந்து எழுந்த நிலைமை தொழிற் சங்கங்கட்கு மிக ஆபத்தாக இருந்தது!

இத் தீர்ப்பில் இருந்து எழுந்த சட்ட நியமத்தைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம். "நட்டம் விளைவிக்கும் தப்பு" (Tort) ஒன்றை ஒருவர் செய்யின் அவ்வாறு செய்தவரிடம் நட்ட ஈடு கோரி சிவில் வழக்குத் தொடரலாம். ஒரு உடன் படிக்கையைத் தாமாக முறிப்பது அத்தகைய தப்பாகக் கருதப் படவில்லை. ஆனுல் உடன் படிக்கையை முறிக்குமாறு இன்னெருவரை ஏவுதல் அத்தகைய தப்பு ஆகும். (A breach of contract is not a tort; but an incitement to a breach of contract is.)

### புது வியாக்கியானம்

அவ்வாறு தப்புச்செய்தது, அதாவது இன்னெருவரை வேறு ஒருவருடன் செய்து கொண்ட உடன் படிக்கையை முறிக்குமாறு ஏவியது ஒரு தொழிற் சங்கமாயிருந்தாலும் சரி, அல்லது அத் தொழிற் சங்கத்தின் பிரதிகர்த்தா (Agent) என்று கருதக் கூடிய ஒரு பதவியாளராகவோ, அல்லது ஒரு சாதாரண நபராகவோ இருந்தாலும் சரி, அத் தொழிற்சங்கத்தின் மேல் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடரலாம் என்ற நிலைமை ஏற்பட்டது. முன்னர் அச் செயலை கிறிமினல் குற்றமாக கருதி வழக்குத் தொடரலாம்; பின்னர் சிவில் விதிப்படி "தப்பு" என்று கூறி தொழிற் சங்கத்தின் மேல் வழக்குத் தொடர முடிந்தது.

### விளைவு

மேற்கூறிய வியாக்கியானம் தொழிற் சங்கங்கட்கு மிக மோசமான நிலையைச் சிருட்டித்தது. எந்த வேலை நிறுத்தத்தின் பொழுதும் முதலாளிமார் கருங்காலித் தொளிலாளரை வேலையிலமர்த்த எத்தனிப்பர். அக் கருங்காலித் தொழிலாளரை வேலை செய்யாது தடுக்க தொழிற் சங்கம் முனைவது இயல்பே. அப்பொழுது கருங்காலித் தொழிலாளிகளைத் தங்களுடைய உடன் படிக்கையை நிறை வேற்றுது முறிக்கும்படி ஏவினர் என்று தொழிற் சங்கத்தின் மேல் தப்புச் செய்ததாகக் குற்றம் சாட்டி நட்ட ஈடு கோரி வழக்குத் தொடர்தல் மிகவும் சுலபம்.

### தீர்ப்பின் உட்பொருள்

இந்தச் சூழ் நிலை ஏற்படாத வண்ணம் வேலை நிறுத்தம் எதுவும் சித்திகரமாக நடாத்த முடியாது. அத்தகைய செயலை ஒரு தொழிலாளி செய்தாலும், அத் தொழிலாளி சங்கத்தின்

சோ. வன்னியசிங்கம் B. Com., M. Sc. (Econ) (Lond).
பொருளியல் விரிவுரையாளர்:
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
அக்குவைனுஸ் பல்கலைக் கழக கல்லூரி.

பிரதிகர்த்தா என்று கூறி சங்கத்தின் மேலேயே வழக்குத் தொடரலாம். முதலாளி கம்பெனிக்கு வேலை நிறுத்தத்தால் எய்திய நட்டம் அனைத்தையும் தொழிற் சங்கத்திடம் வசூல் பண்ணி விடலாம்! அது தான் நியாய துரந்தரர் சிருட்டித்த வியாக்கியானம் ஆகும்.

### பொதுத் தேர்தலும் தொழிற் கட்சியும்

இந்தத் தீர்ப்பின் பயனை தொழிலாளர் உலகம் விழிப்புற்றது. மிக்க சாவதானமாகவும் ஒற்றுமையாகவும் கருமமாற்றிப் பாராளுமன்றத்தில் புதிய சட்டமியற்றுவதாலேயே இந்த நிலைமையை அகற்ற முடியும் என்பது தெளிவாயிற்று. ஆகவே சமீபத்தில் நிறுவப் பெற்ற அரசியல் ஸ்தாபனமான தொழிற் கட்சியைப் பலப்படுத்த நாடு பூராவும் உள்ள தொழிற் சங்கங்கள் முனைந்தன. தொழிற் கட்சியின் உறுப்பினர் தொகை சில வருடங்களுள் மும்மடங்காக ஏறியது.

1906-ம் ஆண்டில் பொதுத் தேர்தல் ஏற்பட்டது. அப்பொழுது தேர்தலின் பொழுது தொழிலாளர் உலகம் தமது கட்சியாகிய தொழிற் கட்சியை விருத்தி செய்ய முனைந்தது. மேலும் இதர கட்சி அபேட்சகர்கள் முன்னும் தங்கள் கோரிக்கையை சமர்ப்பித்து அவர்களைத் திணற வைத்தது.

### வெற்றி

"ராப் வேல்" தீர்ப்பினுல் நேர்ந்த நிலைமையைப் பாராளுமன்றச் சட்ட மூலமாக அகற்ற உடன்படாத எந்த அபேட்சகருக்கும் தொழிலாளரின் வாக்குச் சம்மதம் கிடையாது என்பதை ஐயத்திற்கிடனின்றி பிரகடனம் செய்தனர். தேர்தல் முடிவில் மற்றையோர் எதிர்பார்த்திராத வண்ணம் 29 தொழிற் கட்சி அபேட்சகர்கள் பாராளுமன்றம் புகுந்தனர். வேறும் 12 தொழிலாளிகள் மிதவாதக் கட்சியின் சீட்டில் தெரிவு செய்யப் பெற்றனர். இவர்களை விட மற்றக் கட்சி அபேட்சகராக வந்து வெற்றிபெற்ற அநேகரும் தொழிற் சங்கங்களின் கோரிக்கைக்கு இணங்கியவர்களே.

### தொழில் தகராறுச் சட்டம் உதயம்

இந்தச் சூழ்நிலையில் ஏராளமான "மஜோறிற்றியை" உடைய மிதவாத அரசாங்கக் கட்சி (Liberals) 1906-ம் ஆண்டில் ஒரு திருத்த மசோதாவை பிரேரித்தது. ஆனுல் அம்மசோதா தொழிற் சங்கங்களின் கோரிக்கையைப் பூரணமாகப் பூர்த்தி செய்யவில்லை. அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களே அதைத் திருப்தியற்றது என்று நிராகரித்து விட்டனர். தொழிற் கட்சி அங்கத்தினர் தாமாகவே ஒரு மசோதாவைப் பிரேரித்தனர். அதன் பெறுபேருக "தொழில் தகராறுச் சட்டம்" எனப் பெயரிடப் பட்ட சட்டம் ஒன்று 1906-ம் ஆண்டில் நிறைவேற்றப் பெற்றது.

### சட்டத்தின் பலாபலன்

இந்தச் சட்டத்தின் பிரகாரம் தொழிற் சங்கங்கட்கு பிரத்தியேகமான அந்தஸ்தும் உரிமையும் கிடைத்தன. இச் சட்டம் ஸ்தாபித்த நிலைமையைச் சுருக்கமாகப் பின் வருமாறு கூறலாம்:

1. தனி நபராகச் செய்யுங்காலை குற்றமாகக் கருதப்படாத எச் செயலும் பல பேராகச் சேர்ந்து செய்த காலையும் குற்றமாகக் கருதப்படமாட்டாது.

2. சமாதானமான முறையில் இதர தொழிலாளரை வேலைக்குப் போகாது பின் தங்கும்படி ஏவுதல் சட்ட ரீதியான செய்கையே.

3. இன்னெருவரை அவர் ஏற்றுக் கொண்ட உடன் படிக்கையை நிறைவேற்றுது வழுவும்படி ஏவுதல் அல்லது வேறெருவரின் வியாபாரத்துக்குத் தடையாயிருக்கும் செயல் சிவில் விதிப்படி நட்ட ஈடு கோரக் கூடிய தப்பான செயலாகக் கருதப்பட மாட்டாது.

இந்த நிலைமையை உருவாக்கிய சட்டம் தொழிலாளர் உலகத்திற்கு ஒரு மகத்தான வெற்றியாக அமைந்தது.

# காதுக்கு எட்டாத ஒலி

## அற்புதங்கள் பல செய்கிறது

### துப்புரவு செய்ய, துளை போட, சூடு உண்டாக்க இன்னும் எண்ணெய் இறைக்கவும் பயன் படுகிறது

## அடக்கி ஆளாவிட்டால் ஆபத்து

காதுக்குக் கேட்காத ஒலி ஒன்று உண்டு. அதனுல் ஏற்படும் நன்மைகள் பல. ஒருகாலத்தில் உங்கள் வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களையும் அதனுல் கழுவலாம். கண்ணுடியை உருக்கவும், துளைகள் போடவும், உடம்பின் தளர்ச்சியைப் போக்கவும், பிணி தீர்க்கவும், நுண்ணிய இரண சிகிச்சைகள் செய்யவும், மண்ணுக்குள்ளிருந்து எண்ணெய் எடுக்கவும் செவிப் புலன் உணராத இந்த ஒலி உதவும்.

வினடிக்கு 15 "சைக்கிள்" முதல் 15,000 "சைக்கிள்" வரை உள்ள ஒலிகளே பெரும்பாலான மக்களுக்குக் கேட்கும். அதற்குக்குறைந்த அதிர்வுடைய ஒலிகளும் மேற்பட்ட அதிர்வுடைய ஒலிகளும் கேளா. கேட்காத ஒலிபற்றிய ஆராய்ச்சி விஞ்ஞான உலகில் புதிதாய்த் தோன்றியவற்றுள் ஒன்று.

கேள்விக்கு எட்டாத ஒலியைப் பற்பல வழிகளில் பயன்படுத்தப் படித்து வருகிருர்கள்.

### ஸோனுர்

கடலில் மறைந்தவற்றைகாண, தண்ணீரில் மூழ்கிக் கிடக்கும் பொருட்களைக் கண்டுபிடிப்பதற்கு இந்த ஒலி பயன்படுகிறது. இதற்கு "ஸோனுர்" என்று ஒரு கருவியைக் கண்டுபிடித்திருக்கிருர்கள். ஆகாயத்தில் "ராடார்" பயன் படுவது போல, தண்ணீரில் "ஸோனுர்" உதவுகிறது. கப்பல்களில் "ஸோனுர்" பொருத்தப்பட்டு ஒலியின் எதிரொலி ... நீர்மூழ்கிக் கப்பல்கள் முதல் தண்ணீரில் மறைந்திருக்கும் பொருள்களையெல்லாம் கண்டுபிடித்து விடலாம். "ஸோனுர்" மூலம் ஒலியலைகள் தண்ணீருக்குள் செலுத்தப்படுகின்றன; அவை அங்குள்ள பொருட்களில் பட்டுத் திரும்பி வரும்; இதனுல் இன்ன இடத்தில் இன்ன பொருள் இருக்கிறது என்று கணித்துத் தெரிந்து கொள்ளலாம். "ஸோனுர்" இப்பொழுது பெரிதும் பயன் படுகிறது.

### துப்புரவு செய்ய...

துப்புரவு செய்வதற்கும் காதுக்கெட்டாத ஒலி உதவும்; இத்துறை மிக விரைவாக வளர்ச்சி பெற்று வருகிறது. துப்புரவு செய்ய வேண்டிய பொருள் ஒரு திரவத்தினுள் அமிழ்த்தப்பட்டு அதனுள் அதிர்வு மிக்க செவிக்கெட்டாத ஒலி செலுத்தப்படும். வினடிக்கு 30,000 முதல் பத்து லட்சம் "சைக்கிள்"வரை உள்ள இத்தகைய ஒலி அலைகள் மிக மிக நுண்ணிய தூசியையும் அப்புறப்படுத்திவிடும். தசைக்குக்கீழ் மருந்து செலுத்தக் கூடிய மிக நுண்ணிய ஊசிகளையும், நகைகளையும், மிக நுண்ணிய வளைவுகள் உள்ள கருவிகளையும் கழுவிச் சுத்தம் செய்வதற்கும் இந்த முறை பயன்படுகிறது.

ஊதினுல் பறந்து விடக் கூடிய மெல்லிய தங்கத் தகடுகள்மீது ஒட்டிக்கொள்ளும் தூசியைப் போக்குவதற்கும் இந்தப் புது முறையைப் பயன்படுத்தி யிருக்கிருர்கள்.

### துளை போட...

எஃகுபோன்ற கடினமான பொருட்களில் துளையிடுவதற்கும் இம்முறை உதவும்; இதற்குத் துளையிட வேண்டிய பொருள் மூழ்கியிருக்கும் திரவத்தில் சாணைத் துகள் ஒன்று சேர்ப்பார்கள்.

பல்லில் துளையிடுவதற்குப் பல் வைத்தியர்களும், உடம்பினுள்ள எலும்பில் துளையிடுவதற்கு ரண வைத்தியர்களும் காது கேட்காத ஒலியைப் பயன்படுத்தி நலம் கண்டிருக்கிருர்கள்.

### சூடு உண்டாக்கலாம்

செவிக்கு எட்டாத ஒலியினுல் மிக்க வெப்பமும் உண்டாக்கலாம். கண்ணுடியை உருக்கிவிடத் தக்க சூடு இவ்வாறு உண்டாகியிருக்கிறது.

ஒலி அலைகளை ஒரே ஒரு புள்ளியில் குவியும்படி செய்யலாம்; எனவே, உடம்பின் தோலுக்கு எவ்விதக் கெடுதலும் இல்லாமல் உள்ளே உள்ள எப்பகுதியிலும் இவ்வாறு ஒலி அலைகளைக் குவித்துச் சூடு உண்டாக்கலாம். பந்தய விளையாட்டு வீரர்களுக்குத் தசையில் ஏற்படும் நலக்குறைவுகளைப் போக்குவதற்கு இன்று இந்த முறை பயன்படுகிறது.

இதே முறைப்படி மூளையிலும் ரண சிகிச்சை செய்யலாம். மூளையில் சரிவர வேலை செய்யாத பகுதிகளை, அடுத்துள்ள நல்ல பகுதிகளுக்குக் கேடில்லாமல், தீய்த்துத் தீர்த்துவிடலாம். இவ்வாறு ரண சிகிச்சை செய்வதால், கத்திகொண்டு வெட்ட வேண்டிய தேவையே இல்லை.

### எண்ணெய் எடுக்கலாம்

பெட்ரோல் கம்பெனிகள் மண்ணிலிருந்து எண்ணெய் எடுப்பதற்குச் செவிக்கெட்டாத ஒலிகளைப் பயன்படுத்

(7-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது.

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்

குண்டன்மால்ஸ்

26, கெய்லர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிந்த தமிழ்த் தலைவர் பெருமை
# தமிழகத்துத் தலைவர்கள் பேசுகிறார்கள்

ம. பொ. சிவஞானம்

1-29 இருசப்ப
கிராமணி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-5
25—9—59

## மூன்று கோடித் தமிழர் தலைவர்



இலங்கைத் தமிழர்களின் தலைவரான திரு. வன்னியசிங்கம் காலமானார் என்ற செய்தி கேட்டதும், திடுக்கிட்டேன்; திகைப்புற்றேன். எதிர்பாராத நிலையில் தலையில் இடிவிழுந்தது போல இருந்தது. இலங்கைத்தீவும் இந்தியத் தமிழகமும் உப்பு நீரால் பிரிக்கப்பட்டிருக்கலாம்; ஆனால் இந்த இரண்டு பிரதேசங்களிலும் வாழும் தமிழ் மக்கள் உள்ளத்தால், உணர்வால் ஒன்றுபட்டவர்கள். அதனால் தமிழ் பேசும் மூன்று கோடி மக்களுடைய தலைவர் ஒருவர் மறைந்து விட்டதாகவே நான் எண்ணுகிறேன். தலைமைப் பதவிக்கான தகுதிகள் அத்தனையும் பெற்றிருந்தார் எனது அரிய நண்பர் வன்னியசிங்கம். இலங்கைத் தமிழர்களுக் அந்நியர்கள் இழைத்து வரும் அநீதிகளுக்கெல்லாம் பரிகாரம் கண்டுவிடலாம்; ஆனால் வன்னியசிங்கம மறைவால் ஏற்பட்ட நஷ்டத்தை எதனைக் கொண்டு ஈடு செய்வது?

பாரத விடுதலைப்போரின் மத்தியிலே லோகமான்ய திலகர் மறைந்தபோது இந்திய மக்கள் எந்த நிலையில் வருந்தினார்களோ, அந்த நிலையில், வன்னியசிங்கத்தின் பிரிவால் இலங்கைத் தமிழர்கள் இருப்பதாக நான் உணருகிறேன். ஆனால், தலைவர் மறைவால் ஏற்பட்ட காலி இடத்தை காந்தி அடிகள் பூர்த்தி செய்தது போல வன்னியசிங்கம் மறைந்ததால் ஏற்பட்ட காலி இடம் தகுதிவாய்ந்த ஒருவரால் பூர்த்தி செய்யப்படுமென்று நம்புகிறேன்.

திரு. வன்னியசிங்கம் அவர்களை இலங்கையிலும், இந்தியத் தமிழகத்திலும் பலமுறை நான் நேரில் சந்தித்து அவருடன் அளவளாவிப் பழகியிருக்கிறேன். நட்புக்கு நல்லவர்; நாணயமான அரசியல்வாதி; எதையும் மக்கள் நலங்கருதியே செய்யக் கூடிய ஜனநாயகப் பண்பாளர்; ஒளிவு மறைவின்றிப் பேசக்கூடிய திறந்த மனத்தினர். ராஜீய தந்திரத்தைவிட ராஜீய தர்மத்திலேயே அவருக்கு அதிக நம்பிக்கையிருந்தது.

இந்தியாவிலுள்ள தமிழரசுக் கழகத்தையும்—இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் இணைக்கின்ற ஒரு பாலமாகத் திகழ்ந்தார் வன்னியசிங்கம். அண்மையில் அவர் சென்னை வந்திருந்தபோது எங்களுக்குள் அத்தியந்த நட்பு ஏற்பட்டது. நாங்கள் இரண்டு தனி நபர்களாக அல்லாமல், தமிழ் இனத்துக்காக உழைக்கும் இரண்டு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளாகவே தொடர்பு கொண்டோம்.

திரு. வன்னியசிங்கத்தின் பிரிவால் எனக்கு ஏற்பட்டுள்ள வருத்தம் தமிழரசுக் கழகத்திற்கும் தமிழரசுக் கட்சிக்குமுள்ள தொடர்பு நீடிப்பதன் மூலம் விரைவில் மறைந்து விடுமென்று நம்புகிறேன்.

தளபதி வன்னியசிங்கம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு, போராடுவதற்கான பயிற்சி தந்து மறைந்து விட்டார். அந்தத் தளபதியை அவருடைய பெயரை ஆதர்ச சக்தியாகக் கொண்டு இலங்கைத் தமிழர்கள் உரிமைப்போரைத் தொடர்ந்து நடத்துவார்களாக. திரு. வன்னியசிங்கம் அவர்களைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தாருக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் என் அனுதாபங்கள். மறைந்த வீரரின் ஆவி அமைதி பெறுவதாக.

—ம. பொ. சிவஞானம்
தலைவர், தமிழரசுக் கழகம்.

தமிழ்த் தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் மறைந்த செய்தி ஈழத்தில் உள்ளவர்களை ஒரு கலக்குக் கலக்கியது. தமிழ் பேசும் மக்களைக் கதறி அழுது கண்ணீர் வடிக்கச் செய்துவிட்டது.

இங்கு மட்டுந்தானா இந்த நிலை? இல்லை. கடல் கடந்த நாட்டிலும்—தாய்த் தமிழகத்திலும் ஒரே கலக்கம். திடீர் மரணச் செய்தி அங்குள்ளவர்களைத் திடுக்குற வைத்துவிட்டது.

கடந்த வாரச் சுதந்திரனில் நேயர்கள் பார்த்திருக்கலாம், தி. மு. க. பொதுச் செயலாளர், திரு. இரா. நெடுஞ்செழியன் தாம் திடுக்குற்ற தகவல் கொண்ட இரங்கற் செய்தி ஒன்றை மிக உருக்கமாக உரைத்திருந்தார்.

அவரைப் போல மற்றத் தலைவர்களும் பொது மக்களும் திடுக்குறவே செய்தார்கள்; கலக்கமும் அடைந்தார்கள். சென்னை நிதி-கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள இரங்கல் செய்தியில் தாம் பெற்ற அனுபவத்தைக் கூறுகிறார்; திரு. வன்னியசிங்கத்தில் தாம் கண்ட சிறப்பை உரைக்கிறார். தமிழரசுக் கழகத் தலைவர் மா. பொ. சிவஞானமும் அப்படியே. இருவரும் அனுப்பிய செய்திகள் இப்பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

இன்னும், நாம் தமிழர் இயக்கத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனாரும், திருச்சி தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதமும் சுதந்திரனுக்கு அனுப்பிய செய்திகளை 5-ம் பக்கத்தில் காண்க.

C. SUBRAMANIAM
MINISTER FOR FINANCE

FORT ST. GEORGE
MADRAS

23. 9. 59

## பெருமை நிலைத்திருக்கும்



இம் மாதம் 17-ம் திகதியன்று திரு. கு. வன்னியசிங்கம் இறந்தார் என்ற செய்தி என்னைத் திடுக்கிடச் செய்தது. நாற்பத்தொன்பது வயது நிறையாத இந்த இளம் பிராயத்திலேயே அவர்கள் நம்மிடையே இருந்து மறைந்தது நம்முடைய துரதிர்ஷ்டமே.

பல ஆண்டுகளாக இலங்கைவாழ் தமிழர்களின் உரிமைகளுக்காக பல இயக்கங்களில் ஈடுபட்டு அதன்காரணமாக பலஇன்னல்களுக்கு உட்பட வேண்டிய நிலை ஏற்பட்டும், என்றும் மனந்தளராது உரிமைப்போரில் பெரும் பங்கு கொண்டு வந்த வன்னியசிங்கத்தின் பெருமை என்றும் நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவர் வாழ்க்கை, மக்கள் நலம் பேணும் யாவருக்கும் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கி வரும். அவர் ஆத்மா சாந்தி அடையும் வகையில் அவரின் இலட்சியம் நிறைவேறுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

நிதி அமைச்சர்
சென்னை

# நேயர்கள் நெஞ்சம்

தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் மறைந்ததால் தமக்கு ஏற்பட்ட துயரைப் பல நேயர்கள் எழுத்தில் வடித்து சுதந்திரனுக்கு அனுப்பியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் பிரசுரிப்பது முடியாத காரியம். ஆதலால் உருக்கமான சில கருத்துரைகள் மட்டும் இங்கு தரப்படுகின்றன. இன்னும் சில பின்னர் வெளியிடப்படும்.

### சபதம் செய்வோம்

நானிருக்கும் கிராமத்திற்குப் பத்திரிகையோ செய்தியோ நேரத்துக்கு எட்டவில்லை. வெள்ளி காலை பாடசாலைக்கு ஆயத்தமாக முகச் சவரம் செய்கையில் என் ரேடியோ, "செய்திகள்" என்று ஏதோ கூறியது.

"தமிழரசு" என்றதும் செவியைத் திருப்பினேன்... "காலகதியானார்" என்றதும் திடுக்கிட்டேன். செய்வது என்னவென்று தெரியாமல் திகைத்தேன், பெற்றோரை இழந்த நிலைமையை அடைந்தேன்.

மன்னாரிலிருந்து காலை 8 மணிக்குப் புறப்படும் யாழ்ப்பாண பஸ்ஸைப் பிடிக்க வேண்டுமென்று கண்ணீர் வடிய வடிய ஒன்றரை மைல் தூரத்தை ஓடியடைந்தேன்.

நான் இருப்பது மன்னாரிலிருந்து 10 மைல்களுக்கப்பால். பஸ் பிந்தக்கூடுமென்று ஆனையிறவில் ஓர் காரில் ஏறினேன். அது சாவகச்சேரியில் நின்றது. இன்னொரு காரிமூலம் யாழ்ப்பா[illegible] அடைந்தேன். பசியாலும் பிரயாணத்தாலும் களைப்படைந்திருந்தேன். மூன்று முறை முயன்றும் முகத்தை பார்க்கவில்லை. சன நெருக்கடி. நாலாவது முயற்சியில் என் ஆசை நிறைவேறியது.

நந்தலைவர் இறந்ததை எண்ணி ஏங்குவதா? புகழைப் பாடிப் பொருமுவதா? அதை இதைச் சொல்லி நாளைப் போக்குவதா, நாம் இனிச் செய்ய வேண்டியது?

தலைவர் இராசவரோதயம் சொல்லியதுபோல் சங்கற்பஞ் செய்யும் தருணமிது, சபதம் செய்யும் நேரமிது.

அன்று துரோபதை அரசவையில் முடித்த கூந்தல் குலையச் செய்த சபதம் போல் இன்று நாம் ஒவ்வொருவரும் எடுக்க வேண்டிய சபதமுண்டு.

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட்டொன்றாகும் என்ற தெய்வ சங்கற்பப்படி இந்தப் பெரிய நட்டத்திலிருந்து அதைவிடப் பெரிய நன்மை உருவாகக்கூடுமென்ற நம்பிக்கையுடன் இறந்த தலைவரின் இலட்சியத்தையடைய ஒன்றுபட்டுழைப்போமாக. அவரின் குடும்பம் கண்ணியத்துடன் வாழ ஒவ்வோர் தமிழனும் உதவுவோமாக. தமிழ் மக்களின் இல்லங்களில் அன்னாரின் பிரதிமைப் படம்பிரகாசிப்பதாக.

கவிச் சக்கரவர்த்தி கம்பனிறக்க "இன்றைக்கோ கம்பனிறக்கும் நாள் என் கவிதை இன்றைக்கே உலகேற்கும் நாள்" என்று கூறிய பொறாமைக் கூத்தரைப் போல் தலைவர் மறைவு குறித்து சிலர் மகிழக்கூடும். இம்மகிழ்ச்சி வருங்காலத்தில் தமிழினம் முழுவதும் மகிழும் மகிழ்ச்சியாக மாறுவதற்குத் தலைவர் செய்த உயிர்த் தியாகமாக அவர் மரணத்தை எண்ணும் காலமும் தூரத்திலிருக்கமாட்டாது.

இந்தியா சுதந்திரம் பெற்றுப் பொலிவதற்கு சுதந்திர வெறிகொண்ட வீரன் சுபாசின் மறைவு முன்னோடியாக இருந்தது போல் இச்சம்பவமும் இருக்கக்கூடுமன்றோ!

—எம். டானியல் றேச்
உயிலங்குளம், மன்னார்.

### நூல் வெளியிடுவோம்

வையகமெல்லாம் தமிழ் மொழி வழங்க வேண்டும்; தமிழ்நாடு தன்னாட்சி பெற வேண்டும் என்று கடைசியாக இடைக்காடு பாரதி கழகத்தாரால் நடாத்தப்பெற்ற வான்புகழ் வள்ளுவன் மாநாட்டில் அவன் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து பேசுகையில் உணர்ச்சி ததும்ப, கண்களில் கண்ணீர் நிலைகொள்ள அங்கு குழுமியிருந்த தமிழ் மக்களைப் பார்த்துக் கேட்டுக்கொண்டார் நந்தலைவர் வன்னியசிங்கம்.

அன்னாருக்கு சிலை எழுப்பி, அவர் கண்ட கனவை நனவாக்கி வைக்கும் கடமைதான் நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும். அன்னாரைப்பற்றி நல்லவர்களிடமிருந்து கட்டுரைகள் பெற்று தொகுப்பு நூலாக வெளியிடுவதும், அவர் ஆற்றிய சொற் செல்வங்களை நூலாக வெளியிட்டு அவர் தம் கொள்கைகளை எங்கும் பரப்ப வேண்டியதும் எமது முக்கிய கடமையாகும்.

—வே. [illegible]
அனலைதீவு.


### தமிழ் மூச்சு

தமிழ் நாட்டு வீரன் வீரபாண்டிய கட்டபொம்மன் தமது இறுதி மூச்சுவரை தமிழ் மண்ணுக்காய் உழைத்தான். அதுபோல ஈழநாட்டில் எத்தனையோ எட்டப்பன்களுக்கிடையில் சிக்காமல் தமிழுக்காய், தமிழருக்காய் உழைத்தவர் நந்தலைவர் திரு கு. வன்னியசிங்கம். அவர் மறைந்த வியாழன் அன்று இரவு 8-45க்கு விட்ட இறுதி

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும்
4 அவுன்ஸ் மற்றும் 16 அவுன்ஸ்
சைஸ்களில் கிடைக்கிறது.

சோல் ஏஜண்டுகள்:—
சிர்நல் கதீர் அன் கம்பெனி,
43, இரண்டாம்குறுக்குத்தெரு, கொழும்பு 11.
டெலிபோன்: 6009 & 3710.


# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குத் தமிழ்ப் பெரியார் ஒருவர் வந்திருந்தார். பலவற்றையும்பற்றிப் பேசினார். தமிழ் மக்களில் பலர் தமது வீழ்ச்சியை இன்னும் உணராமல் உணர்ச்சியற்ற மரங்கள் போல வாழ்கிறார்களே என்று கவலைப்பட்டார். சிங்கள மக்களிடையே தோன்றியுள்ள தாய்மொழி ஆர்வத்தில் பத்திலொரு பங்கு தமிழருக்குத் தங்கள் தாய்மொழியிடத்தில் இருப்பதாகத் தோன்றவில்லையே என்று துக்கத்துடன் மொழிந்தார். சிங்களவரைப் பார்த்துத் தானும் தமிழர் தாய்மொழிப் பற்றைப் பெறுதல் கூடாதா? என்று ஆத்திரம் பொங்க வினவினார்.

### சிங்களவருடைய மொழி ஆர்வம்

"தமிழர் என்று பேர் சொன்னாற் போதுமா? தமிழைப் படிக்கிறார்களா? தமிழைத் தம் வீட்டிலே தானும் பயன்படுத்துகிறார்களா? தமிழ்ப் பத்திரிகைகளை ஆங்கிலம் படித்த தமிழர் எத்தனை பேர் படிக்கிறார்கள்? சிங்களப் பத்திரிகை படிக்காத சிங்களவர்களைக் காண முடியவில்லையே! சிங்களம் வாசிக்கத் தெரிந்தவர்கள் எல்லோரும் சிங்களப் பத்திரிகை படிக்கிறார்கள். தமிழர்களிலே தமிழ்ப் பத்திரிகை படிப்பவர்களைக் காண முடியவில்லையே" என்று தாம் கண்ட காட்சியினை மிகுந்த வருத்தத்துடன் கூறினார் அந்தப் பெரியார்.

அவருடைய கூற்று முழுவதும் உண்மை! உண்மை!! "தமிழிலே கையெழுத்து இடத் தெரியாது" என்று சொல்லி மகிழும் தமிழரும், "தமிழ்ப் பத்திரிகை படித்தால் விளங்காது" என்று கூறி 'உயர்வு' பெறும் தமிழரும், "தமிழ்ப் பத்திரிகைகளில் பழஞ் செய்திகள்தான் வெளிவருகின்றன-அவற்றை ஏன் வாசிக்க வேண்டும்" என்று நிலைமை அறியாது இகழ்ச்சி வினா எழுப்பும் தமிழர்களும் நம்மிடையே தொகையாகக் காட்சி அளிக்கிறார்கள். இவர்களிடத்திலெல்லாம் தமிழுணர்ச்சியை உண்டாக்குதலும் தமிழியக்கத் தொண்டர்களுடைய கடமையேயாகும்.

### காட்சிப் பேழைப் பண்டங்கள்

சுதந்திரனிலே தமிழியக்கம்பற்றிய செய்திகள் வாரந்தோறும் வெளிவருகின்றன என்பதை அறியாத "பிரகிருதிகள்" இன்றும் பலருளர். "தமிழுக்கு நெருக்கடி மிகுந்த இந்நாளில், "தமிழினம் இங்கு தன் தனித்தன்மையுடன் வாழுமா? மாளுமா? எனும் வினா மானமுள்ள தமிழர் மனத்தைவாட்டும் இக்காலத்திலே, ருஷியர்கள் சந்திரனைத் தீண்டி உரிமைகொள்ளும் இந்த இருபதாம் நூற்றாண்டிலே "தமிழியக்கம் என்றோரியக்கம் இலங்கையில் நடைபெறுகிறது என்பதை அறியாது இருக்கும் படித்த தமிழர்களும் இருக்கிறார்களே! இவர்கள் தமிழர்களா? காட்சிப் பேழைகளில் வைக்க வேண்டிய பண்டங்களா?" என்று ஆர்வம் மிக்க தமிழியக்கத் தொண்டர் ஒருவர் கேட்கிறார்.

தங்கள் அலுவலகங்களிலே தமிழ்ப் பத்திரிகையைப் படித்தாலும், தமிழ் நூல்களை வாசித்தாலும் சிங்கள அதிகாரிகள் தங்கள் தமிழ்ப் பற்றை அறிந்துவிடுவார்கள் என்று பயந்து பதுங்கி வாழும் அரசாங்க உத்தியோகத்தர்கள் பலர் உளர். இவர்கள் இன்னொரு வகைப் "பிரகிருதிகள்."

### வயிற்றுப் பிழைப்புக்காரர்

தமிழியக்கத் தொண்டர்கள் பலர் எழுதியனுப்பிய அனுபவக் குறிப்புகளில் ஒன்றினைக் குறிப்பிடுகிறோம். தமிழன் தன்மானத்தை விற்றுப் பிழைப்பதற்கு இதைவிடக் கேவலமான உதாரணங் காட்ட முடியாது. தமிழியக்கத் தொண்டர்கள் சிலர் அரசாங்க அலுவலகங்கள் சிலவற்றுக்குச் சென்று அரசாங்க அலுவல்கள் தவிர்ந்த ஏனைய அலுவல்களை எல்லாம் தமிழிலே செய்யுமாறு தமிழ் உத்தியோகத்தர்கள் சிலரைத் தூண்டினார்கள். "நீங்கள் உங்கள் மனைவி மக்கள், நண்பர் முதலானோருக்கு எழுதும் கடிதங்களின் முகவரியையாகுதல் தமிழிலே எழுதக்கூடாதா?" என்று கேட்டார்கள். "உங்கள் உடன் உத்தியோகத்தர்களாகிய சிங்களவர்கள் தங்கள் முகவரிகளைச் சிங்களத்திலே எழுதுகிறார்களே. இதை நாடோறும் பார்க்கும் உங்களுக்கு உங்கள் அருமைத் தமிழிலே எழுத வேண்டும் எனும் ஆர்வம் தோன்றவில்லையா?" என்றும் வினவினார்கள்.

"ஆம், நம் சிங்கள நண்பர்கள் சிங்களத்திலே எல்லாவற்றையும் செய்கிறார்கள் தான். ஆனால் நாங்கள் தமிழிலே முகவரியை எழுதினால் இங்குள்ள சிங்களவர்கள் எங்களிடத்து வெறுப்புக்கொள்வார்கள். எங்கள் உத்தியோகத்துக்கு ஆபத்து உண்டாகும். தமிழ் வாழ்ந்தாலென்ன கெட்டாலென்ன-எங்கள் வயிற்றுப்

(13-ம் பக்கம் பார்க்க)

## வளமார்ந்த பெருநிழலே!

—அமுது—

பொன்னிதயத் தளபதியே!
அமைதி நெஞ்சே!
பொருளோடு மனம் வாக்குக்
காயம் எல்லாம்
முன் நின்றே அளித்தவனே!
தமிழர் வாழ்வின்
முடிச் சறுக்கும் கள்வர் குலம்
முளைக்கக் கண்டு
இன்னுமிந்தத் தமிழனுக்கு
நீதி யோதல்
இழிவென்று இவ்வுலகை
நீத்தாய் தானே?
வன்னியசிங் கப்பெரியோய்!
தமிழர் தங்கும்
வளமார்ந்த பெரு நிழலே
மயங்க லாமோ?

# கடவுளுக்குக் கடிதம்

அன்புள்ள கடவுளே,

ஈழத்துப் பிரதமராக இது காலவரை இருந்த திரு. சொலமன் வெஸ்ட் றிஜ்வே டயஸ் பண்டாரநாயக்கா இன்று இங்கு இல்லை. 'ஓகோ, அவர் வெகு நாட்களாக ஐ. நா. வுக்குப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாரே, போய்விட்டாராக்கும்' என்று எண்ணிவிட்டுப் பேசாமல் இருந்துவிடப் போகிறீர்கள் விஷயம் அப்படியல்ல; சீரியஸாகப் போய்விட்டது.

ஆமாம், அவர் இந்த உலகத்தை விட்டே போய்விட்டார். சோமராம தேரோ என்ற ஒரு பௌத்த மத பிக்கு அவரைச் சுட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது, வளர்த்த கடாவே மார்பில் பாய்ந்ததைப் போல!

பாய்ந்த குண்டுகளில் ஒன்று பிரதமரின ஈரலையும் மண்ணீரலையும் தாக்கிவிட்டதாம். அவரை ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். இதற்கிடையில் அவர் தமது நாட்டுப் பிரசைகளுக்கு பத்திரிகைகள் மூலமும் வானொலி மூலமும் தாம் சுடப்பட்ட சம்பவம் பற்றி ஒரு அறிக்கை விட்டதை இங்கு கண்டிப்பாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

வைத்திய அறிக்கைப்படி பிரதமர் ஐந்தரை மணித்தியாலம் சத்திர சிகிச்சை பெற்றார். இடையில் அவருடைய இருதயம் வேறு நின்றுவிட்டு டாக்டரின் 'முகத்துக்காக' மீண்டும் அடிக்கத் தொடங்கியதாம். இதன் பிறகு உங்களுடைய திருவருளால் எமது பிரதமர் பிரக்ஞை பெற்று டாக்டர்களுடனும் தாதிமாருடனும் தமாஷாகப் பேசிப் பொழுதைப் போக்கினார் என்று செய்தி வந்தது. அப்போது தான் கவலை கொண்டிருந்தவர்கள் பலருக்குப் போன உயிர் திரும்பி வந்தது. சனிக்கிழமை காலையில் பிரதமரின் உயிர் போய் விட்டதாக பாழாய்ப்போன செய்தி வந்தது.

பிறகென்ன, செத்த பிரதமரை வைத்துச் சாகாத பிரதமர்கள் 'பப்ளிஸிட்டி' அடிக்க எத்தனையோ திட்டங்கள் திட்டப்பட்டன. அரசாங்க தடல் புடல்களெல்லாம் வழக்கம் போல நிகழ, நாட்டு மக்களும் கொழும்பை வந்து பார்த்து விட்டுப் போய்விட்டார்கள். நமது மந்திரிகளும் பிரமுகர்களும் பண்டாரநாயகா புராணத்தில் கடைசிப் பாடலை ஹொரகல்ல என்ற இடத்தில் பாடி முத்தாய்ப்பு வைத்தனர்.

இந்த இடத்தில் இன்னுமொரு விசேஷத்தையும் சொல்ல வேணடும். புதிய பிரதமர் பதவியை நமது "தகா" ஏற்று டெம்பிள் றீஸில் குடி கொண்டுள்ளார். இனிமேல் பள்ளிப் பிள்ளைகளுக்கு பணிசையும் பாலையும் நிறுத்தி, சோறும் கறியும் வழங்க வேண்டுமென்று நீங்களும் நானும் தகாவைப் பிரார்த்திப்போமாக.

—நாரதர்.

30-9-59.

# தபால் தலைகளில் வள்ளுவர் பாரதியார் படங்கள்

# அஞ்சல் அட்டையில் தமிழும் ஆங்கிலமும் இடம் பெறும்

## டில்லி தமிழ் அமைச்சர் தகவல்

தமிழ் நாட்டில் புழக்கத்தில் இருக்கும் தபால் தலைகளிலும் அஞ்சல் அட்டைகளிலும் மணியார்டர் பாரம் முதலானவற்றிலும் இந்தி ஏக ஆட்சி செலுத்தி வருவது தெரிந்ததே. அவற்றில் எல்லாம் ஒரு வார்த்தைகூடத் தமிழில் கிடையாது. நீண்டகாலமாகத் தமிழ் நாட்டில் உள்ளவர்கள் இதை எதிர்த்துக் குரல் எழுப்பி வந்திருக்கிறார்கள்.

டில்லி மத்திய அரசு மந்திரி சபையில் சமீபத்தில் டாக்டர் சுப்பராயன் இடம் பெற்றதோடு தமிழ் நாட்டுக்காரரின் எதிர்ப்புக் குரல்பலனளிக்கத் தொடங்கியிருக்கிறது.

### தமிழ் மந்திரி

மத்திய அரசு மந்திரி சபையிலிருந்து உணவு மந்திரி திரு ஜெயின் சமீபத்தில் ராஜிநாமாச் செய்ததோடு மந்திரி சபை மாற்றி அமைக்கப்பட்டது. அப்போது டாக்டர் சுப்பராயன் அஞ்சல், போக்குவரத்துத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் பதவி ஏற்றதும் முதலாவதாகச் செய்ய எண்ணி உள்ள திருத்தம் தபால் தலைகளிலும் அஞ்சல் அட்டைகளிலும் இந்தியின் தனி ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதாகும்.

தமிழ்நாட்டு அஞ்சல் அட்டைகளிலும், பண விடைதாள்களிலும் (மணியார்டர் பாரம்) தமிழும், ஆங்கிலமும் இடம் பெறும் என்று டாக்டர் சுப்பராயன் செய்தியாளர்களிடையே கூறினார்.

**சென்னைக் கடிதம்**

சுதந்திரன் சென்னை நிருபர்
ஈழத்தரசன்

### வட்டார மொழி

அஞ்சல் அட்டைகளில் இந்தி மட்டும் அச்சிடப்படுவதுபற்றி உங்கள் கருத்தென்ன என்று ஒரு செய்தியாளர் டாக்டர் சுப்பராயனை பார்த்துக் கேட்டார். அதற்குப் பதிலளிக்கையில் டாக்டர் சுப்பராயன் கூறியதாவது:-

"இந்திய அரசியல் வட்டத்தில் 14 மொழிகளை தேசிய மொழிகளாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே இந்தி மட்டும் அஞ்சல் அட்டைகளில் அச்சிடப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. எனவே அந்தந்த வட்டார மொழிகளுடன் ஆங்கிலத்தையும் சேர்த்து அஞ்சல் அட்டைகள் வெளியிட வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதாவது தமிழ்நாட்டில் விற்கப்படும் அஞ்சல் அட்டைகளில் தமிழும், ஆங்கிலமும் இடம் பெறும். இந்த முறையை இந்திய மக்கள் எல்லோரும் வரவேற்பர்" என்று அவர் தெரிவித்தார்.

### வள்ளுவர் படம்

அஞ்சல் தலைகளில் வள்ளுவர், பாரதியார் ஆகிய இருவர்களின் படத்தை வெளியிடுவதுபற்றியும் தீவிரமாக யோசிக்கப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் வேருெரு செய்தியாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

### ஆங்கிலம் வேண்டும்

இந்தி ஆட்சி மொழியாவதுபற்றி டாக்டர் சுப்பராயன் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

"இந்தி எப்போது ஆட்சி மொழியாக வேண்டும் என்பதை இந்தி பேசாத மக்கள் தான் நிச்சயிக்க வேண்டும். அதுவரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும்" இவ்வாறு டாக்டர் சுப்பராயன் கூறினார்.

---

### ஏழுமலையானுக்கு கட்டில், கதவுகள் தங்கத்தில்

திருப்பதி ஏழுமலையான் கோயிலின் வாயிற் கதவும் தங்க வாசலிலிருந்து மூலஸ்தான மண்டபம் வரையிலிருக்கும் எல்லாக் கதவுகளும் தங்கக் கதவுகளாக மாற்றப்பட விருக்கின்றன.

ஆண்டவனின் கட்டில் இப்போது வெள்ளியால் செய்யப்பட்டிருக்கிறது; இது தங்கக் கட்டிலாக மாற்றப்படும்.

வெங்கடேசப் பெருமாளின் உண்டியைக் கட்டுவதற்காக இப்போது இரும்புச் சங்கிலி பயன் படுத்தப்பட்டு வருகிறது; இது இனி வெள்ளிச் சங்கிலியாக மாற்றப்படும்.

ஆண்டவனுக்குப் படைக்கப்படும் உணவு வகைகள் இனி வெள்ளிச் சாமான்களில் படைக்கப்படும். இந்தச் சாமான்களை பக்தர்கள் கொடுத்தாலும் பெற்றுக் கொள்ளப்படும்.

இந்தத் தகவல்களை, கோயில் காப்பாளர் தேவராஜ் நிருபர்களிடம் தெரிவித்தார். ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமையன்று கோயிலில், புகழ் பெற்ற இசைவாணர்களின் கச்சேரி நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படும் என்று அவர் சொன்னார்.

---

### கடவுள் எங்கே?

சென்னை முதன் மந்திரி காமராஜர் அதிகம் பேசாதவர்; காரியத்திலே கண்ணாக உள்ளவர் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவர் வேதாந்த கேசரி விவேகானந்தரின் வாரிசாகவும் திகழ்கிருர் என்பது எத்தனை பேருக்கு தெரியும்?

இப்போது மந்திரிமார் கிராமங் கிராமமாகச் சென்று மக்களின் குறைகளை அறியப் புறப்பட்டிருக்கிறார்கள். (பழைய காலத்து அரசர்கள் மாதிரி மாறு வேடத்தில் அல்ல.)

### கிராம விஜயம்

முதன் மந்திரி காமராஜர் சென்றிருந்த ஒரு கிராமத்தில் அங்குள்ள தலைவர்கள் அவரை வரவேற்று சில குறைபாடுகளைச் சொன்னார்கள். பார்க்கவேண்டி இருந்தவற்றை முதன் மந்திரி பார்க்கவும் வைத்தார்கள்.

இடையில் அணிமையில் இருந்த கோவில் மணியோசை கேட்டது. பூஜை நேரத்தை அறிவிக்கும் மணியோசை அது. அப்போது அங்கிருந்த முக்கியஸ்தர்கள் முதன் மந்திரியை கோவிலுக்கு சாமி தரிசனத்துக்குப் போக வரும்படி அழைத்தார்கள்.

### என் கடவுள் கோயிலில் இல்லை

"அங்கே எதற்கு? என்னுடைய கடவுள் அந்தக் கோயிலில் இல்லை, ஏழைகளில் தான் நான் கடவுளைக் காணுகிறேன். கோயிலுக்குப் போவதால் வீணாகும் நேரத்தில் இன்னும் எத்தனையோ ஏழைகளின் வீடுகளைப் பார்க்கலாமே" என்றார் முதன் மந்திரி. பின்னர் கோவிலுக்குப் போகவில்லை அவர். ஏழைகளின் வீடுகளைத்தான் பார்வையிட்டார்.

சுவாமி விவேகானந்தரும் ஏழைகளில்தான் தாம் கடவுளைக் காண்பதாகக் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

### மாலை அல்ல மனு கொடுங்கள்

சென்னை பொலீஸ் மந்திரி திரு பக்தவத்சலம் பொதுமக்கள் தமக்கு மாலை மரியாதை செய்வதற்கு மாறாக மனு எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

ஊர் ஊராகச் சென்று மக்களின் குறைகளை நேரில் கண்டு அறிய அவர் புறப்பட்டிருக்கிறார். காஞ்சியை அடுத்த ஒரு கிராமத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. மாலைகள் அணிவிக்கப்பட்டன. அப்போது மந்திரி சொன்னார்:-

"மாலை போடுவது வீண் வேலை. பணம் அனாவசியமா

(13ம் பக்கம் பார்க்க)

---

சி. பா. ஆதித்தன்,
எம். ஏ., பார்—அட்—லா., எம். எல். ஏ.

2-16, மவுண்ட் ரோடு,
சென்னை-2
25—9—1959

### உரிமை காத்தார்



வன்னியசிங்கம் காலமானார் என்ற செய்தியைக் கேட்டதும் திடுக்கிட்டேன்.

இலங்கையில் வாழும் சகோதரத் தமிழர்களின் தலைவராக உரிமைக் காவலராக விளங்கினார், வன்னியசிங்கம். தமிழர் நலனுக்கு பங்கம் வந்த பொழுது எல்லாம், சிங்கம் போல் சீறி எழுந்து, உரிமை காத்தார். தமிழ் மொழியைக் காக்கும் போராட்டத்தில், சிறைச்சாலைக்கும்சென்றார். தமிழருக்காகவே தன் வாழ்நாள் முழுவதும் தன்னலம் கருதாமல் உழைத்தார்.

வன்னியசிங்கத்தின் மறைவு, தமிழர் சமுதாயத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு.

தலைவனை இழந்து தவிக்கும் தமிழ் மக்களுக்கும், குடும்பத் தலைவனை பறிகொடுத்து வாடும் வன்னியசிங்கத்தின் மனைவி—மழலைச் செல்வங்களுக்கும், எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சி. பா. ஆதித்தனார்
தலைவர், நாம்—தமிழர் இயக்கம்
சென்னை.

---

கி. ஆ. பெ. விசுவநாதம்

திருச்சிராப்பள்ளி-8
22—9—59

### நாடு, மொழி, இனப்பற்று



தமிழ் மக்களின் தலைவர் கோப்பாய் எம். பி. திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் சென்றவாரம் இடைக்காடு திருவள்ளுவர் மாநாட்டில் பேசுகின்றபோது அவர் இவ்வளவு விரைவில இவ்வுலகத்தை விட்டு மறைந்து விடுவார் என்றுஎண்ணவில்லை செய்தி உள்ளத்தை புண் படுத்துகிறது.

சில மணி நேரமே அவரோடுஉரையாடினேன். அவரதுநாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று ஆகிய மூன்றும் ஆழமான கருத்துகளோடுஅழுத்தமான சொற்களாக வெளிவந்தன. என் செய்வது?

யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்யவியலாத இழப்பு. எல்லோருடைய துன்பத்திலும் நான் பங்கு பற்றுகிறேன். மெல்ல நகர்ந்து செல்லும் காலமே நமக்கு ஆறுதல் அளிக்கும்.

கி. ஆ. பெ. விசுவநாதம்

---


## ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு.
கொழும்பு-10.
த. பெட்டி 649.



சிக்கனமானது! பிரகாசமுள்ளது!

உங்கள் றேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு



நாஷனல் றேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.

எஸ். யூ. மொகமெட் ஹாஜீயார்,
[illegible] வீதி, கொழும்பு-12.
143, மெயின் வீதி, காலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டமும் சமூகமும்



# பராமரிப்புத் தத்துவம் (GUARDIANSHIP)

ஒருவர் வயதின் இளமையினாலாவது அல்லது வேறெந்த உடல் அல்லது சித்தக் குறைவினாலாவது தம் காரியங்களை நடத்த முடியாத நிலையிலாவது அல்லது காப்பாற்ற முடியாத நிலையிலாவதிருந்தால் அவரைப் பேணவும் அவரின் பொருளைக் காப்பாற்றவும் இன்னொருவர் நியமிக்கப்பட வேண்டும். அந்நியமிப்பையே பராமரிப்புத் தத்துவம் (Guardianship) என்றும் காப்பாற்றப்படுபவரைப் பாலிதர் (Ward) என்றும் கூறுவர். இங்கு வயதின் இளமையினால் பராமரிப்புத் தேவையுள்ளவர்களைப் பற்றியே ஆராயப்படும். அதாவது பாலியர் (Minors) சம்பந்தமாக ஏற்படும் பராமரிப்புத் தத்துவத்தையே விளக்க முனைவோம்.

### பராமரிப்பு உரிமை

இயற்கையாக ஒரு இளம் பிள்ளையைப் பராமரிக்கும் உரித்தும் கடமையும் தகப்பனைச் சார்கின்றன. அதாவது ஒரு தகப்பன் தன் முறையான விவாகத்தில் பிறந்த பிள்ளைகளை அவர்களின் 21ம் ஆண்டு நிறைவுவரை பராமரிக்கும் உரித்தையுடையவன். அவ்வுரித்தை அவன் தன் துர்நடத்தையினால் இழந்தாலன்றி அவனிடமிருந்து பறிக்க முடியாது. இவ்விஷயத்தில் தேச வழமைச் சட்டத்துக்கடங்கிய தந்தையின் உரிமையில் ஒரு சிறு மாறுதல்களிருந்தன. 1911ம் ஆண்டுக்கு முன்னர் இருந்த தேச வழமைச் சட்டத்தின் ஒரு பகுதியை இங்கு கவனிப்போம்.

### தேச வழமைச் சட்டம்

"ஒருவர் தன் மனைவி இறந்தவுடன் மறுதாரம் செய்ய விரும்பினால் இறந்த மனைவியின் தாயார் அல்லது அம்மனைவியின் கிட்டிய உரித்தாளர் சாதாரணமாக அவளின் இளம் பிள்ளைகளை எடுத்து வளர்ப்பார்கள். அத்தருணத்தில் அப்பிள்ளைகளுடன் அவர்களுக்குத் தாய்வசம் கிடைத்த சொத்து முழுவதையும் அத்துடன் விவாகத்துக்குப் பிறகு தேடிய தேட்டத்தின் அரைப் பங்கையும் அன்னாரிடம் தகப்பன் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளான்" இதிலிருந்து கவனிக்கத்தக்கது யாதெனில் மறுதாரம் தகப்பன் விவாகம் செய்யின் பிள்ளைகளைப் பராமரிக்கும் உரித்துத் தாயின் தாய்க்கு அல்லது தாயின் கிட்டிய உரித்தினருக்கே உடையது. ஆனால் நீதிமன்றம் மேலே சொல்லப்பட்டவர்கள் பராமரிப்பதற்கு தகைமையற்றவர்களெனகருதினால்பிள்ளைகளைத் தகப்பனின் பராமரிப்பில் கொடுக்கலாம்.

### மாறுதல்

இக்கொள்கையில் 1911ம் ஆண்டுச் சட்டத்துக்குப் பின் சில மாறுதல்கள் ஏற்பட்டன. 1941ம் ஆண்டில் நடந்த ஒரு தீர்ப்பின் பிரகாரம் 1911ம் ஆண்டுச் சட்டம் முந்திய தேச வழமைக் கொள்கையைத் தவிர்த்து (Repeal) விட்டதென்று கூறப்பட்டது. 1911ம் ஆண்டுக்குப் பிறகு விவாகம் செய்த தகப்பன் தன் மனைவி இறந்து மறுதாரம் செய்தபோதிலும் பிள்ளைகளைப்பராமரிக்கும் பூரண உரித்து அவனுக்கே உரியது. அதைவிடப் பிள்ளைகள் பராயம் வரும் வரை அல்லது பிள்ளைகள் விவாகம் செய்யும் வரை அவர்களுக்குத் தாயிடமிருந்து வரும் சொத்துகளை முழுவதையும் அனுபவிக்கும் உரித்தும் தகப்பனுக்கேயுரியது.


திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசிலனைக்குழு சட்ட ஆலோசகர்


மேற்கூறியவற்றின் தாற்பரியம் யாதெனில் தற்கால சட்டப்படி பிள்ளைகளைப் பராமரிக்கும் உரித்து தகப்பனுக்கேயுரியது. போதிய காரணத்தினால் நீதிமன்றம் அவ்வுரித்தை நீக்கித் தாயிடமாயினும் வேறு யாரிடமாகிலும் கொடுக்கலாம்.

### தாயின் உரிமைப் பரிபாலன உரித்து

தகப்பன் இறந்த பிறகு பிள்ளைகளைப் பராமரிக்கும் உரித்துத் தாய்க்கேயுரியது. தகப்பன் இருக்கும் சந்தர்ப்பத்திலும் தாய் தகப்பனிடமிருந்து பிரிந்திருப்பின் பிள்ளைகள் பால்ய பருவத்திலிருந்தாலும் அல்லது தகப்பன் தன் நடத்தையினால் பிள்ளைகளைப் பராமரிக்கும் உரித்தை இழந்தாலும் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்துப் பிள்ளைகளைப் பராமரிக்கும் உரித்தைப் பெறலாம்.

தகப்பன் இறந்த பிறகு தாய்க்குப் பிள்ளைகளைப் பராமரிக்கும் உரித்து உண்டு எனினும் அவர்களின் சொத்தை பரிபாலிக்கும் உரித்து வேண்டுமாயின் அவ்வுரித்தை நீதிமன்றத்தில் கோரியே பெற வேண்டும். சொத்துப் பரிபாலிப்பவர் Curator எனப் படுவர். தகப்பன் இயற்கையாகவே பராமரிப்புக்காரனாகவும் (Guardian) சொத்துப் பரிபாலிப்பவனாகவும் உள்ளான். ஆயினும் பிள்ளைகளின் அசைவற்ற ஆதனங்களை எவ்விதமாயினும் பராதீனப்படுத்து முன் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றே அப்படிச் செய்ய முடியும்.

### மரண சாசனம்

தகப்பன் மரண சாசனம் மூலம் ஒரு பராமரிப்புக்காரனை நியமித்திருந்தால் அவர் தாயுடன் இணைப் பராமரிப்புக்காரனாக நியமிக்கப் படுவர். தகப்பன் இல்லாச் சந்தர்ப்பத்தில் தாய் இறக்கும் தறுவாயில் ஒருவரை மரண சாசனம்மூலம் பராமரிப்புக்காரனாக நியமித்தால் அவரை நீதிமன்றம் பராமரிப்புக்காரனாக நியமிக்க வேண்டிய கட்டாயமில்லை; ஆனால் தகப்பன் நியமித்திருந்தால் அவரையே நியமிக்க வேண்டும். தாய் இல்லாக் காலத்திலும் தகப்பன் ஒருவரை நியமியாத சந்தர்ப்பத்திலும் நீதிமன்றம் தன் எண்ணப்படி பராமரிக்க உடன்படும் ஒரு கிட்டிய இனத்தவரை அல்லது அப்பாலியரின் சிநேகிதர்களில் ஒருவரைப் பராமரிப்புக்காரனாக நியமிக்க உரித்துண்டு.

### சொத்துப் பரிபாலகர் நியமனம்

பாலியரின் சொத்தைப் பரிபாலிப்பவர் (Curator) எப்படி நியமிக்கப்படுவார் என்பதை ஆராய்வோம். தகப்பன் இயற்கையிலே உரித்துடையவன். அவனிறந்த பிறகு தாய் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்து அவ்வுரித்தைப் பெறலாம். ஒருவர் பாலியருக்கு (Minor) ஒரு ஆதனத்தைச் சாசனமூலமேனும் மரண சாசனமூலமேனும் கொடுக்கும் பொழுது அச்சொத்தைப் பரிபாலிப்பதற்கு ஒருவரை நியமித்திருந்தால் அவர் சம்மதப்பட்டால் அவரையே நீதிமன்றம் கட்டாயம் நியமிக்க வேண்டும் அவர் விரும்பாவிடில் பாரியாருக்கு நெருங்கிய இனத்தில் உள்ள ஒருவருக்கு அவ்வுரித்தைக் கொடுத்து சொத்துப் பரிபாலிப்பவர் தராதரப் பத்திரம் (Certificate of Curatorship) வழங்கலாம்.

### பரிபாலகர் தகைமை

மேற்சொல்லப்பட்ட நெருங்கிய இனத்தவர் இப்பொறுப்பை ஏற்கும் தகைமை வாய்ந்தவராயிருக்க வேண்டும். இத்தகைமையை அறிவதற்காக நீதிமன்றம் அவர் வசிக்கும் இடத்துக்குரிய கிராமாதிகாரியை அவரின் குணநிசயங்களைப்பற்றியும் அவரின் தராதரத்தைப்பற்றியும் அறிவிக்குமாறு உத்தரவிடலாம். தகைமையுள்ளவரும் இப்பொறுப்பை ஏற்றுக் கடமை செய்ய விரும்பி வருபவருமாகிய ஒரு நெருங்கிய இனத்தவர் இல்லாவிடில் நீதிமன்றம் பாலியரின் நன்மையை முன்னிட்டு அவரின் ஆதனங்களைப் பரிபாலிப்பதற்குத் தக்க ஒருவர் வேண்டுமெனக் கருதினால் அதற்குத் தகுந்த வேறெவரையும் நியமித்து அவருக்குப் பரிபாலிப்புத் தராதரப் பத்திரம் வழங்கலாம்.

### பராமரிப்புக்காரர் கடமை

மேற்படி நியமித்த பரிபாலிப்புக்காரரை (Curator) பராமரிப்புக்காரராகவும் (Guardian) நியமிக்கலாம். ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் இரு பதவியையும் ஒருவருக்குக் கொடுக்கப்படாது; அதாவது நியமிக்கப்படுபவர் பாரியாருக்கு இறந்தவுடன் நேர் வாரிசுவாகும் முறையிலிருந்தால் அவருக்கு இரு பதவிகளையும் கொடுக்கக்கூடாது. பராமரிப்புக்காரரின் கடமை பாலியரின் உடம்பைப் பேணுவதும் அவரைத் தாபரிப்பதும் அவரின் தேகாரோக்கியத்தைக் கவனிப்பதும் அவருக்குப் போதிய கல்வி அறிவு ஊட்டுவதுமேயாம்.

### வேதனம்

பராமரிப்புக்காரன் (Guardian) இனமாகக் கடமையாற்ற மறுத்தால் அவராற்றும் கடமைக்காக பாலியரின் சொத்திலிருந்தாவது வருமானத்திலிருந்தாவது ஒரு வேதனம் கொடுக்க நீதிமன்றம் உத்தரவிடலாம். இத்துடன் பாலியரின் பராமரிப்புக்கு தேவையான தொகையையும் சொத்துப் பரிபாலிப்பவர் (Curator) இவருக்கு மாதாமாதம் அல்லது காலத்துக்குக் காலம் சொத்திலிருந்து கொடுத்து கணக்கு தரும்படி உத்தரவிடலாம். இதுபோலவே சொத்துப் பரிபாலிப்பவருக்கும் நீதிமன்றம் ஒரு வேதனம் வழங்கலாம். ஆனால்

(9-ம் பக்கம் பார்க்க)




மௌலானா
அச்சடித்த சீத்தைகள்

ரமணீகரமாக காட்சியளிக்க
இன்றே தெரிவு செய்யுங்கள்

★ கண்ணைக் கவரும் டிசைன்கள்
★ சாயம் மங்காதவை
★ நீடிய உழைப்பு
★ தரத்தில் உயர்வானது

விசேஷமாக வரவழைக்கப்பட்டிருக்கும், புத்தம் புதிய டிசைன்களை, தெரிவு செய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.

மௌலானா (சிலோன்) லிமிட்
கொழும்பு, மருதானை, கண்டி.


### ஓலமே ஈழமெங்கும்!

—வேலாயுதம் தங்கராஜா—

மைந்தனைப் பறிகொடுத்து
மார்பினில் அறைந்த ரற்றும்
பைந்தமிழ் அன்னைக் கிந்த
பாரினில்த் துணையுமுண்டோ?
எந்தையே தமிழருக்காய்
இயன்றிடும் பாடு பட்ட
தந்தையே உன் பிரிவால்
தவிக்குதே எங்கள் நெஞ்சம்

முன்னை நற் பெருமையோடு
முடிபுனைந்தரசு செய்த
கன்னியெம் தமிழ்த்தாய் ஈன்ற
கடமையில் சிறந்த வீரா
வன்னிய சிங்க மென்னும்
வான் புகழ் கொண்டகோவே
உன்னை நாம் பிரிந்ததாலே
உளமதில் அமைதியற்றோம்

மூப்பினில் தினையளவும்
மூழ்கிடா இள வயதில்
கோப்பாயாம் தொகுதி தந்த
கோமகன் பிரிந்தாரென்னில்
அப்பாவித் தமிழர் கூட்டம்
ஆதரவற்றோராகி
ஒப்பாரி வைத்த ரற்றும்
ஓலமே ஈழ மெங்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்கு கடிதம்:

# சிறுபான்மைத் தமிழர் மகாசபை

## வடமராட்சி சமூக சேவா சங்கத்தின் வளர்ச்சி தான் அது

## சபையில் உள்ள "சின்னப்புத்தி" படைத்தோரின் பித்தலாட்டம்

இற்றைக்கு சிலகாலங்களாகச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையார் செய்து வருகின்ற காரியங்களைப் பார்க்க மிகவும் அருவருப்பாகவும் வெட்கமாகவும் இருக்கின்றது.

மகாசபையின் ஆரம்ப கர்த்தா என்பதோடு பல ஆண்டுகள் சமூக சேவையில் பொருளையும் காலத்தையும் செலவழித்தவன் என்ற உரிமையில் இன்றைய மகாசபையாரின் நன்றிகெட்ட சிறுமைக் குணங்களை மக்கள் மன்றத்துக்குச் சமர்ப்பிக்க முன்வந்துள்ளேன்.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை "ஆரியர் குளம் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தின் எண்ணத்தில் உதித்துபரந்து விரிந்து பரிணமித்தது" என்று துளியாவது உண்மைக் கலப்பற்ற ஒரு அபாண்டமான பொய்யைப் பிரசாரம் செய்கிறார்கள்.

### முதல் முயற்சி

வடமராட்சியிலுள்ள நாங்கள் "வடமராட்சி சமூக சேவா சங்கம்" என்ற பெயரில் பல ஆண்டுகளாக ஒரு ஸ்தாபனத்தை நடத்தி வந்தோம். அது மிக மிக உன்னதமான முறையில் வளர்ச்சியடைந்து வந்ததைப் பார்த்த எனக்கு ஒரு பேராசை பிடித்தது. இந்த ஸ்தாபனம் ஏன் அகில இலங்கைக்கும் பொதுவாக மாறக்கூடாதென்று யோசித்து "இனி நாம் செய்ய வேண்டியதென்ன?" என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரமொன்றை 1940ம் ஆண்டு வெளியிட்டேன். அத்துடன் நில்லாது எல்லாக் கிராமங்களுக்கும் தனியே சென்று, அங்கெல்லாம் உள்ள செல்வாக்கான வர்களைச் சந்தித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு பெரிய ஸ்தாபனம் அவசியம் என்று விளக்கினேன்.

### மகாசபை உதயம்

அதன் பயனாக நான் சந்தித்தவர்களில் பத்துப் பேரின் கையெழுத்தோடு ஆரியர் குளத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. நவாலியூர் திரு எம். ஏ. சி. பெஞ்சமின் என்ற பெரியார் தலைமைதாங்கினார். ஒரு மகாசபையின் அவசியம் பற்றியும், அது சாதிக்கக் கூடிய சாதனைகள்பற்றியும் நான் பேசினேன். அதன் பயனாகத்தான் மகாசபை உற்பத்தியாயிற்று. இதனை நிரூபிக்க என்னிடமும் திரு ஜி. எம். பொன்னுத்துரை போன்ற நண்பர்களிடமும் வேண்டிய ஆதாரங்கள்-தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. அன்பர்கள் விரும்பியபோது பார்த்துக்கொள்ளலாம்.

வடமராட்சி சமூக சேவா சங்கம்தான் மகாசபையாகப் பரிணமித்தது. சன்மார்க்க சங்கம் கூட்டம் நடத்துவதற்குத் தனது கொட்டிலைத் தந்து உதவியது. நேற்று முளைத்த பசுபதிக்கோ அவர் சகாக்களாகிய கோரைப் புல்லுகளுக்கோ இவைகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அகில இலங்கைக்கும் ஆரியர் குளந்தான் தலைமைதாங்குகிறது என்று தம்பட்டமடிக்கவே இந்தப் பிரசாரம் பயன்படுகிறது.

### வில்லூண்டி மயானச் சம்பவம்

ஆரியர் குளத்தைச் சேர்ந்த இந்தச "சன்மார்க்கர்கள்" வில்லூண்டி மயானத்திலே வெறிக்கூத்தாடி ஒரு மனிதனின் உயிருக்கு உலைவைத்தார்கள். அப்போது வதிரியிலுள்ள நாங்கள் கணவனை இழந்த அபலைக்கு உதவுவதற்காகப் பெருந்தொகைப் பணம் சேகரித்தோம். எமது தம்பி அண்ணுசாமி ஆசிரியர் "அந்தோ என்ன பரிதாபம் வில்லூண்டிக் குண்டுப் பிரயோகம்" என்று தொடங்கும் ஒரு பாட்டு இயற்றி நாடக மேடைகளிலும், பொதுக்கூட்டங்களிலும் உருசகமாகப் பாடி பொதுமக்கள் பணம் கொடுப்பதற்கு மறைமுகமாக உதவி செய்தார். வதிரியார் சேகரித்த பணம் வடமராட்சி சமூக சேவா சங்க ஆண்டு விழாவிலே ஆயிரக்கணக்கானோர் மத்தியிலே வெள்ளித் தாம்பளத்திலே வைத்து திரு எம். ஸி. சுப்பிரமணியத்தின் திருக்கரத்திலே ஒப்படைக்கப்பட்டது.

### அவமானம்

அந்தக் கடலையில் அமைதியாக உரிமைபெற வகை தெரியாத இந்தச் "சன்மார்க்கர்கள்"தான் அகில இலங்கையிலுமுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமை பெற்றுத் தரப்போவதாக வீறுப்புப் பேசுகிறார்கள்.

9-6-57ல் மகாசபையின் 14வது ஆண்டு விழா நடைபெற்றது. கொம்யூனிஸ்டு கட்சியால் தூண்டிவிடப்பட்ட காடையர்களும் கடைப்புளிகளும் கலாட்டா செய்தார்கள். இது எங்களுக்கு எதிர்பாராத அவமானமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. முக்கியஸ்தர்கள் பலர் அங்கிருந்து வெளியேறிவிட்டோம். காடையர்களின் நடம் புரிந்தனர். இன்று துரும்புகளும், தூசிகளும், குப்பைகளும், கூளங்களும் கூடிக் கும்மாளமடிக்கின்றன.

### சேவை

சமூக சேவை செய்ய வெளிவந்த இவர்கள் ஏதாவது சேவை செய்தால் நாமும் பார்த்துச் சந்தோஷப்படலாம். எங்களைப் பற்றி மிக மிக அவதூறாக—சின்னத்தனமாக அநாமதேயத் துண்டுப் பிரசுரங்களும், கீழ்த்தரமான பாட்டுக்களும், கடைப்புளிக் கதைகளும் எழுதிக்கொண்டிருப்பதுதான் சேவையென்று நினைக்கிறார்கள். நாங்கள் சும்மா இருப்பது இவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. அதனால் போதை ஏறிய நேரமெல்லாம் தூற்றுகிறார்கள்.

### கெடுதல்

எங்களைக் கைதூக்கிவிட காந்தியடிகளார், இராமசாமிப் பெரியார்போன்ற பெருமக்கள் யாழ்ப்பாணத்திலில்லையே என்று ஏங்கியிருந்த காலம் ஒன்று இருந்தது. எமது பிரசாரத்தினாலும், எழுத்தினாலும் அந்தக் குறைநீங்கி அநேக பெருமக்கள் முன்வந்து பல நல்ல காரியங்கள்—நாம் காத்திராத காரியங்கள் செய்து தந்த இந்த நேரத்தில் அவர்கள் மனம் புண்பட்டு வருந்தத் தக்க முறையில்—ஆத்திரம் வரத்தக்க முறையில மகாசபையின் நவீன எழுத்தாளர்களும், [illegible] ளும் நடந்து [illegible] முறை அருவருப்பைத் தருகின்றது. நாம் கட்டியெழுப்பிய கோட்டை தரைமட்டமாயிற்று. நமது முன்னேற்றப் பாதை அடைக்கப்பட்டுவிட்டது.

### கல்வித் தீர்மானம்

பெரும்பான்மைத் தமிழருக்கு மாறான காரியங்கள் ஒன்றும் தாங்கள் பேசவில்லையாம். "தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களை 50 வீதத்துக்கு மேற்கொண்டுள்ள தமிழ்ப் பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் சிங்கள மொழியையும் போதிப்பதற்காக தராதரம் பெற்ற சிங்கள ஆசிரியர்களை அரசாங்கம் நியமிக்க வேண்டும்"

இது மகாசபையாரால் கல்வி மந்திரிக்கு அனுப்பப்பட்ட ஒரு மகஜரிலுள்ள தீர்மானம். இது தரம் குறைந்தவர்களால தயாரிக்கப்பட்டதென்பதற்கு ஐயமேயில்லை. அவர்களுக்குத் தூரதிருஷ்டியென்றால் என்ன என்றே தெரியாது. எங்களில் சிலர் குறுக்கே நின்றிராவிட்டால் இதற்குரிய பலன் மிக விரைவில் கிடைத்திருக்கும்.

### சூழ்ச்சி

இன்று புற்றீசல்கள்போல சிறுபான்மைத் தமிழர் மத்தியில் அரசாங்கப் பாடசாலைகள் கிளம்புகின்றன. ஏழெட்டு எஸ். எஸ். ஸி.காரருக்கு வேலை கிடைக்கின்றது. ஆனால் அங்கு படிக்கின்ற அத்தனை மாணவர் வாயிலும் மண் விழுகின்றது. அனுபவப்பட்ட ஆசிரியன் ஒருவனுக்குத்தான் இது விளங்கும். தவிர சிங்கள ஆசிரியர் நியமனம் இலகுவாக நடைபெறத்தக்க சூழ்ச்சியும் இதற்குள் அடங்கியிருக்கிறது. காக்கைவன்னியர்களும், எட்டப்பன்களும் மகாசபையில் நிரம்ப இருக்கிறார்கள் என்பது பலருக்குத் தெரியும். இதற்குப் பிரதி உபகாரமாக செனட்டர் பதவியல்ல, அதற்கு மேலாலும் கிடைக்கலாம். உலக சரித்திரத்தில் துரோகிகளுக்கும் இடமுண்டுதானே!

### புதியவர்கள்

பதினன்கு வருடமாக மகாசபையில் மட்டுமல்ல, அதற்கும் முன்னரே தனிப்பட்ட முறையிலும் சமூகத்துக்காக மிகக் கஷ்டப்பட்டு உழைத்த பலர் எம்மத்தியில் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவராவது இதுநாள்வரை தங்களைப்பற்றிப் புகழ்ந்து பேசியதோ எழுதியதோ கிடையாது. மகாசபையில் நேற்று வந்து ஒட்டிக்கொண்டவர்கள் தாங்களே ஆசிரியர்களாக இருந்து தாங்களே வெளியிட்ட மலரில் தங்களைப்பற்றிப் புழுகித் தள்ளியிருப்பதைப் பார்ப்போர் "இதுகள் எவ்வளவு சின்னதுகள்" என்றெல்லாம் சொல்லிச் சொல்லிச் சிரிப்பார்களல்லவா? மலநாற்றம் வீசும் மலர் என்றும் தூற்றுவார்கள்.

### சத்தியப்பிரமாணக் கமிஷனர்

இன்று சிறுபான்மைத் தமிழர் மத்தியில் மிகவும் மலிந்த சரக்கு சத்தியப்பிரமாணக் கமிஷனர் வேலையாகும். நாங்கள் மகாசபையில் தொடர்புபட்டிருந்த காலத்தில் இரண்டு சர்வகலாசாலைப் பட்டதாரிகளையும், இளைப்பாறிய ஸ்டேஷன் மாஸ்டர் ஒருவரையும் கமிஷனர்களாக ஆக்குவித்தோம். ஆனால் இன்று கோணங்கிகள் எல்லாம் கமிஷனர்களாகும் நிலை ஏற்பட்டுச் சந்தி சிரிக்கின்றது.

### ஆசிரிய கலாசாலைப் பயிற்சி

அரசாங்கச் சலுகையின் பேரால் இந்த வருடம் 50 சிறுபான்மைத் தமிழ் மாணவர்களை ஆசிரிய கலாசாலைகளுக்கு மகாசபை எடுப்பித்ததாக அதிர்வெடி போடுகிறார்கள். இதன் அந்தரங்க நோக்கத்தை அந்தரங்கசுத்தியுடன் வாசகநேயர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

வடமராட்சி சமூக சேவா சங்கம் தொடங்கிய காலத்தில் 1ம் தீர்மானமாக எங்கள் சமூகத்திலிருந்து வருஷந்தோறும் குறைந்தபட்சம் மூன்று பிள்ளைகளையாவது அரசாங்கம் ஆசிரிய கலாசாலையில் சேர்த்துப்

(13-ம் பக்கம் பார்க்க)

## காதுக்கு எட்டாத..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

துகின்றன. எண்ணெய் எடுப்பதற்கு எண்ணெய்க் கிணறுகளுள் சிக்கல் மிக்க விசைக் குழாய்ச் சாதனங்களை இறக்கி வைக்க வேண்டும். அதற்குமாறாக, ஒரு 'வால்வு' வைக்கிறார்கள்; இந்த வால்வு ஒலி அலைகளால் இயக்கப்படுகிறது; எண்ணெய் இறைக்கப்படுகிறது.

### புட்டிக்கு மூடி

மதுபானக் கம்பெனிகளுக்கும் காதுக்கெட்டாத ஒலி உதவுகிறது. மதுபானம் ஊற்றிய புட்டியை மூடியிட்டு அடைப்பதற்குமுன் இந்த ஒலி அலைகள் அதன் மீது செலுத்தப்படுகின்றன; இதனால் புட்டி குதித்துக்குதித்து ஆடி, மதுபானம் நுரை தள்ளும்; காற்று வெளியேறும்; இச்சமயம் மூடி வைத்து அடைக்கப்படும். காற்று இல்லாத மதுபானம் மேலும் சிறிதுகாலம் கெடாமல் இருக்கும்.

### ஜெட் விமானம்

இவ்வாறெல்லாம் பல வழியிலும் பயன்படும் செவிக்கெட்டாத ஒலி அடக்கியாளாவிட்டால் ஆபத்தாகவும் இருக்கும். ஜெட் விமானங்களில் இது ஒரு பிரச்னை. ஒலியின் சக்தியை அளவிட்டு இத்தனை இத்தனை "டெசிபெல்" என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுவார்கள். 160 டெசிபெல் அளவுள்ள ஒலி காதில் விழுந்தால், செவிப் பறையில் பொத்தல் விழுந்துவிடும்; முயல் காதில் இரண்டு நிமிட நேரம் விழுந்தால், அது செயலற்றுவிடும்; நான்கு நிமிட நேரம் விழுந்தால், செத்துவிடும்.

### தியேட்டரில்...

செவிப் புலனுக்கு எட்டாத ஒலியை ஒரு சினிமாத் தியேட்டர்க்காரர் பயன்படுத்தியது [illegible] குறைந்த அதிர்வுள்ள ஒலிகள் பெரும்பாலானவர்களுக்கு அச்சமும் கலக்கமும் ஏற்படுத்தவல்லவை. அவ்வொலிகள் உடம்பைப் பாதித்துச் சோர்வும் களைப்பும் ஏற்படுத்துகின்றன. தியேட்டரில் பகற்காட்சி முடிந்து அடுத்த காட்சி ஆரம்பமாக வேண்டிய இடைவேளை. பகற்காட்சிக்கு வந்த இளைஞர்கள் சிலர் அடுத்த காட்சியையும் காண உட்கார்ந்திருந்தார்கள். தியேட்டர்க்காரர் குறைந்த அதிர்வுள்ள ஒலியலைகளைத் தியேட்டருக்குள் செலுத்தினர். விரைவில் தியேட்டர் காலி! உடம்பு வலியை யாரால் தாங்க இயலும்?


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1959 அக்டோபர் மாதம் 4-ந் தேதி

194 ஏ. தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## பலாத்காரத்துக்குப் பலி!

சுதந்திர இலங்கையின் நான்காவது பிரதமர் திரு சொலமன் வெஸ்ட் றிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயகா, அவர் கூற்றுப்படி, 'மஞ்சள் உடை தரித்த ஒரு மடையனின்' கைத்துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகித் துடிக்கத் துடிக்க மண்ணுலகை நீத்து, துரிதமாக விண்ணுலகை அடைந்துவிட்டார்!

திரு பண்டாரநாயகாவின் பரிதாபகரமான மரணம் பொதுப்படையாக அகில இலங்கைக்கும், குறிப்பாக சிங்கள இனத்துக்கும் ஒரு பெரும் நஷ்டமாகும்.

சிங்கள மக்கள் தங்கள் மொழிக்காக, தங்கள் மதத்துக்காக, தங்கள் நல்வாழ்வுக்காக, தங்கள் இனத்துக்காகப் பாடுபட்டு வந்த ஒரு பாதுகாவலரை, வழிகாட்டியை, அரசியல்வாதியை, மாபெரும் தலைவரை இழந்துவிட்டார்கள். திரு வன்னியசிங்கத்தின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு எப்படி ஒரு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாக முடிந்ததோ, அப்படியே திரு பண்டாரநாயகாவின் பிரிவு சிங்கள மக்களையும் பாதித்துவிட்டது.

ஒரு தலைவருக்காகச் சிந்திய கண்ணீர் உலர்வதற்கு முன்பு மற்றொரு தலைவருக்காகவும் மக்கள் கதறியழ வேண்டிய நிலையேற்பட்டுவிட்டது. என்னே, காலத்தின் கோலம்! என்னே, மனிதனின் வாழ்வு!

பிரதமரின் பிரிவினால் கலங்கிநிற்கும் அனைவருக்கும் தமிழ் பேசும் மக்கள் சார்பாக சுதந்திரன் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

திரு பண்டாரநாயகாவின் சிறப்பியல்புகளை முற்றாக ஆய்ந்து மூன்று அங்கங்களாகத் திரட்டலாம்:

1. நர்த்தனம் புரியும் நாவன்மை படைத்த சொல்லின் செல்வராக—இனநலம் விரும்பும் அரசியால்வாதியாக அவர் விளங்கினார்.
2. மேல்நாட்டு மோகம்கொண்ட பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்து, சுதேசிய தாகம்கொண்ட மக்கள் யுகத்தின் தலைவராக மாறினார்.
3. சிங்கள ஜாதீய உணர்ச்சியையும், சிங்கள மொழி உணர்ச்சியையும், சிங்கள தேசிய உணர்ச்சியையும் தட்டியெழுப்பி, முதலாளித்துவ ஆட்சியாக விளங்கிய யு. என். பி. ஆட்சியை முறியடித்து, முப்பத்துமூன்று ஆண்டுகள் செய்த முயற்சியின் பயனாக மூன்று ஆண்டுகள் பிரதமரின் பீடத்தில் அமர்ந்து சதா சஞ்சலத்துடனும், நெருக்கடிகளுடனும் போராடி, அகால மரணத்துக்கு ஆளானார் என்பதே அந்தத் திரட்டாகும்.

திரு பண்டாரநாயகாவின் அரசியல் கொள்கைகளும், மொழி இனப் பற்றுக்களும் நமக்கு மாறுபட்டனவாயினும் அவருடைய ஆன்ற திறமையினையும், அரசியல் சாமர்த்தியத்தையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ஜனநாயகம் செழிப்புற்று வளர வேண்டும் என்ற அவாவுடையவர்களான பொதுமக்களும், அஹிம்சையில் நம்பிக்கைகொண்டவர்களான தமிழ் மக்களும், காலஞ்சென்ற பிரதமர்மீது பிரயோகிக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனமான படுபாதக பலாத்காரச் செயலைப் பலங்கொண்ட மட்டும் கண்டிக்காமல் இருக்க முடியாது. எத்தகைய ஒரு அரக்கத்தனமான சூழ்நிலையில், இரக்கமற்ற முறையில் அவர் உயிர் பறிக்கப்பட்டதோ அத்தகைய கொடிய செயல்கள் நாட்டில் தலைதூக்குவது சாத்வீகத்திலும், சமாதானத்திலும் நாட்டமுடைய யாருக்கும் சந்துஷ்டியைத் தர முடியாது.

எனவே அரசாங்கம் இத்தகைய கொடூரச் செயலுக்கு காலாயிருந்தவர்களைக் கண்டுபிடித்து உரிய முறையில் தண்டிக்க உடனடியாக முயற்சிக்க வேண்டும். 'கொலைகாரனுக்கு மரண தண்டனை இல்லை' என்ற கொள்கை இத்தகைய குளிர் இரத்தப் படுகொலைகளுக்குப் பின்னரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு கொள்கைதானா என்பது புனர் ஆலோசனை செய்யப்பட வேண்டும்.

பிரதமர் பௌத்த பிக்குகளுக்கு அளவுக்குமீறிய சலுகைகள் காட்டி வந்ததன் பலன் இப்போது கைமேல் கிடைத்துவிட்டது. பால் வார்த்த கையையே பதம் பார்க்கும் சர்ப்பத்தைப்போல் அவர்கள் நடந்து கொண்டார்கள். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் ஓரளவு உடன்பாட்டினை ஏற்படுத்தக்கூடியதாயிருந்த பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தம் தகர்ந்து முறிவதற்கு சில அரசியல் பிக்குகள் காலாயிருந்தபோது சுதந்திரன் அரசியல் விமர்சகர் வருமுன் உரைத்த வாக்கு நேயர்களுக்கு ஞாபகமாயிருக்கும் என்று நம்புகிறோம்.

> "பிரதமர் பண்டாரநாயகா அரசியல் பிக்குகளின் கைப்பாவையாகிவிட்டார். அதனால் நிதானமிழந்து, நிலைகுலைந்து தள்ளாடுகின்றார். பிடிநத கொள்கைகளையும், கொடுத்த வாக்குறுதிகளையும்கூட அவரால் காப்பாற்ற முடியவில்லை- பிக்குகளைத் திருப்திப்படுத்துவதற்காக கையெழுத்திட்ட ஒப்பந்தத்தையே முறித்துவிட்டார். எந்த பிக்குகள் அவரை அரசியல் அதிகாரபீடத்தில் ஏற்றினார்களோ, அவர்களே இன்று அவரை ஆட்டிப் படைக்கின்றனர் புலிநோய் தீர்த்த வைத்தியர் புலிக்கே ஆகாரமானாற்போல் பிரதமர் இவர்களுடைய சதிக்குப் பலியாகும் காலம் அதிக தூரத்திலில்லை"

மேற்கண்ட சாரப்பட சுதந்திரன் அரசியல் விமர்சகர் வெளியிட்ட கருத்து இவ்வளவு சீக்கிரம் உண்மையாகிவிடும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

நடந்தது நடந்துவிட்டது; இனி நடப்பதைக் கவனிப்போம்.

# தஹாவின் புதிய அரசாங்கம்

## தமிழருக்குத் தரப்போவது என்ன?

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, முன் எப்போதும் கண்டிராத ஆரவாரங்களுடனும் ஆர்ப்பாட்டங்களுடனும் ஆடம்பரமாக ஆரம்பிக்கப்பட்ட பண்டாரநாயகா அரசாங்கம் இன்று அஸ்தமித்துவிட்டது,

அந்த இடத்தில் புதிய அரசாங்கம்—தஹநாயகா அரசாங்கம்—உதயமாகியிருக்கிறது. பெயரளவில் தஹநாயகா அரசாங்கம் என்று ஒரு புதிய அரசாங்கமாக இருந்தபோதிலும், பழைய ஜாடிகளில் பழைய கள்ளே வார்க்கப்பட்டிருக்கிறது.

"மூன்று நாள் முஸ்தபா" அதாவது பொத்துவில் தொகுதிப் பிரதிநிதி முஸ்தபா மூன்று நாள் முழு மந்திரியாக—நிதி மந்திரியாக, சுமைதாங்கி உத்தியோகம் பார்த்துவிட்டு மீண்டும் அரை மந்திரியாகிவிட்டார் என்பதும், திரு ஸி. பி. டி. சில்வா திரும்பி வரும்வரை திரு டி. ஏ. ராஜபக்ஷ காணி அமைச்சராக, மற்றொரு சுமைதாங்கியாக, விளங்குகிறார் என்பதும்தான் புதிய மந்திரி சபையிலுள்ள புதிய அம்சங்களாகும்.

திரு தஹநாயகா பிரதமராகிவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் சேர் ஜோன் கொத்தலாவலை "அரசவை விதூஷகன் அரசனாகிவிட்ட அதிசயம் இது!" என்று கிண்டலாகக் கூறினாராம். ஓரளவு திறமைசாலியான பண்டாரநாயகா மூன்றாண்டுகளாக தளப்பமின்றிச் சுமப்பதற்குத் திண்டாடிய இந்த அரசாங்கத்தைச் சதா 'தள்ளாடும் நிலையிலுள்ள தஹநாயகா எத்தனை காலம் சுமந்துவிடப்போகிறார் என்று அரசியல் சோதிடர்கள் ஆருடம் கணிக்கிறார்கள்!

தமிழர்களைப் பொறுத்தவரையில் புதிய தஹநாயகா அரசாங்கம் எப்படி இருக்கப்போகிறது என்பதுதான் நாம் ஆராய வேண்டிய விஷயமாகும். இதுசம்பந்தமாக தமிழரசுக் கட்சித் தலைவர் திரு என். ஆர். இராஜவரோதயம் வெளியிட்டுள்ள கருத்துப் பின்வருமாறு:

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

"தஹநாயகா அரசாங்கம் பதவிக்கு வந்ததனால் தமிழரசுக் கட்சிக் கொள்கையில் எதுவித மாற்றமும்ஏற்படப்போவதில்லை. தமது உரிமைகளைப் பெற தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து போராடவே செய்வார்கள். ஆட்கள் மாறுவதில் எங்களுக்குக் கவலையில்லை. அரசாங்கத்தின் கொள்கை மாற வேண்டும் என்பதுதான் எங்கள் போராட்டத்தின் ஜீவநாடி" என்று அவர் கூறியுள்ளார். அவர் கூற்று மிகவும் அர்த்தபுஷ்டியானது என்பதே நமது கருத்துமாகும்.

காலஞ்சென்ற பிரதமர் வகுத்த கொள்கைகளையே தாமும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்போவதாக திரு தஹநாயகா கூறுகிறார். இந்த நிலையில் தஹநாயகாவின் அரசாங்கத்தைப்பற்றி தமிழ் பேசும் மக்கள் மகிழ்ச்சியடைவதற்கு எதுவுமேயில்லை.

புதிய பிரதமர் திரு தஹநாயகா எப்படிப் பட்டவர் என்பதற்கு தமிழ் பேசும் மக்கள் கடந்த கால சம்பவங்களுள் ஒன்றைமட்டும் ஞாபகப் படுத்திக் கொண்டால் போதுமானது

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தத்தின்போது திரு. தஹநாயகா கல்வி அமைச்சர் காரியாலயத்தின் முன்பு நின்று பேசுகையில் "செல்லையாக்களையும், சுப்பையாக்களையும் நாம் விரட்ட வேண்டும் இந்தப் பறைத் தமிழர்களுக்கு நாம் இடமளிக்கலாகாது" என்று கர்ஜித்தார்.

இத்தகைய பரந்த நோக்கம் கொண்ட ஒரு மனிதர்தான் இன்று நம் நாட்டின் பிரதம மந்திரியாகியிருக்கிறார். பிரதமரானது மட்டுமல்ல "சிறுபான்மை மக்கள் அஞ்ச வேண்டியதில்லை" என்று அபயகரம் காட்டுகிறார்!

"மக்களிடையே அமைதி, ஒற்றுமை, பாதுகாப்பு ஆகியவற்றை நிலை நாட்டுவதற்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் வேண்டும். நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைப்போம். நான் யார் மீதும் பழிவாங்கமாட்டேன். சிறுபான்மையோர் அஞ்சவேண்டியதில்லை அவர்கள் என்னைச் சந்தேகிக்க வேண்டியதுமில்லை. எல்லா இனங்களும், எல்லா மதங்களும் சமமாகக் கருதப்படும்" என்கிறார்.

நம்பமுடியுமா? ஏதோ, பெரிய பதவி பெரிய மனதைக் கொடுக்கக் கூடும். பொறுத்திருந்து பார்ப்போம்.

# தமிழருக்கு மட்டுமல்ல—எல்லோருக்குமே நஷ்டம்

## திரு. வன்னியசிங்கம் மறைவு பற்றி யு. என். பி. ஆங்கில வார ஏடு

"கோப்பாய் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கத்தின் மறைவு தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இலங்கைவாழ் எல்லாமக்களுக்குமே நஷ்டமாகும்"—இவ்வாறு யு. என். பி. கட்சியின் ஆங்கில வார ஏடான யு. என். பியில் ஆசிரியத் தலையங்கம் இடம் பெறும் முக்கிய பக்கத்தில் மறைந்த தலைவரின் புகைப்படமும் போட்டு எழுதப்பட்டுள்ளது.

"திரு. வன்னியசிங்கம் மிகச் சிறந்த பாராளுமன்றவாதிகளுள் ஒருவர், கொண்ட கொள்கைக்காக உக்கிரமாகப் போராடுபவர். அதே வேளையில் அவர் ஒரு கண்ணியவானுங் கூட-சிறப்பாகத் தமது அரசியல் எதிரிகளுக்கும் அவர் கண்ணியவானாகவே இருந்தார்" என்று மேலும் அந்த ஏட்டில் கூறப்பட்டிருக்கிறது.

அதில் இன்னும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

### விசுவாசம்

"கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் மறைந்த செய்தியை ஆழ்ந்த அனுதாபத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஏடு (யு. என். பி.) அவருடைய அரசியல் கொள்கைகளை ஏற்றுக்கொண்டதில்லை. ஆயினும் ஒன்று. அந்த அரசியல் கொள்கைகள் மீதும், எந்த மக்களுக்காக அவர் போராடினாரோ அந்தப் போராட்டத்திலும் அவர் அந்தரங்க சுத்தியும் விசுவாசமும் கொண்டிருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை.

"திரு. வன்னியசிங்கம் மிகச் சிறந்த பாராளுமன்றவாதிகளுள் ஒருவர். அவரது மறைவு தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இந்த நாட்டின் எல்லா மக்களுக்குமே நஷ்டமாகும்.

"பாராளுமன்றத்துள் எப்படி எல்லோராலும் விரும்பத் தக்கவராக அவர் இருந்தாரோ அப்படியேதான் வெளியிலும் இருந்தார். பாராளுமன்றத்துள் கொள்கை அடிப்படையில் குறித்த காரணத்துக்காக அவர் போராடினார். ஆனால் அந்தப் போராட்டத்தை அவர் வெளியில் அப்படியே நடத்தவில்லை. அவர் எல்லோராலும் விரும்பத்தக்கவர்-அரசியல் எதிரிகள் கூட அவரை விரும்பினார்கள்; அவரோடு நட்புக் கொண்டிருந்தார்கள்.

### ஒரு சம்பவம்

"ஒரு சம்பவம். புதிய பாராளுமன்றம் துவங்கிய முதல் மாதங்களில் அங்கு நடந்தது. கலரிப் பிரவேசச் சீட்டுகளுக்காக நிக்கவிரட்டிய எம். பி. தென்னைக் கோனை அவரது தொகுதி மக்கள் பலரும் சூழ்ந்து கொண்டார்கள் ஆனால் அவரோ தமக்கு உரிய சீட்டுகள் அனைத்தையும் பெற்று ஏற்கனவே பலருக்கும் கொடுத்து முடித்துவிட்டார்.

"தமது சக எம். பி. க்கள் யாரிடமாவது வாங்கிக் கொள்ளலாம் என்று முயன்று பார்த்தார். பலன் இல்லை. அவர்களும் தமக்குக் கிடைக்கக் கூடிய சீட்டுக்கள் அனைத்தையும் பெற்றுத் தீர்த்துவிட்டார்கள். மிகுந்த கவலையோடு நின்றார் திரு தென்னக்கோன்.

"பாராளுமன்றக் கூட்டம் தேனீர் இடைவேளைக்குப் பின்னர் தொடங்குவதற்கு மணி அடித்தது. அப்போது அங்கு காலஞ் சென்ற வன்னியசிங்கம் வந்தார் திரு தென்னக்கோனின் பரிதாபகரமான நிலையைக் கண்டதும் என்ன விஷயம் என்று விசாரித்தார். கலரிச்சீட்டு இல்லாத கவலையைத் தெரிவித்தார்.

"உடனே திரு வன்னியசிங்கம் தமக்குரிய சீட்டுக்களையெல்லாம் திரு தென்னக்கோனிடம் கொடுக்கும்படி கலரிச் சீட்டு வழங்கும் உத்தியோகத்தரைக் கேட்டுக் கொண்டார். அப்போது அவர் சொன்னார்: 'இவர்கள் பாராளுமன்றத்துக்குப் புதிய எம்பிக்கள். அவர்களுக்கு எப்பொழுதும் உதவவேண்டும்.' இதுதான் திரு வன்னியசிங்கத்தின் உள்ளப்போக்கு. இதிலிருந்து அவர் எப்பொழுதுமே மாறுபட்டது இல்லை.

### கண்ணியவான்

"தாம் கொண்ட கொள்கைக்காக உக்கிரமாகப் போராடுபவராக அவர் இருந்தார். ஆனால் இந்தப் போர்ப்பணி பிறரைப பொறுத்த வரையில் கண்ணியவானாக அவர் இருப்பதற்கு தடையாக அமையவில்லை தமது அரசியல் விரோதிகளுக்கும் கூட அவர் கண்ணியவானாகவே இருந்தார்"—இவ்வாறு யு. என். பி ஆங்கில வார ஏட்டின் 25. 9. 59 இதழில் கூறப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கும்பிட்ட பிரதமர்மீது குண்டு பாய்ந்த பரிதாபம்!

## நாடெங்கும் ஒரு மாதம்

### அனுதாபம் அனுஷ்டிக்க ஏற்பாடு

—0—

### நினைவுச் சிலை நிறுவ ஆலோசனை

பௌத்த பிக்குவின் கையால் மாண்ட பௌத்த பிரதமர் திரு பண்டாரநாயகாவின் சடலம் கொழும்பிலிருந்து ஹொரகொல்லைக்கு கடந்த புதன்கிழமை ஊர்வலமாக ராஜாங்க மரியாதையோடு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அடுத்த நாள் கிறிஸ்தவ முறைப்படி கல்லறையில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது. பௌத்த சமய ஆசாரப்படி தகனம் இல்லாவிட்டாலும் ஈமக்கிரியைகள் அந்தச் சமயச் சார்பாகச் செய்யப்பட்டன.

பிரதமர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நாடு முழுமையும் எதிர் வரும் 26ந் தேதிவரை துக்கம் அனுஷ்டிக்குமாறு மந்திரி சபை சார்பில் புதிய பிரதமர் திரு டபிள்யு. தஹநாயகா வேண்டுகோள் விடுத்திருக்கிறார். மறைந்த பிரதமரின் நினைவாக அவரது நாட்டுப்புறப்பரம்பரை வாசஸ்தலமான ஹொரகொல்லையில் நினைவுச் சிலை எழுப்புவது என்றும் அரசாங்கம் கருத்து வெளியிட்டு இருக்கிறது.

இது தவிர பிரதமர் மறைந்த செப்டம்பர் 26-ந் தேதியைத் தேசிய விடுமுறை தினமாகப் பிரகடனம் செய்வது பற்றியும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

மறைந்த பிரதமரின் பூதவுடல் கொழும்பு ரோஸ்மிட் பிளேஸிலுள்ள இல்லத்திலும், பாராளுமன்றத்திலும், ஹொரகொல்லை இல்லத்திலும் மொத்தம் 6 நாட்கள் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் மூன்று இடங்களிலும் பெரிய இடர்ப்பாட்டின் மத்தியில் பிரதமரின் பூதவுடலைத் தரிசித்து தமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்தனர். ஊர்வலம் சென்ற வழியிலும் அனேகர் கூடி நின்று வணக்கம் செலுத்தினர்.

கடந்த மாதம் 25-ந் திகதி காலை அவரது ரோஸ்மிட் பிளேஸ் இல்லத்தில் பிரதமர் சுடப்பட்டார். அங்கு அவரைக் காணச் சென்றிருந்த ஒரு பௌத்தபிக்குவோடு பேசி அவரை அனுப்பிவிட்டு காத்துக் கொண்டிருந்த இன்னொரு பௌத்த பிக்குவிடம் பேச்சுக் கொடுப்பதற்கு முதல் படியாகப் பிரதமர் அவரைக் கையெடுத்துக் கும்பிட்டார். அந்தச் சமயம் பார்த்து அந்தப் பிக்கு — சோமராம தேரோ என்பவர் — பிரதமரை சுழல் துப்பாக்கியால் சுட்டதாகச் சொல்லப்படுகிறது. ஒன்றிரண்டு தடவையல்ல நான்கு ஐந்து தடவை துரத்திச் சுட்டதாகக் கூறப்படுகிறது.

சற்று நேரத்தில் பிரதமர் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு பிரபல டாக்டர்கள் தம்மால் ஆன மட்டும் முயன்று ஐந்தரை மணி நேரம் அறுவை வைத்தியம் செய்தார்கள். போத்தல் கணக்கில் பிரதமர் உடம்பில் இரத்தம் செலுத்தினார்கள். சிகிச்சையின்போது பிரதமர் தைரியமாக இருந்ததாகவும் பெருந்தன்மையாகவும் நகைச்சுவையாகவும் பேசினார் என்றும் சொல்லப்படுகிறது. ஆயினும் அடுத்த நாள் காலையில் 7-45 மணியளவில் அவர் உயிர் பிரிந்துவிட்டது.

சம்பவம் நடந்த அன்று காலை பிரதமரைக் காணச் சென்ற குணரத்தின என்ற பள்ளி ஆசிரியருக்கும் சூடு கிடைத்தது. கடைசி நேரத்தில் நடந்த சந்தடியில் துர்திர்ஷ்டவசமாகக் கத்திக் குத்துக்கும் அவர் ஆளானார். அவர் ஆஸ்பத்திரியில் இன்னமும் சிகிச்சை பெற்று வருகிறார்.

பிரதமரைச் சுட்டவர் என்று குற்றம் சாட்டப்பட்ட பிக்குவும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். பிரதமர் வீட்டில் காவல் கடமை செய்துகொண்டிருந்தவரின் குண்டுக்கு அவர் இரையானார். அதோடு அவர் அடங்கி விழுந்தார். அவர் இப்போது வெலிக்கடை சிறை ஆஸ்பத்திரியில் குணமடைந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

கிறிஸ்தவராக இருந்து பௌத்தராக மாறிப்பௌத்தத்துக்கும் பௌத்த குருமாருக்கும் விசுவாசமாக நடந்து வந்த பிரதமர் ஒரு பௌத்த குருவின் கையால் மாளநேர்ந்தது என்ன காரணத்தால்? இது அரசியல் சதியா அல்லது தனிப்பட்ட முறையில் கொண்ட கோபத்தைத் தீர்த்த வழியா? எந்த வகையில் பழிவாங்கல்? இது பற்றிப் பொலீஸார் விசாரணை செய்து வருகிறார்கள்.

### குயுக்தியார்

திருவாளர் வன்னியசிங்கத்தின் பிரிவினாலும் பிரதமர் பண்டாரநாயகாவின் மரணத்தினாலும் நாடு துக்கசாகரத்துள் மூழ்கியிருப்பதன் காரணமாக நகைச்சுவை அம்சமான "கேட்டுப் பாருங்கள்" என்னும் பகுதி கடந்த வாரமும் இவ்வாரமும் நிறுத்தப்பட்டுளது. அடுத்த வாரம் முதல் வழக்கம் போல் வெளிவரும்.

—ஆசிரியர்

## பிரதமர் மறைவும் பிலிப்பும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

#### மன்னிப்பு

திருவாட்டி பண்டாரநாயகாவின் சிற்றத்தினால் சிறிதும் பாதிக்கப்படாதவராக திரு. பிலிப் குணவர்தனா தலைகவிழ்ந்து அமைதியாக நின்றார் என்றும், ஆனால் நிமால் கருணாரத்னா தவித்துப் போனார் என்றும் அறியப்படுகிறது. சில உறவினர்களின் தூண்டுதலின் பேரில் திருவாட்டி பண்டாரநாயகாபின்னர் பிலிப் குடும்பத்தினரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாராம். ஆனால் கருணாரத்னாவிடமும் தேமிஸிடமும் மன்னிப்புக் கோர மறுத்துவிட்டாராம்.

#### கவலை

இதற்கிடையில், திரு. பிலிப் குணவர்தனாவின் ஆதரவாளர்களும் இடதுசாரிகளும் மிகுந்த கவலையில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. திரு. பிலிப் சற்று அவசரப்படாமல் ஆறுதலாக திரு. பண்டாரநாயகாவுடன் ஒட்டிக்கொண்டிருந்திருந்தால் இன்று அவரே பிரதமர் ஆகியிருப்பார் என்பதே அவர்களுடைய கவலைக்குக் காரணமாகும். ஒரு கொம்யூனிஸ அரசாங்கத்தை சுலபமாக அமைத்திருக்கலாம் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

#### சரித்திரம்

"திரும்பத் திரும்ப சுழலுவது சரித்திரம்" என்ற சித்தாந்தத்துக்கு இணங்கவே சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. யு என். பி. கட்சியிலிருந்து திரு பண்டாரநாயகா அன்று அவசரப்பட்டு ராஜினாமாச் செய்யாமல் இருந்திருந்தால் திரு. டி. எஸ். சேனநாயகா காலஞ்சென்றதும் அவரே பிரதமராகியிருப்பார். திரு. டட்லி சேனநாயகாவுக்கோ, சேர் ஜோன் கொத்தலாவலைக்கோ இடங்கிடைத்திராது.

#### அவசர புத்தி

திரு. பிலிப்பும் அவசரப்பட்டு அரசாங்கத்திலிருந்து ராஜினாமாச் செய்யாமலிருந்திருந்தால் திரு. ஸி. பி. டி. சில்வா நோயுற்றதும் திரு. பிலிப்பே சபை முதல்வராகியிருப்பார். தொடர்ந்து, திரு. பண்டாரநாயகா மரணமானதும் அரசாங்கம் அப்படியே திரு. பிலிப்பின் கைக்கு "புரட்சி" எதுவுமில்லாமலே வெகு இலகுவாக வந்து சேர்ந்திருக்கும். அவசர புத்தியினால் அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிட்டார் திரு. பிலிப் என்று [illegible] இடது சாரிகள் [illegible]றார்.

### பராமரிப்புத்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சாசனமூலம் நியமிக்கப்பட்டு அதன்மூலம் தன் உரித்தை ஸ்தாபிக்கும் சொத்துப் பரிபாலிப்பவர் வேதனம் கேட்க முடியாது.

பராமரிப்புக்காரன், சொத்துப் பரிபாலிப்பவர் என்னும் இரு பதவிகளுக்கும் பின் கூறப்படுபவர்கள் அருகதையற்றவர்களாவார்:-

1. தாங்களே இன்னொருவரின் பராமரிப்பில் அல்லது பரிபாலிப்பிலுள்ளவர்கள். (சித்தசுவாதீனமற்றவர்கள், விருதாரிகள் [Prodigals] ஆகியோரும் இதில் அடங்குவர்).
2. தாயும், தாய் அல்லது தகப்பனின் தாய் (பாட்டி)யும் அல்லாத வேறு பெண்கள்.
3. சுயாதீனம் பெற்றும் 21 வயதுக்குட்பட்டவர்கள் (கலியாணமாகிச் சுயாதீனம் பெற்றபோதிலும் அல்லது கவர்ணர் கட்டளைப்படி (Venia Aetatis) பருவமடைந்தபோதிலும் 21 வயதுக்குட்பட்டவர் இதில் சேர்க்கப்படுவர்)

இனி இப்பதவிகளினின்றும் விலக்கப்படும் சந்தர்ப்பங்களை ஆராய்வோம். முதலாவதாகப் பாலியர் (Minor) இறந்தவுடன் பதவி நீங்கும். இதைவிட பாலியர் 21 வயது அடைந்தவுடனும் பதவி நீங்கும்.

பாலியர் விவாகமாகியவுடனும், கவர்ணரின் உத்தரவின்படி பருவத் தராதரம் (Certificate of Venia Aetatis) கிடைத்தவுடனும் பராமரிப்புத் தத்துவம் நீங்கும். (எப்படிப் பருவத் தராதரம பெறுவது என்பதுபற்றி முந்திய கட்டுரையொன்றில் அறிந்தோம்)

நீதிமன்றம் எக்காரணம் பற்றியும் பரிபாலிப்பவரை அல்லது பராமரிப்பவரைப் பதவியினின்றும் நீக்கினால் அல்லது விலக அனுமதி கொடுத்தால் அவரின் பதவி நீங்கும். பராமரிப்பவர் பாலியரைச் சரியாகப் பராமரிக்கவில்லையென்னும் மனுவின் விளக்கத்தில் அவ்வுண்மையை அறிந்தால் அல்லது பரிபாலிப்பவர் சொத்துக்களை சரியாகப் பரிபாலனம் செய்யவில்லை அல்லது இருவரும் பாலியருக்கு விரோதமான முறையில் நடக்கிறார்களென உணர்ந்தால் அவர் [illegible] பதவியினின்றும் நீ[illegible] [illegible] இடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி

ஜவுளி உற்பத்தியில் இலங்கையர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு, வெளிநாட்டு நிபுணர்களைத் தருவிப்பதற்கான ஒழுங்குகள் செய்யும் முகமாக ஜனாப் எம். எஸ். சுலைமான் கிழைத்தேய நாடுகளுக்குச் சென்றுள்ளார். அவர் ஜப்பானிலுள்ள பல ஜவுளி ஆலைகளுக்கு விஜயம் செய்துள்ளார். ஒரு ஜவுளி உற்பத்தி ஆலையொன்றையும் இங்கு நிறுவுவதற்கான முயற்சிகளையும் அவர் மேற்கொண்டுள்ளார்.



ஜனாப் எம். எஸ். சுலைமான்

வர்த்தக சம்பந்தமாக சீனாபோன்ற இதர நாடுகளுக்கும் சுற்றுப்பிரயாணம் செய்ய, அவர் வெளிநாடுகளில் மூன்று மாத காலம் தங்கியிருப்பார்.

ஜனாப் எம். எஸ். சுலைமான் ஏ. ஆர். சிற்றம்பலம் கம்பனி, [illegible]ர்ருல் காதிர் கம்பனி ஆகியவற்றின் பங்காளியும், இலங்கை தேசிய வர்த்தக சபையின் அங்கத்தவரும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


## சித்திரக் கலை



சித்திரம் கற்க விரும்பும் நேயர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம். ஆண், பெண் இருபாலரும் இருந்த இடத்திலிருந்தே, சுலபமான தமிழ் அல்லது ஆங்கிலம் மூலம் 2 வருடத்தில் கற்கலாம்.

இலங்கை, மலாயா, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளிலிருக்கும் நேயர்கள் தபால் மூலம் இதைக் கற்க முடியும்.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்

**சந்தனுவின் சித்திர வித்தியாலயம்**

C/o சித்திரக்குள்ளன்

சிந்தாதிரிப்பேட்டை — சென்னை-2

**சி. சி. சி.**

**தெங்குப் பசளைக் கலவைகள்**



**அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன**

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக:-

**கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்**

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC625

# எல்லாம் அவனால்

சிறுகதை — எழுதியவர்: "மாலதி"

## நடராஜன்

"ஐயோ! கடவுளே!...... இவ்வளவு நேரமாகத்தான் கத்தித் தொலைக்கிறேனே, காதென்ன செவிடா உங்களுக்கு? கல்லுப் பிள்ளையார் மாதிரி அப்படியே இருக்கிறியளே" கடைசி வார்த்தையோடு கண்ணீர் மறைத்துக் கொண்டது அவள் கண்களை. சேலைத் தலைப்பை யெடுத்து முகத்தை மறைத்துக் கொண்டாள். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஒரு வருஷத்துக்கு முன்பாயிருந்திருந்தால், பளார் என்று கன்னத்திலே நாலு வைத்திருப்பேன். அவளும் பத்திரகாளியாக மாறிக் கோரநர்த்தனம் போட்டிருப்பாள். ஆனால் அன்றைய நடராஜனாக நானுமில்லை; அன்றைய மீனாவாக அவளுமில்லை.

அதையெல்லாம் நினைக்க நினைக்க இப்போது சிரிப்புத்தான் வருகிறது. ஆமணக்கங்காய்களால் தேர் கட்டி மடுக்களிலே எறிந்து விளையாடிய குழந்தை நினைப்புப் போல அவைகளும் நினைக்க நினைக்க சிரிப்பைத்தான் தருகின்றன. ஆனால் அந்தச்சிரிப்பின் அர்த்தம் வேறு; இந்தச் சிரிப்பின் ஆத்தம் வேறு. அந்த அறியாமையை எள்ளி நகையாடும் சிரிப்புத்தான் இது—தவறுகளை உணர்ந்து கொண்டபிறகு மேதையாகிவிட்டதாக இறுமாந்த நகைப்புத்தான் இது.

நான் கோப்பறட்டிவ் யூனியன் மனேஜராகக் கடமையேற்றுக் கொண்ட புதிய நாட்கள் அவை. மீனாவின் வீட்டை நானாக நாடிச் செல்லவில்லை. அதற்கும் வழிகாட்டிவிட்டவர் அண்ணா வேல்முருகுதான். போனேன். மீனாவைக் கண்டேன். அவள் அப்போதும் பாடசாலை போய்க்கொண்டுதானிருந்தாள். வயது பதினெட்டு. அழகி என்று புகழ முடியாவிட்டாலும் புதுமையிலே போதையேற்றும் ஒருதனிக் கவர்ச்சி. பனி நிலவிலே மலர்ந்த இளம் ரோஜா! இப்படித்தான் என் இதயம் அவள் தோற்றத்தைப் புரிந்து கொண்டது. காதல் வளர்ந்ததா? அதற்கு அவகாசமேயிருக்கவில்லை. ஆமாம், மீனா எனக்கு மனைவியானாள்.

'யூனியனி'லிருந்து அன்று வீடு திரும்பியபோது மீனா சோர்ந்து போய் படுத்திருந்தாள். தலையணை நனைந்து கிடந்தது. விழிகள் சிவந்திருந்தன. முகம் வீங்கியிருந்தது. எனக்குப் பகீரென்றது. இந்த ஒரு மாதமும் நான் காணாத அவலக் கோலம் இது.

"என்ன மீனா இது?........" அவள் வாய் திறக்கவில்லை விக்கி விக்கி அழுதாள். அவளை நிமிர்த்தினேன். குளமாயிருந்த கண்களால் என் முகத்தை நோக்கினாள். அது என் இதயத்தை ஊடுருவியது.

"மீனா! உனக்கு என்ன குறைதான் நேர்ந்து விட்டது? எதற்காக இப்படிக் கொல்லாமல் கொல்லுகிறாய்?" உருக்கமாகக் கடிந்து கொண்டே கண்ணீரைத் துடைத்துவிட்டேன். குழந்தைபோல என் மார்போடு சாய்ந்து கொண்டாள். குலைந்து கிடந்த அவள் கூந்தலை என் கரம் வருடிக் கொண்டிருந்தது.

"அத்தான்!..........."

"மீனா! சொல்லேன்......"

"நான் ஒன்று சொன்னால் கோபிக்க மாட்டீர்களே?..."

"நான் எப்போது கோபித்திருக்கிறேன்..மீனா?..." அவள் குனிந்து கொண்டாள். அந்தக் கண்களிலே நாணம் தளிரிட்டது இன்பக் கிளர்ச்சி அவள் உள்ளம் உடலெல்லாம் நிழலிட்டதை நான் உணர்ந்தேன். அதையும் மீறிக் கொண்டு ஒரு நடுக்கம் அவளை ஆட்டிக்கொண்டிருந்தது. நடுங்கும் குரலிலே அவள் சொன்னாள்—இல்லை ஆனந்தமும் பீதியும் கலந்த தொனியிலே அவள் முணுமுணுத்தாள்:

"நான்...... நான்.........ஒரு மாதமாக......"

"ஆ; அப்படியா? எனக்கு சொல்லவேயில்லையே கள்ளி! நான் ஆனந்த மேலீட்டால் துள்ளிக் குதித்தேன். அதை அவளும் பகிர்ந்து கொள்ளத் தயங்கியபோது தான் என் முகம் சுருங்கியது. அதையும் நான் பொருட்படுத்தவில்லை.

"இதற்குத்தானா பயந்தாய் பைத்தியக்காரி?"

"அம்மா சொல்வதைக் கேட்டால்........."

"அம்மாவா? என்ன சொன்னா?............

"..........." அவள் மௌனமாயிருந்தாள். அதைச் சொல்ல அவளுக்குப் புரியவில்லை. மண்டபத்துள் வந்தமர்ந்தேன். எனக்காகக் காத்திருந்தவள் போல பீடிகையோடு தொடங்கினாள் அவள் தாய். அதாவது என் மாமி.

"நான் அப்போதே பயந்தேன்" இந்தப் பீடிகைக்கு நானொன்றும் பேசவில்லை. அவள் தொடர்ந்து பல்லவியைப் பாடத் தொடங்கினாள்.

"பிள்ளைக்கு முதல் பிரசவத்திலே கண்டமொன்றிருக்கிறதாம். அவள் சாதகத்திலே அப்படியிருக்கு..."

"என்ன?......" என்னையறியாமலே வார்த்தை பறந்து விட்டது.

"மீனாவுக்குத்தான்; முதற் பிரசவம் ஆகாதாம். பிரசவித்தால் தாய் தப்பவே மாட்டாள். ஒன்றேயொன்று மருந்துபோல வளர்த்து வந்தேன்" மாமியும் மூக்குச் சிந்தத் தொடங்கிவிட்டாள்.

'நாசமாய்ப் போக அந்தச் சாதகம்! சாதகமாம்;...கண்டமாம் மண்ணாங்கட்டி' எனக்குள்ளேயே பொரிந்து தள்ளினேன். எனது மனோநிலையை எப்படிப் புரிந்து கொண்டாளோ தெரியாது. மீண்டும் ஒப்பாரி!........

"அதையும் விட அவளுக்கென்ன இது பிள்ளைப் பெறும் வயதா? சரியாக பதினாறு கூட முடியவில்லையே........."

ஓகோ: ஒரு மாதத்திலேயே இரண்டு வயது குறைந்துவிட்டதா? பதினாறுமே பதினாறு!' எனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டேன்.

"அதையும்விட ஒரு பிள்ளை பிறந்துவிட்டால் பிறகு கிழவியைப் போல்தானே மதிக்கிறாங்க இப்ப!"

'அட இழவே; மகளை எப்போதுமே கன்னியாகத்தான் வைத்துக்கொள்ளப்போகிறாளாமே இந்த மனுஷி?' என்ன புதுமையடா இது? ஒரு பேரன் பிறந்து வயிற்றிலே பால் ஊற்ற வேண்டுமென்று தவியாய்த் தவிக்கும் பாட்டிப் பரம்பரையிலே தான் பிறந்தாளா இந்த மனுஷி? இல்லாவிட்டால்?......' என் மனது விபரீதமாக வேலை செய்ய ஆரம்பித்தது. பரத்தையர் குடும்பப் பழக்கம் இதுதானாம் குழந்தை பிறந்தால இளமை குன்றி விடுமாம். அதனால் அவர்கள் இதற்கு இடமளிப்பதேயில்லையாம். எங்கோ நான் கேள்விப்பட்ட சந்தேக அபிப்பிராயங்கள் ஓடோடி வந்து என்னைக் குழப்பத் தொடங்கின. ஆனால் மீனாவைப் [illegible] [illegible] ர்வ நிகழ்ச்சிகள் நிஜ வாழ்க்கையிலேயே அமைந்து விடுகின்றன. இப்படி ஒரு மாமியைக் கற்பனை பண்ண இன்னும் ஒரு எழுத்தாளனும் நினைக்கவில்லை என்று தான் என் அறிவைக் கொண்டுகூற வேண்டும். இதையெல்லாம் நினைத்தால் சிரிப்பு வராமலா விடும்?

அவர்களின் நச்சரிப்பு நாளுக்கு நாள் வலுத்தது. மீனா புரிய முடியாத பீதியினால் நிம்மதியிழந்து தவித்தாள். வேறு வழியேயில்லை. மனக் குழப்பமும் நம்பிக்கையும்தானே எதற்கும் காரணம். ஒருவேளை அப்படி ஏதாவது நடந்துவிட்டால்?... எனக்கு நினைத்துப் பார்க்கவே பயமாயிருந்தது. மாமியின் பேச்சைப் பூச்சாண்டியாக நினைத்த நானே மீனாவை விடப் பீதியடைந்தேன்.

மாமியின் ஆலோசனைப்படி, ஒரு லேடி டாக்டரின் உதவியுடன் கரு சிதைக்கப்பட்டது......... ஐயோ! எங்கள் இன்பத்தின் பரிசே மண்ணோடு மண்ணானது. மீனா ஏங்கிவிட்டாள். அவள் உடலில், உள்ளத்தில்-பரிமளித்த தாய்மை உணர்ச்சிகள் அவளை தவிக்கச் செய்தன. கொல்லாமல் கொன்றன. அழிந்த செல்வத்தை நினைந்து நினைந்து பெருமூச்செறிவாள். அதன் தொடர்பாக அவள் படுக்கையிலே வீழ்ந்தாள். பக்க வாதம் மீனாவைப் படுக்கையிலே கிடத்திவிட்டது. ஒன்றா இரண்டா? ஆறுமாதங்கள்! கையிலிருந்த அவ்வளவும் பஞ்சாய்ப்பறந்தது. 'யூனியன்' பணத்திலே கூட என் கை படத் தொடங்கியது.

ஆனால் அப்படி விபரீதமாக எதுவும் நடைபெறவில்லை. எப்படியோ மீனா எழுந்தமர்ந்தால் போதும் என்ற கடைசி நம்பிக்கையிலேயே கடனைத் துச்சமாக மதித்தேன். எழுந்தமர்ந்தாள் மீனா. ஆனால் என்னிலே ஒருவித வெறுப்பு மனப்பான்மை. மீனாவின் போக்கே மாறிவிட்டது. எதற்கெடுத்தாலும் சிடுசிடுத்தாள். அதைவிடப் பன்மடங்கு எனக்கு ஆத்திரம் பொங்கியது. காரணமில்லாத பிணக்குகள் மூண்டன. மாமியைத் தவிர்த்துவிட்டு தனிக்குடித்தனம் அமைத்தேன். அதன் பலன் உணவில்லாமல் செத்தது தான்.

ஏச்சுப் பேச்சிருந்தாலும் மாமி எப்படியோ சமைத்து வைத்திருப்பாள். வேளா வேளைக்கு வயிற்றுக்கு ஏதாவது கிடைக்கும். மீனாவோ, பசியோடு வீடு திரும்பும் போது வெறுமனே படுத்திருப்பாள். அடுப்பிலே பூனை உறங்கும். பசி எல்லையில்லாத கோபத்தைக் கிளறும். அதன் பின் அமர்க்களம் தான்.

## மீனா

அமர்க்களமாமே அமர்க்களம்! முன் போல அவர் இப்போது இல்லை. இல்லாவிட்டால் அமர்க்களமா? அணுக்குண்டு யுத்தமே ஆரம்பித்திருக்கும். என் கன்னம் சிவந்திருக்கும்-கண்கள் கடலாகி இருக்கும். இப்போது அவர் எவ்வளவு மாறி விட்டார். அந்த மாற்றத்தின் காரணத்தை நினைக்கும் போதே இனிக்கிறது. அம்மா முட்டாள்! அதைவிட நான் பைத்தியக்காரி. இல்லாவிட்டால் இடையிலே பூகம்பமும் புயலும் வீசியிருக்கவேண்டியதில்லை. என் வாழ்வு பசுஞ் சோலையாகவே இருந்திருக்கும். இடையிலே ஒரு பாலைவனம். அது இப்போது பசுஞ் சோலையாகிவிட்டது. இன்பத் தென்றல் எல்லோருக்குமே வீசுகிறது. அம்மாவுக்கு அரட்டையடிக்கவே நேரமிருப்பதில்லை. அவள் அப்படியே இன்ப வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறாள்.

ம். இப்போது நினைக்கவே சிரிப்புத்தான் வருகிறது. அவர் சிரித்துக்கொண்டிருந்துவிட்டு இப்போதுதான் எழுந்து செல்கிறார். நான் கடுகடுக்கும் போது அவர் குறும்பாகச் சிரிக்கிறார். நானும் சிரித்து விடுகிறேன். என்னால் உணர முடிகிறது. நானும் எத்தனையோ மாறித்தான் விட்டேன். அந்தமாற்றத்தை-அதிலிருக்கும் இன்பத்தை என் உள்ளமும் படிப்படியாக உணர்ந்துதான் விட்டது.

இந்த மாற்றத்தின் காரணத்தை—உள்ளத்தின் உள்ளே, இன்ப ஒளி புகுந்து கிளுகிளுக்கும் காரணத்தை நினைக்கும்போதே பேச முடியாதவளாகி விடுகிறேன். அந்த இன்பவெள்ளம் தொண்டைவரை முட்டி விடுகிறது.........ம்...... ஹூம் என்னால் முடியாது...சொல்லவே மாட்டேன். அதைச் சொல்வதானால் அந்த இரவை நினைக்கவேண்டும். அதை நினைத்தால் அதற்கு முன் நிகழ்ந்த நினைக்க முடியாத துன்ப நாட்கள் முன்னுக்கு முன்னுக்கு வந்துமோதும். எனது ஆனந்தத்தை அது பாழ்படுத்தி விடும். இல்லை அதை என்னால் நினைக்கவே முடியாது.

எத்தனை திடமாகவிருந்தாலும் அந்த நினைவுகள் குமிழியிடத் தொடங்கிவிடுகின்றன. அடைத்துவைத்த கள்ளுப் போத்தலைப் போல பொரு பொரு வென்று அவை கழுத்துவரைகொதித்துக் கொதித்து முட்டுகின்றன. அந்த அடைப்பைத் திறக்காவிட்டால் கள்ளுப் போத்தல் வெடித்துப்பறந்து விடும். அதுபோல எனது நெஞ்சமும் இப்போது வெடிக்கத்தான் போகிறது. அந்த நினைவு நுரைகளை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே! நான் என் பாட்டுக்கு இருந்துவிடப் போகிறேன். அவை எழுமளவுக்கு எழுந்து தணியட்டும்.

'யூனியன்' பணத்திலே கைவைத்தது உண்மைதான். ஆனால் அவ்வளவு பெரிய தொகையை அவர் என்னதான் செய்தார்? என் வருத்தத்துக்கா? சே, இருக்காது. கூடிப் போனால் ஒரு ஆயிரம் செலவாயிருக்கும். இது அவர்களின் வேலைதான். நண்பர்களும் 'அக்கவுண்டன்'மார்களும் சேர்ந்து பண்ணிய வேலைதான். எல்லாம் அவர் தலையிலே வந்து விழுந்தது. நாற்பதாயிரம் ரூபாய் யூனியன் பணத்திலே துண்டு!

தலையிலடித்துக்கொண்டு வந்திறங்கினார் அவர் தந்தை. என்ன இருந்தாலும் பெற்ற மனமல்லவா? அவமானம்! அவமானம்! என்று துடியாய்த் துடித்தார். காணிகளையெல்லாம் அடகு வைத்து இருந்த பணத்தோடு சேர்த்துக் கட்டித் தொலைத்துவிட்டுப் போனார். அப்போதாவது புத்தி வருவதில்லையா? அந்த மனேஜர் வேலை வேண்டாம். ஏதாவது சின்னத் தொழில் போதுமென்று படித்துப் படித்து ஆயிரந்தடவை சொன்னேன் கேட்டால் தானே. அந்த இரவே நண்பர்கள் கூட்டம் திமு...திமு வென்று வீட்டில் வந்து புகுந்தது. அடுத்தநாள் அவர் திரும்பி வந்தபோது வேண்டுமென்றுதான் படுத்திருந்தேன். சமைக்கவேயில்லை. வார்த்தை வளர்ந்

(11-ம் பக்கம் பார்க்க)

தலை முடியை சிவுவதல்ல உங்கள் பிரச்னை !
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சிவுவது எப்படி என்பதுதான்!

நேத்திர லோக
உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

நேத்திரலோக தைலம்

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும் தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

டபிள்யு. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்ரேட், புறக்கோட்டை
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவனால்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தது. என் கன்னம் சிவந்தது. அடுத்த நாளும் அதே நிலை. கன்னம் மாத்திரமா சிவந்தது? ஐயோ அதை நினைக்கவே நடுங்குகிறதே.

"மீனா!"...நான்பேசவில்லை.

"பசிக்கிறது சோற்றை எடு..."

"நான் சமைக்கவில்லை."

"ஏன்?"

"நானென்றும் உங்களுக்கு வேலைக்காரியில்லை..."

"என்ன பல்லை உடைத்து விடுவேன்...!'

"அதற்காகத்தானே என்னைத் தனியாகப் பிரித்தெடுத்தீர்கள். உடையுங்கள், கொல்லுங்கள், சித்திரவதை செய்யுங்கள். ஏனென்று யார் கேட்கப்போகிறார்கள்?"...

"ஒப்பாரி? தேவையில்லை. பசிக்கிறது சோற்றையெடு"

"ஏன் உங்கள் நண்பர்கள் வீட்டிலெல்லாம் ஆலாத்தியெடுப்பார்களே!..." இன்னும் ஏதேதோ கூறினேன். எனக்குக் கண்மண் தெரியவில்லை.

'விசுக்!...' ஆ நான் அருண்டேன்; துடித்தேன். புழுப்போல நெளிந்தேன். கூரையில் செருகியிருந்த அந்தத் தடித்த பிரம்பு 'விசுக்!விசுக்!' கென்று சுழன்றது. அது பொரிப் பொரியாகிச் சிதறும்வரை நான் சுருண்டு சுருண்டு துடித்தேன். அவர் போய்விட்டார். கால், கையை அசைத்தாலே கண்ணில் படுவதுபோல உடலெல்லாம் புண்ணாக வலித்தது. கட்டிலில் அப்படியே வீழ்ந்து கிடந்தேன். பெண் மனம் உண்மையிலேயே ஆணவம் பிடித்தது தான். அத்தனை சித்திரவதை அடைந்தும் கூட நான் விட்டுக்கொடுக்கத் தயாராயில்லை. வைராக்கியத்தோடு தான் படுத்திருந்தேன், சாகும் வரை சமைப்பதில்லை என்ற உறுதியோடு.

வந்தார். சிறிது நேரம் அமர்ந்திருந்தார். எழுந்து போக முயன்றார். பொங்கி வந்த துக்க மெல்லாம் அழுகையாக வெடித்தது. குமுறிக் குமுறி அழுதேன். தயங்கி நின்றார். அவர் கண்களும் கலங்கின. அந்தத் தடித்த பிரம்பு கொஞ்சிய அடையாளங்கள் மாநிறமான என் மேனியெல்லாம் சிவத்துச் சிவத்துப் புடைத்திருந்தன. அவை ஒவ்வொன்றும் அவரின் இதயத்தைக் குத்தியிருக்க வேண்டும். அந்த உணர்ச்சியையே மறைத்துக் கொண்டு, இறுமாந்த தலையசைப் பொன்று போட்டுவிட்டு வெளியேறினார். அவர் மீண்டும் திரும்பிவரும் போது இரவு ஏழு மணியிருக்கும். அவரின் நெருங்கிய நண்பர்கள் மாணிக்க வேலுவும், துரையும், கூடவந்திருந்தார்கள். அடுக்களையிலே தடல் புடலாகச் சமையல் நடந்தது. மூவரும் சேர்ந்துதான் மூன்று மணி நேரமாகச் சமைத்தார்கள்.

சாப்பிட அமர்ந்தார்கள். நான்கு 'பிளேட்டு'களில் அவ்வளவும் படைக்கப்பட்டன. உணவு முடிந்தது. ஒரு 'பிளேட்' எனது கட்டிலுக்கு வந்தது. அவர்கள் போய்விட்டார்கள்.

எனக்கு ரோசம் பிறக்க வைப்பதற்கு அவர்கள் செய்த வேலை இது. எனது அளவு மீறிய ஆத்திரத்தைக் கிளறியது. எனது வாழ்வைப் பலியிடும் துணிவையே அது எனக்குத் தந்தது. சேலையை இறுக்கிக் கட்டினேன். இருளோடு இருளாக ஓடினேன். ஆமாம்; எனது உயிரே இன்னும் ஒரே கணத்தில் அந்த இருளோடு கலந்து விடப்போகிறது. வாசலின் முன்னே தான் அந்தக் கிணறு இருந்தது. இரு கைகளையும் கட்டிலே யூனறி உள்ளே எட்டிப்பார்த்தேன். அங்கே ஒரே ஆழ்ந்த இருள். அந்த இருள் என் உள்ளத்தைக் குழப்பியது. ஆயிரம் கேள்விகள் என்னைத் திணற வைத்தன. வேண்டாம் தற்கொலை!— வேண்டவே வேண்டாம்!... இல்லை நான் சாகத்தான் போகிறேன். இந்தக் கல் நெஞ்சுள்ள கணவனைவிட அந்தச் சாவு நல்லது; மிக நல்லது!...........செத்து விடுவாய்! நீ செத்து விடுவாய்! நாளை உன்னை எடுத்துப் புதைப் பார்கள். சும்மா புதைப்பார்களா? கீறுவார்கள்! கிழிப்பார்கள். நீ மானத்தோடு வாழ்ந்தவள். கணவனின் கைகளில் விலங்கு மாட்டுவார்கள்! சிறையிலே தள்ளுவார்கள்!......... அப்படியா? வேண்டாம். நான் சாகமாட்டேன்.

வேலியோரமாக இருந்த ஆமணக்கம் பற்றையுள்ளே போய் அமர்ந்து கொண்டேன். உடம்பெல்லாம் சுள் சுள்ளென்று வலித்தது. அழுதழுது அப்படியே அமர்ந்திருந்தேன். எத்தனை நேரம் இருந்தேனோ எனக்கே தெரியாது.

அவர்வந்திருக்கிறார், விளக்கை எடுத்துக் கொண்டு மூலை முடுக்கெல்லாம் தேடியிருக்கிறார். என்னைக் காணவேயில்லை. 'மீனா! மீனா! என்று பீதி நிறைந்த குரலோடு அழைத்ததை நான் கேட்டேன். வேண்டுமென்று நான் சிமிக்கிடவில்லை. பக்கத்து வீட்டார் எழுந்துவிட்டார்கள். எல்லோரும் சேர்ந்து தேடினார்கள். கிணற்றை நாலைந்து தடவை தூணடில் போட்டுத் துழாவினார்கள். மூலைக் கொருவராகத் தேடப்போனார்கள். பிறகு அரவமேயில்லை. தூங்கித் தான் விட்டார்களோ என்னவோ!.........

சிறிது நேரத்தின் பின் ஒரு உருவம் தளர் நடைபோட்டு வந்தது. கையில் 'ஹரிக்கன்' விளக்கு மின்னிக் கொண்டிருந்தது. நான் இருந்த பற்றை ஓரமாக நின்றது. பொதகென்று விளக்குவீழ்ந்தது. கண்ணாடி சிதற விளக்கும் அணைந்தது.

வேறு யாருமில்லை. அவரே தான் தலையிலே கையை வைத்துக்கொண்டு விக்கி விக்கி அழுதார். "அழட்டும், நன்றாக அழட்டும்!" வஞ்சம் தீர்க்கத் துடித்த என் மனத்திலே ஒரு வித திருப்தி தலை காட்டியது. ஆனால் அந்தத் திருப்தியே இதயத்தைப் பாகாக உருகச் செய்து விட்டது. அவரின் பெரு மூச்சு ஒவ்வொன்றும் இதயப் பாறையை நெகிழவைத்துத் துத் தவிக்க வைத்தது. அவரின் துயர வெள்ளத்திலே என் இதயமும் பங்கு கொள்ள ஆவலடைகிறதா? இல்லையா? அப்படியானால் நான் ஏன் அழுகிறேன்? கண்கள் ஏன் இவ்வளவு நீரைக் கக்குகின்றன? இதயம் ஏன் இப்படித்தத்தளிக்கிறது? தெரியாது. எனக்குத் தெரியாது. நான் விம்மிய ஓசை அவருக்குக்கேட்டுவிட்டதா? பற்றைகளை விலக்கி விட்டுக் குனிந்து பார்க்கிறாரே!....

ஆம், அவர் என்னைப் பார்த்தார். விம்மி வீங்கிய என் முகத்தைப் பார்த்தார். கடலாகிப் பளபளத்த என் கண்களைப் பார்த்தார்.

எனக்கு வெட்கமாகவிருந்தது. நான் குனிந்து கொண்டேன். அவரின் கண்களும் பளபளத்தன. அப்போதே கண்டேன். அவரின் முகமும் வீங்கியிருக்கிறது. அழுதிருக்கிறார். அவரின் நெஞ்சமும் விம்மித் தணிந்தது. அதுவும் உருகித்தான் விட்டது. அவர் கல் நெஞ்சரல்ல.

ஆண்கள் நல்லவர்கள்; எரிமலையைப் போல. அதுவும் சாந்தமாகத்தானிருக்கிறது; அமைதி நிலவுகிறது. அதுவும்தான் குமுறுகிறது; தருணம் வரும்போது அவை கக்கும் குழம்புகள் கூடக் குளிர்ந்துதான் விடுகின்றன.

(15-ம் பக்கம் பார்க்க)

# கிடையாத மரணம் கிடைத்தது

## புகழுடம்பு எய்தினார் திரு. வன்னியசிங்கம்

## பண்டிதமணியின் பாராட்டுரை

'புரந்தார்கண் ணீர்மல்கச்
சாகிற்பிற் சாக்காடு
இரந்துகோட் டக்க
துடைத்து"

புரத்தல்—பாது காத்தல்; தமமாற் பரிபாலிக்கப்பட்டவர்களும், தம்மைப் பரிபாலித்தவர்களும், கண்ணீர் மல்க—கண்ணீர் பெருக்கி இரங்க, சாகிற்பின்—சாதல்



பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

வாய்க்குமானால், இரந்து கோள் தக்கது உடைத்து— இரந்தாயினும், தவங்கிடந்தாயினும் அந்தச் சாதல் பெற்றுக்கொள்ளத் தக்கது. அது ஒரு பெரும் பேறுஎன்று வாயூறுகின்றார் வள்ளுவநாயனார்.

### பெருவாய்ப்பு

ஸ்ரீமாந் வன்னியசிங்கம் தாம் யாரைத் தலைவராகக் கொண்டாரோ அந்தத் தலை சிறந்த தலைவரும், தம்மை யார் தலைவராகக் கொண்டார்களோ அவர்களும் இரங்கி இரங்கிக் கண்ணீர் பெருக்க நம்மைப் பிரிந்து போய்விட்டார். அது வேறு யாருக்குத்தான் வாய்க்கும்?

### எல்லாம் உருகி நெகிழ்ந்தன

ஸ்ரீராமன் காடு நோக்கிச் சென்றான். அயோத்தி நகரம் இராமனைப் பின்தொடர்ந்து சென்றது. வன்னியசிங்கம் காடு நோக்கிச் செல்லவில்லை. அவருடைய உயிர் நீத்த உடம்பு சுடுகாடு நோக்கி எடுத்துச் செல்லப் பட்டது. அப்படியிருந்தும் யாழ்ப்பாணம் கண்ணீர் பெருக்கிக் கொண்டு வெள்ளம்போற் கரைபுரண்டு பின் தொடர்ந்தது. கற்கள், இரும்புக் கம்பங்கள் என்றிவைகள் கூட உருகி நெகிழ்ந்தோடின.

### சன சமுத்திரம்

தமிழ்—தமிழ் மக்கள் என்ற மூச்சுக்களே ஸ்ரீ வன்னிய சிங்கத்தின் மூச்சுக்கள். கடைசி மூச்சுக்களும் அந்த மூச்சுக்களே. பூத உடம்பு அந்த மூச்சுக்களை விடுத்துச் சும்மா கிடந்தது. அவருடைய புகழுடம்பு பல்லாயிரம் வடிவெடுத்துப் பூத உடம்பைத் தொடர்வது போன்றிருந்தது சன சமுத்திரம்.

### புகழ்

'தன் உயிர் புகழ்க்கு விற்ற சடாயு' என்ற தொடர்தான் வன்னியசிங்கத்தை நினைக்குந்தோறும் வாயில் வருகின்றது.

வன்னியசிங்கத்தின் புகழ் உதயமாகிப் படிப் படியே உயர்ந்து உச்சத்தை எய்தியது. ஒரு மயிரிடைதானும் அது கீழ் நோக்கி இறங்காமலே அவர் போய்விட்டார்;

### தவம்

எத்தனையோ பேர் தம் புகழ் உதயமாய் உச்சத்தை எய்திய பின் அஸ்தமனமாவதையும் பார்த்துச் சலிப்புறுகின்றார்கள். தம் புகழ் உச்சதசையில் இருந்த போது உயிர் நீத்தோமில்லையே என்று வாயூறி வருந்துகின்றார்கள். அதற்குத் தவம் வேண்டாமா?

### உளம் வெதும்பும் பிரிவு

வன்னியசிங்கத்தின் தவமே தவம்! வன்னியசிங்கத்தின் பிரிவு 'உள்ளப்பிரிவு' உள்ளி உள்ளி உளம் வெதும்பும் பிரிவு!!

—பண்டிதமணி,
சி. கணபதிப்பிள்ளை.

# இருதய பலவீனத்திற்கு புதுமுறை சிகிச்சை

இருதய பலவீனர்களை குணப்படுத்துவதற்கான "பையோஸ் டிமுலேட்டர்" என்ற புதிய சாதனம் ஒன்றை நிகொலாய் ஜவாட்யான் தலைமையில் இயங்கும் ஒரு ஆராய்ச்சிக் குழுவினர் உருவாக்கியுள்ளனர்.

மாஸ்கோ இரண சிகிச்சைக் கருவி ஆராய்ச்சிக் கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த சாதனத்தின் மூலம், நல்ல நிலையிலுள்ள இருதயத்தின் பையோகரண்டுகள், பலவீனமான இருதயத்திற்கு மாற்றப்படுகின்றன. இந்த பெயோகரண்டுகள் இருதயத்தில் உற்பத்தியாகின்றன. இவற்றைப் பதிவு செய்து, மின்சாரக் கம்பிகள் மூலம் வேறொரு இருதயத்திற்குச் செலுத்த முடியும். இவ்வாறு ஆரோக்கியமான நிலையிலுள்ள இருதயக் கரண்டின் செல்வாக்கின் கீழ் நோயுற்றுள்ள இருதயம் தெம்பு பெறச் சீராக இயங்கத் தொடங்குகிறது.

இந்தப் புதிய சாதனம் முற்றிலும் பரிசோதித்துப் [illegible] சோவியத் மருத்துவ மனைகளில் புகுத்தப்படும்.


# "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற தொய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காசநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற தொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,

எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.

என் அன்பு நன்றி.

திரு. S. S. றமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுன்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபீஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி(EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற தொய்வு பூர்ணசுகம்.

வணக்கம்
திரு. அ. ஆனந்தலிங்கம்
ரூப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெள்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு

டாக்டர்.

சுக ஆதார வைத்தியசாலை
MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கண்வன்ட் எதிரில்
கொழும்பு-4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னைக் கண்டு அதிர்ச்சி அடையாதீர்கள். எல்லாம் கலைக்காகத்தான் என்று கன குஷியாகக் கூறுகிறார் புது முகம் ஜெயா. "சிவகாமி" படத்தில் ஜெயாவை இந்தத் தோற்றத்தில் சந்திக்கலாம்.

# மலேயாப் பிரதம மந்திரி தயாரிக்கும் படம்!

## நாட்டுப் பண்பாட்டை விளக்கும்

மலேயாப் பிரதம மந்திரி துங்கு அப்துல் ரஹ்மான் படம் தயாரிக்கிறார். சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அவர் போட்ட திட்டம் இப்போது அமுலாகிறது. படப் பிடிப்பு விரைவில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் சினிமா பற்றி ஆட்சியாளரும் பிற பிரபல பிரமுகர்கள் பலரும் கொண்டிருககும் அபிப்பிராயம் தெரிந்ததே. சினிமா ஆபாசத்தை வளர்க்கிறது; பண்பாட்டைக்கெடுக்கிறது; ஒழுக்கத்தை குலைக்கிறது என்று ஒருசாரார் கூறுகிறார்கள். இன்னொருசாரார் சினிமாவே கூடாது என்றும் அது ஒழிக்கப்பட வேண்டும் என்றும் பிரசாரம் செய்து வருகிறார்கள். பிறிதொருசாரார் சினிமாவில் ஈடுபட்டு நடிப்பவர்களைக் கூத்தாடிகள் என்றும் அந்தத் தொழிலில் இறங்குபவர்களைக் கையாலாகாதவர்கள் என்றும் தூற்றிக்கொண்டிருக்கிறார்கள். இது தமிழ்நாட்டின துர்ப்பாக்கிய நிலை.

இந்த நிலையில் மலேயாப் பிரதமர் எல்லோருக்கும் முன்மாதிரி காட்டுவது போலத் தாமே சினிமாப் படம் தயாரிக்க முன்வந்திருக்கிறார். படத்துக்கான கதை வசனங்களை அவர் எழுதி முடித்துவிட்டார் என்று தெரிய வருகிறது. படத் தயாரிப்பு சம்பந்தமான முக்கிய பொறுப்புகள் அனைத்தையும் அவரே ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

மலேயா நாட்டின் பண்பாடு கலாச்சாரம் ஆகியவற்றை கலப்பற்ற முறையில் தெட்டத் தெளிவாகக் காட்டும் கண்ணாடிபோலத் தமது படம் இருககும் என்று பிரதமர் அறிவித்தார். படப் பிடிப்பு வெகு விரைவில் அரம்பமாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

### இளம்பிள்ளை வாதநோய்க்கு மருந்து

இளம் பிள்ளை வாதத்தைக் குணப்படுத்துவதற்கான புதிய மருந்தொன்றை பல்கேரியாவைச் சேர்ந்த இரு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அந்த மருந்துக்கு "நைவாலின்" என்று பெயர்.

இம்மருந்து "ஸ்னோடிராப்ஸ்" என்றும் செடியின் தண்டு, இலைகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

இம் மருந்து முகத்து நரம்பு முடக்கம், தசை நோய்கள் முதலிய வேறுபல நோய்களையும் குணப்படுத்த உபயோகிக்கலாமாம்!

நாடக விமர்சனம்:

## கலாவதி

கடந்த 19-9-59, மாவிட்டபுரம் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து நடித்த, "கலாவதி" என்னும் நாடகத்துக்கு சென்றிருந்தவர்களுக்கு நல்ல காட்சி அமைப்புகளைக் காணும் வாய்ப்பு கிடைத்தது. நல்ல நடனங்களை பார்க்க முடிந்தது. அத்தோடு சோபிதமான இசை விருந்தையும் அனுபவிக்க முடிந்தது. இவை தவிர, நாடகத்தில் குறிப்பிடத்தக்கது வேறு எதுவும இல்லை.

சோழ மன்னன் மகளை அடைய ஒரு பைத்தியம், ஒரு சூழ்ச்சி, ஒரு வீர இளவரசன் (பெயரளவில்) மூவரும் முயல, வெற்றி வழக்கம் போல் நல்லவனுக்கே. தீயவன் வினை அவனையே சூழ்ந்து கொள்கிறத. இதுதான் கதை.

### நடிப்பு

கதாநாயகன் சூரிய சேகரனாக திரு. எஸ். ஆனந்தக் குமார் நடித்தார். அனுபவமுள்ள நடிகர் திரு. டபிள்யு. ஜி அன்னப்பா, வில்லனாக (விக்கிரமனாக) வந்தார். சோழநாட்டமைச்சராக மண்டலேஸ்வரனும் கலாவதியாக செல்வி. வில்மா மேதரும் மோகினியாக செல்வி. பி. சற்குணதேவியும் குறி சொலபவளாக செல்வி எஸ். மகேஸ்வரியும் நடித்தார்கள் எவருக்குமே குனிந்த தலை நிமிரவில்லை.

பைத்தியமாக நடித்த எஸ். இரத்தினசிங்கம் யாழ்ப்பாணத்தில் உள்ள இன்னொரு நடிகரை நன்றாக அடியொற்றி நடித்தார். சோழ நாட்டு அமைச்சராக நரைத் தாடியுடன் வருபவர் சிறுவன் என்பது குரலில் அப்படியே தெரிகிறது. போதிய பயிற்சி அளித்து இந்தக் குறைப்பாட்டைத் தவிர்த்திருக்கலாம்.

—"சிவன்"



நான் எண்ணினாலும் எண்ணாவிட்டாலும் சோகம் என் முகத்தில் வந்து குந்திக் கொள்கிறது. நான் என்ன செய்யட்டும்? பண்டரிபாயின் கேள்வி இது. "நாலு வேலி நிலம்" படத்தில் நேயர்கள் அவரைக் காணலாம்.

## சென்னைக்கடிதம்

(5-ம் டக்கத் தொடர்ச்சி)

கச் செலவாகிறது இதனால். இப்படிச் செய்வதற்குப் பதிலாக நீங்கள் உங்கள் குறைகளை எழுதிக் கொடுக்கலாம். அதையே நான் பெரிதும் விரும்புகிறேன்"—இப்படி மந்திரி கூறினார்.

### அண்ணாவும் ஆதித்தனாரும்

அறிஞர் அண்ணாவின் பொன் விழா (50 ஆண்டு நிறைவு விழா) கடந்த மாத மத்தியில் சென்னையில் வெகு கோலாகலமாகக் கொண்டாடப் பெற்றது. கழக முன்னணி வீரர்கள் அண்ணாவுக்கு புகழுரை வழங்கினார்கள். அண்ணா எல்லோருக்கும் நன்றி தெரிவித்து தெளிவுரை தந்தார்.

நாம் தமிழர் இயக்கத் தலைவர் சி. பா. ஆதித்தனாரின 55 ஆண்டு நிறைவு விழா கடந்த மாத இறுதியில் சென்னையில் நடைபெற்றது. ஈ. வே. ரா. பெரியார். தமிழ் பேராசிரியர் ம. ராசமாணிக்கனார் முதலானோர் ஆதித்தனாரைப் பாராட்டிப் பேசினார்கள். பாராட்டு விழா... [illegible] ...வழங்கப்பட்டன. பொன்னாடையும் போர்த்தப்பட்டது.

பட விமர்சனம்:

## மின்னல் வீரன்

ஸ்டன்ட் பிரியர்களுக்கு இந்த விமர்சனம் சமர்ப்பணம். ஸ்டண்டுக்காக இந்திப் படங்களுக்கு படையெடுக்கும் ரஸிகப் பெருமக்கள் கிங்ஸ்லியை நம்பிக்கையோடு நாடி ஓடலாம்.

### ரஞ்சன்

மின்னல் வேகத்தில் வாள் வீசப்படுகிறது. இடி இடித்தாற்போன்று வார்த்தைகள் அள்ளி விளாசப்படுகின்றன. எல்லாம் அந்த வீரன் ரஞ்சனின் வேலை. பொருத்தமான பாத்திரம் அவருக்கு. குதிரைச் சவாரி, கத்திச் சண்டை, தீப்பந்தச் சண்டை, கைச் சண்டை, கால்ச்சண்டை இத்தியாதி... இத்தியாதிகளில் ரஞ்சன் முழுமூச்சாக ஈடுபடுகிறார். சோடை போகவில்லை.

### சந்தியா

வீரனுக்கு ஒரு வீராங்கனை வேண்டாமா? வருகிறார் அவரும். சந்தியாவுக்கு இந்தப் பாத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. மோகினியாக வந்து மோகனப் புன்னகை உதிர்த்துக் காதல் செய்கிறார். சாகசச் செயல்களிலும் ஈடுபடுகிறார். பெண்கள் எதைச் செய்தாலும் இலேசில் சலிப்பதில்லையே பலருக்கும்!

### வீரப்பா

சண்டைக் காட்சிகளில் பிரபல வில்லன் வீரப்பாவும் தோன்றுகிறார். அதனால் விறுவிறுப்பு ஏறுகிறது. மெய் சிலிர்ப்பதும் வாய்பிளப்பதும் வகையாக நடக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

### முத்துலட்சுமி காகா

வீரச்சுவையோடு நகைச் சுவையும் கலநது வருகிறது மின்னல் வீரனில். இதற்குப் பொறுப்புள்ளவர்கள் காகா ராதாகிருஷ்ணனும் முத்துலட்சுமியும். முத்துலட்சுமியோடு பொம்மையை நடிக்க வைத்தாலும்கூட நகைச் சுவை ஊற்றெடுத்து வரும் என்பது இதுவரை முத்துலட்சுமி நடித்த படங்களைப் பார்த்தவர்கள் தெரிந்து கொண்டுள்ள உண்மை அல்லவா! காகாவோடு சேர்ந்து அவர் லேகிய ஹாஸ்யம் அளிக்கிறார். ஜாலியாகப் பார்த்து ரஸிக்கலாம்.

### சாயி சுப்புலட்சுமி

இவை தவிர சாயி சுப்புலட்சுமியின் நடனம், ரம்மியமான இயற்கைக் காட்சிகள், விலங்கினங்கள், பறவைகளின் சுயமான நடிப்பு எல்லாம் இருக்கின்றன. கதை மன்னனாட்சியைத் தொலைத்து மக்களாட்சிக்கு வழி செய்யும் பாங்கில் அமைக்கப்பட்டிருக்கிறது. கதையை மேற்படி நல்ல அம்சங்களும் சண்டை, சாகசங்களும் மூழ்கடிக்கின்றன. இவற்றிற்காகப் பார்க்க வேண்டிய படம் மின்னல் வீரன்.




இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




- ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிழைப்பைப் பார்த்துக்கொள்வோம்" என்று அந்தப்பெருந்தகைகள் விடையிறுத்தார்களாம்.

## வாழத் தகுதியற்ற இனம்

இத்தகையவர்களை ஒவ்வொரு அரசாங்க அலுவலகத்திலும் காணலாம். வயிற்றுப் பிழைப்புக்காக மானமிழந்து மதிப்பிழந்து வாழும் இவர்களை நோக்கித்தான் வள்ளுவர்—

"மருந்தோ மற்றூன் ஓம்பும் வாழ்க்கை
பெருந்தகைமை பீடழிய வந்தவிடத்து"

என்று வினவுகிறுர்.

இத்தகையவர்களைக் கொண்ட இனம்—இத்தகையவர்களை மதிக்கும் இனம்—இவ்வுலகில் வாழத் தகுதியற்றதே. எனவே, இவர்களை நல்வழிக்குக் கொணடு வருதல் தமிழினத்தின் உயர்வைக் கருதி உழைப்போர் தம் கடனுகும். தமிழியக்க வாரத்துக்கு முன் பதினுயிரம் தொண்டர்களாகுதல் தமிழியக்கத்தில் சேர்தல் வேண்டும். கல்லூரிகள், பாடசாலைகள் முதலியவற்றில் கற்கும் மாணவர்களும் இந்த இயக்கத்தில் சேர்ந்து தமிழியக்க வாரத்தைத் தமிழ்க் கல்வி நிலையங்கள் யாவற்றிலும் கொண்டாடல் வேண்டும்.

### தொண்டர்களாகச் சேருங்கள்

தமிழியக்கத் தொண்டர்களாகச்சேருபவர்கள் எவ்வித சிரமமுமின்றித் தொண்டாற்றலாம். நாளொன்றுக்குத் தமிழ்த் தாய்க்குப் பத்து நிமிடத்தை அளியுங்கள். இந்தச் சிறு தியாகத்தைத் தமிழ்த் தாய்க்குச் செய்ய முடியாதவர்கள் தமிழ் ஆர்வம் உடையவர்களாக இருக்க முடியுமா? எனவே, இதனை வாசிக்கும் தமிழன்பர்கள் யாவரையும் உடனே தமிழியக்கத் தொண்டர்களாகச் சேருவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் பெயர், முகவரி, வயது, தொழில் முதலிய விபரங்களை எழுதிக் கையெழுத்திட்டு, "தமிழியக்கம், மே/பா. சுதந்திரன், த.பெ. 1183, கொழும்பு" எனும் முகவரிக்கு அனுப்புவதே.

### தமிழியக்கத் தொண்டர்கள்

தமிழியக்கத் தொண்டர்கள் 60 பேரின் பெயர்கள் ஏற்கனவே வெளியிடப்பெற்றன. இங்கு இன்னும் 19 பேரின் பெயர்கள் தரப்படுகின்றன

61. ச. செ. கந்தசாமி, கொழும்பு7. 62. த. தனஞ்செயன், வேலணை 63. ஆர். குமாரசுவாமி, கிரிலப்பனை. 64 ஆ. நடராசா, வதுளை. 65. இ. ப. றமாலியா, கண்டி. 66. பா நடராசா, வதுளை. 67. ஆ வல்லிபுரம், தாணியகலை. 68. க. தியாகராசா, களுவாஞ்சிக்குடி. 69. போ. செல்வரத்தினம், மீசாலை. 70. சோ. செல்வரத்தினம், மீசாலை.

71. ந. சிங்காரவேல், டிக்கோயா. 72. ந சிவபாதம், அச்சுவேலி. 73. மு. சி. க. வேலாயுதம், இலத்பந்துறை. 74. மு. தே. ஞானசைநாயகம், மானிப்பாய். 75. க. ஆனந்தக்குமாரசாமி, கரவட்டி. 76. எம். எற்வேட், கண்டி. 77. பி. யோ. மரியதாஸ், ஊர்காவற்றுறை. 78. க. சிவனடியான், தரணியகலை. 79. ம. ஜீவரத்தினம், கொழும்பு10.

# நேயர்கள் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மூச்சுக்கூடத் தமிழ் மூச்சாகவே இருந்திருக்கும்.

சென்ற வாரச் சுதந்திரனில் திரு வன்னியசிங்கத்தைப்பற்றிய விஷயங்களை மிக உருக்கமாய் வெளியிட்டமைக்கு தமிழ் மக்களின் நன்றி.

—அ. பஞ்சாட்சரம், ஆசிரியர் உரும்பிராய்.

## சிலை எழுப்புவோம்

எம் மாபெரும் தலைவரான வன்னியசிங்கத்தின் மறைவு தமிழருக்கு மாத்திரமின்றி, தமிழர் வருங்காலச் சந்ததியினருக்குமே மாபெரும் நஷ்டம். தமிழராகிய நாம் நந்தலைவருக்கு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும். உயிருடன் இருக்கும் ஒரு தலைவருக்கு சிலைவடிக்க நினைத்த சிலர், ஏன் மறைந்துவிட்ட மாபெரும் தலைவர் மாணிக்கத்திற்குச் சிலைவடிக்கக் கூடாது?

—த. சுப்பிரமணியம், திருமலை.

## வருந்துகிறேம்

ஈழத்துத் தமிழ் மக்களுடைய உரிமைக்காகவும் தமிழ் மொழியின் நலனுக்காகவும் வாழ்நாளின் பெரும் பகுதியைத் தியாகம் செய்தவரும் தமிழ்த் தலைவர்களில் ஒருவருமான திரு கு. வன்னியசிங்கம் இயற்கை எய்தியதனுல் நாம் ஆற்ெருணுத் துயரம் அடைகின்றேம். அவர்தம் பிரிவினுல் துயரக் கடலில் மூழ்கியிருக்கும் அவர்தம் மனைவி மக்கட்கும் சுற்றத்தார்க்கும் இலங்கைவாழ் தமிழ் மக்கட்கும் எமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

—கா. கந்தையா (செயலாளர்)

ஈழநாட்டு மாணவர் மன்றம், அண்ணுமலை பல்கலைக் கழகம், தமிழ்நாடு.

# சிறுபான்மைத் தமிழர்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்றித் தர வேண்டும் என்று கேட்டோம். ஒவ்வொரு வருடமும் கேட்டுக் கொண்டே வந்தோம். தோல்வியே கண்டோம். மகாசபை நிறுவியதன் பின்னரும் ஒவ்வொரு வருடமும் தீர்மானங்கள் நிறைவேற்றி கேட்டுக்கொண்டே வந்தோம். தோல்வியே கண்டோம். 1957ம் ஆண்டும் இதே தீர்மானத்தை நிறைவேற்றி ஒரு மகஜரும் தயாரித்து மகாசபையின் பிரதிநிதிகளாக திருவாளர்கள் ஜே. டி. ஆசீர்வாதம், ஜி. நல்லையா ஆகியவர்களை கல்வி மந்திரியாரைச் சந்திக்க அனுப்பியிருந்தோம். அப்போது கல்வி மந்திரி திரு தஹநாயகா தந்த பதில் இதுதான்: "எங்கள் அரசாங்கம் இலங்கையிலுள்ள எவருக்கும் எந்த விஷயத்திலும் விசேஷ சலுகை அளிக்காது"

## இதுதான் சேவை

வந்தது வகுப்புக் கலகம். சிறுபான்மைத் தமிழர்களுக்குச் சலுகை கொடுக்க முன் வந்தது அரசாங்கம். காக்கை வன்னியர்களைக் கண்டுபிடித்தார் கல்வி மந்திரி. முதலில் மறுத்ததைப் பின்னர் மந்திரி கொடுத்தது அதிசயமல்ல. ஏழை மாணவர்களுக்கு இது இலகுவாகக் கிடைத்ததோ என்றல் அதுவும் இல்லை. ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் 200 ரூபாமுதல் 500 ரூபாவரையில் மகாசபையின் சார்பில் சிலர் பெற்றுக் கொண்டதாகக் கதை அடிபடுகிறது. எப்படிச் சேவை?

இந்த மாபெரும் தலைவர்களுக்குப் பின்னணியாக ஒரு வாலிப முன்னணியும்தோன்றியிருக்கிறது. சில ஆசிரியர்கள் சேர்ந்துஒருநாள் வாலிப முன்னணியாரின பட்டியல் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தார்கள். "இவர்கள் என்ன படித்தவர்கள்?" என்று ஒருவர் கேட்டார். "தொகை தொகையாகப் பேசும் படம் படித்தவர்கள்" என்றுர் வேறொருவர். யாவரும் வயிறு வெடிக்கச் சிரித்தார்கள்.

—ஆ. ம. செல்வத்துரை ஆசிரியர், வதிரி.


5 திரைகளில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சென்ட்ரல் (மருதானை) | ஓடியன் (கல்கிஸை) | ராணி (யாழ்ப்பாணம்)

லிபர்ட்டி (பதுளை) | ஜோதி (திருகோணமலை)

ஏ. நாகேஸ்வரராவ்-ஜமுனு-எம். என். நம்பியார்-ராஜசுலோசனு-கே. சாரங்கபாணி
எஸ். வி. ரங்கராவ்-ஏ. கருணுநிதி-டி. பி. முத்துலட்சுமி.
நடித்த



வாழ்க்கை ஒப்பந்தம்



குடும்ப வாழ்க்கையைச் சித்தரிக்கும் சிறந்த படம்

சங்கீதம்: கண்டசாலா
டைரக்ஷன்: கே. வி. ரெட்டி



7-வது வெற்றி வாரம்!

எல்பின்ஸ்டன்

அதிக பணச் செலவில் தயாரிக்கப்பட்ட
மிகச் சிறந்த முழு நீள டெக்னி கலர் படம்

வீரபாண்டிய கட்டபொம்மன்

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், பத்மினி, ராகினி
நடித்தது

அக்டோபர் 8-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மாதர் காட்சி காண்பிக்கப்படும்



கெயிட்டி (கொட்டாஞ்சேனை)
3-வது வாரம்!
தினசரி பி. ப. 2, மாலை 6, இரவு 9-30 க்கும்
பாலாஜி, பண்டரிபாய், தங்கவேலு, விஜயகுமாரி
நடித்த
மனைவியே மனிதனின் மாணிக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பச்சைக் கள்ளன்

ஐயோ! வள்ளுவா! நீ செய்த வேலை உனக்கே அடுக்காதே! நீ எனக்குச் செய்த தீமை கொஞ்சமல்லவே? பெருந்தீமை செய்து விட்டாய்! குறள் என்னுங் கருவி கொண்டு உள்ளம் என்ற எனது ஒரே பொருளைத் திருடி விட்டாய்! இன்னும் எத்தனை பேரின் உள்ளப் பொருட்களைக் குறட் கருவியாற் திருடினுயோ? யார் அறிவார்? நீ எனக்குச் செய்த வேலை சரியா? நீதியானதா? நியாயமுள்ளதா? நேர்மை நிறைந்ததா? நீ சரியான கள்ளன்! பச்சைக் கள்ளன்! முழுத்திருடன்! உன் போன்ற கொடிய திருடன் உலகில் எவனுமில்லை. எல்லோரும் உன்னை மிகவும் நல்லவன்-உத்தமன் என்கின்றுர்கள் ஆனுல் நீ பெரிய கள்ளன்-சரியான திருட்டு வேலை செய்த கொடியோன் என்று ஆயிரம் தடவை வேண்டுமாயினும் சொல்வேன். எவர் முன்னிலையில் வேண்டுமாயினும் அஞ்சாமற் சொல்வேன். அவர்கள் என்னை யாது செய்யினும் செய்யட்டும்? ஏன் என்றுல் நீ எனக்குச் செய்த வேலை அப்படியானதாய் இருக்கிறதே!

நான் உனக்கு என்ன தீமை செய்தேன்? உனது குறளை என்றோ ஓர் நாள் மனதினுற் தொட்டுப் பார்த்தேன். இவ்வளவுதானே யான் செய்தது? உன் குறள் என்ற கருவியில் பத்துப் பத்தாய் ஆயிரத்து முன்னூற்று முப்பது கொழுக்கிகள் இருக்கிறதென்றும் அவை என் உள்ளத்தைக் கொழுவி இழுத்து விடுமென்றும் எனக்கு முன்னமே தெரியாமற் போயிற்றே! தெரிந்திருந்தால் உனது குறளைக் கண்ணுற் கூடப் பார்த்திருக்க மாட்டேனே? உனது குறளை பார்த்ததால் பெரிய தீங்கில் அகப்பட்டுக் கொண்டேனே? உன் குறட் கருவியை நீ ஏன் செய்தாய்? இப்போது உள்ளம் உன்னிடம் இருக்கிறது உடல் மட்டுந்தானே என்னிடம் இருக்கிறது! என்நேரமும் உன்னைத்தானே எண்ண வேண்டியுள்ளது. உன்னை மறந்து ஓர் கணமும் இருக்க முடியவில்லையே? எங்கு போகையிலும் யாது செய்கையிலும் உன் நினைவு தானே வருகிறது?

என் உள்ளத்தைத் திருடிய குறள் என்ற உனது கருவியைச் சாகும் வரையும் என்னுல் மறக்க முடியாது போலிருக்கிறதே. வாயைத் திறந்தால் குறள் ஒலிதான் வெளி வருகின்றது! காதுகளில் குறளோசைதான் எப்போதும் கேட்பது போலிருக்கின்றது! நான் காணும் கனவு கூட உன் குறள பற்றியதாய்த் தான் இருக்கின்றது! அட வள்ளுவனே! ஏன் என்னை இப்பாடு படுத்துகின்ருய்? தயவு செய்து என் உள்ளத்தைத்தா! நான் என்ன பாடு படுகிறேன் பார்! உனக்கு இரக்கமில்லையா? நீ எங்கே ஒளித்திருக்கிருய்? உன் திருட்டாய் இருக்கிறதே! சரி சரி. வள்ளுவனே! என்னுல் தாங்க முடியவில்லை. என் உள்ளத்தைக் கொடு. இல்லையேல் உன் கள்ளத்தனத்தை உலகறியச் செய்வேன்! கவனம்!

—"தாமரைத் திவான்"
மலைவீடு.

# ஞான சாதனம்

கல்வி என்பது மானிலத்திலே உயரிய வாழ்க்கை வாழ்வதற்கான உண்மையான நெறிகளை மனிதனுக்கு உணர்த்தும் சாதனமாகும். இம்மானிலத்தின் கண்ணே மனிதப் பிறவியெடுத்த அனைவரும் அவசியம் பெற்றுக்கொள்ள வேண்டிய பெரும்பேறுகளிற் கல்வியும் ஒன்றுகும்.

சூரியன் எப்படி இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கின்றுனே, அதே போல் கல்வியும் ஒருவனிடத்திலுள்ள அஞ்ஞான இருளை நீக்கி மெஞ்ஞான அறிவைப் பிரகாசிக்கச் செய்யும் ஒரு ஞான சாதனமாகும். கல்வியின் பெருமை,

"கல்வியே யன்னை போற்
காக்கும்
பிதாப் போல் நல்வழியே
செலுத்தும்
நாயகி போல்—அல்லறமிக்க
சுகம் கொடுக்கும்
வேண்டும் பொருள்
கொடுக்கும் தக்க புகழ்
கொடுக்குந்தான்."

என்னும் செய்யுளால் எளிதில் விளங்குகின்றது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமோ என்ற முதுமொழிக் கிணங்க நாம் சிறுவர்களாய் இருக்கும் போதே கல்வி கற்க வேண்டும். இதைத் தெளிவு படுத்தவே "இளமையிற் கல்" என்று ஒளவையார் கூறிப் போந்தார். கற்பதைத் தெளிவாக விளங்கக் கற்க வேண்டுமென்பதை மானிலத்திற்கு உணர்த்தும் பொருட்டே,

"கற்க கசடறக் கற்பவை
கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று குறளைப் பொய்யாமொழியார் அருளிச் செய்திருக்கிருர். இதன் பொருள் யாதெனில் கற்பவற்றைத் தெளிவாகக் கற்க வேண்டும். அத்துடன் நில்லாது கற்றவற்றின் படி ஒழுகி அதன் படி நடத்தல் வேண்டுமென்பதே. ஆதலால் கற்றவர் நல்லொழுக்கமும் கடவுள் பக்தியுமுடையோராய் இருத்தல் வேண்டும். இன்றேல் கல்விப் பயன் எய்திய வராகார்.

"பற்பல நூல் கற்றுணர்ந்த
பண்டிதனேயானுலும்
நற்குணங்கள் எள்ளளவும்
நண்ணுத—துர்க்குணனை
முற்ற வெறுக்க முடிமேல்
மணியிருந்தென்
புற்றரவைக் கூடார் புகுந்து"

என்றவாறு நற்குணம் எய்தப் பெருத கற்ருேர், மற்ருேரால் வெறுக்கப்படுவர். கல்வி கற்பது ஒரு இன்பம் என்று திருவள்ளுவ நாயனுர் கீழ் வரும் குறளால் விளக்குகின்ருர்.

"செவிக் குணவில்லாத
போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்"

இதன் பொருள் யாதெனில் செவிக்குக் கேள்வியாகிய உணவு இல்லாத போது அதற்குத் துணையாக உடலை உய்விக்குமாறு வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.

கற்றவன் மன்னனிலும் பார்க்க சிறப்புடையவன்.

மன்னனுக்குத் தன் தேசத்தில் மாத்திரம் சிறப்பு. ஆனுல் கற்ருேனுக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு. இதனுல் கற்றவன் எல்லோராலும் மதிக்கப்படுகிருன். வள்ளுவர் கற்றவருயர்வையும், கல்லாதவரிழிவையும் கீழ் வரும் குறளால் விளக்குகின்ருர்.

"விலங்கொடு மக்களனையர்
இலங்கு நூல்
கற்ருரோ டேனையவர்".

அதாவது அறிவு விளங்குவதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடு, கல்லாதவர் மக்களோடு விலங்குகளுக்கு உள்ள அவ்வளவு வேற்றுமை உடையவர்.

ஞாலத்திலுள்ள ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் பிழையில்லாமல் வாசிக்க, எழுதத் தெரிந்தால் அது அவர்களுக்குப் பல துறைகளில் உறுதுணை புரியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இப்படி இவ்வளவு துறைகளில் கல்வி எங்களுக்கு அவசியமாதலின் மக்களாகிய நாம் கல்வி கற்பதுடன் நின்றுவிடாமல், கல்வியறிவு இல்லாதவர்க்கு எங்களால் முடியுமளவிற்கு கல்வியைப் புகட்டி அதன் படி நடப்பதுடன், கற்பதில் ஆவலுள்ளவர்களாகவும் அவர்களை ஆக்கல் வேண்டும்.

—து. விஜயரத்தினம்

## விளக்கு அணைந்தது!

ஆமாம்! வீட்டை அலங்கரித்த விளக்கு அணைந்து விட்டது. எதிரிகளும் கண்டு பொருமைப் பட்ட பொன்விளக்குக் காலனுல் களவாடப் பட்டு விட்டது. அழகு மாளிகையாக விளங்கி-அகில உலகத்தின் கவனத்தையும் கவர்ந்த 'தமிழரசு' மாளிகை இருளடைந்துவிட்டது. அதை நம்பி வாழ்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் பதை பதைக்கிருர்கள் எதிரிகள் என்ன செய்வார்களோ? என்று எல்லாமிழந்து அதை ஒன்றையே-குடும்பத்தின் சொத்தாக வைத்திருந்த தமிழ் மக்கள் கண்ணீர் சிந்திக் கதறியழுகிருர்கள்.

ஆனுல்; அதைக் கவர்ந்த கள்வனுக்கோ? மனம் சற்றும் இளகவில்லை. மாளிகையின் அழகை அதன் கவர்ச்சியைக் கண்டாவது காலன் அதைக் களவாடாமல் விட்டிருக்கலாம்! ஆனுல்; அவனே? ஆயிரமாயிரம் மக்களின் கண்ணீரில் களிப்பெய்துபவனுச்சே? மக்களின் அழு குரல் அவனுக்கு மங்கையரின் அழு குரலன்ருே?

இருந்து மென்ன? எமது மாளிகை இருளடைந்து விட்டதே? தூண்டா விளக்காக-சுடர் விட்டுப் பிரகாசித்த, மாபெரும் விளக்கு அணைந்து விட்டதே?—மறைந்து விட்டதே?

அந்த விளக்கைப் பெறுவதற்கு நாம் எத்தவம் செய்ய வேண்டுமோ? ஆயிரம் பேர் அல்லும்-பகலும் போன்ற ஒரு விளக்கை!

அய்யகோ! ஆபத்தில் மாட்டிவிட்ட எமக்கு ஆறுதல் அளிக்க யாரிருக்கிருர்கள் அணைந்த விளக்கைப் போல் இன்னுமொரு விளக்கை நாம் எங்கு சென்று பெறுவோம்!

அய்யோ! மாளிகையின் மகிமையை உலகறியச் செய்து-மக்களையும் காப்பாற்றிய மணி விளக்கு மறைந்துவிட்டதே? எம்மைத் தேற்றுவார் யார்? ஆற்றுவார் யார்? அய்யகோ!......

—எஸ். சோமசுந்தரம்.
கொம்மாதுறை.

## அழகிரி இரவுப் பள்ளி ஆண்டு விழா

கொழும்பு அழகிரி நினைவுப் பள்ளியின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா 11-9-59ல் மாலை 6-30 மணிக்கு "அறிவக"த்தில் பள்ளியின் தலைமைப் பொறுப்பாளர் திரு சா. மு. முகைதீன் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது பள்ளி ஆசிரியர்கள் திரு கீ. மு. நலம் விரும்பி, எம். சம்சுதீன், திரு இ. சுப்பிரமணியம், ம. பொ. சி. மன்றத்தைச் சார்ந்த திரு த. மணி, திரு செ. முத்தரசு ஆகியோரும் சொற்பொழிவாற்றினுர்கள். பள்ளி மாணவ மாணவிகளான முகைதீன் பீவி, அம்சதுல் இனுயா, சண்முகம், நிசாம்தீன் ஆகியோரின் இன்னிசை விருந்தும் நடைபெற்றது. விழா இறுதியில் சிற்றுண்டியும் சுவைநீரும் வழங்கப்பட்டன.

## வளர்மதி புதிய மருமக்கள்

2564 இ. ஆறுமுகம், அனுராதபுரம்.
2565 எம். ஆர். எம். பவ்ஸி (ஸிபா) தர்கா நகர்.
2566 வ. காசுபதி, இறக்காமம்.
2567 த. ம. தேவேந்திரன, குண்டசாலை.
2568 செல்வி. பொ. திலகரெத்தினம், சாம்பற்றீவு.
2569 செல்வி. பொ. பேபி சரோசா, முல்லைத்தீவு.
2570 சி ம. அந்தோனிப்பிள்ளை, முள்ளியவளை.
2571 எம். சுப்பிரமணியம், மத்துகாமம்.
2572 ம. பழனியப்பன் மத்துகாமம்.
2573 கணபதிப்பிள்ளை தேவராசா, உடுப்பிட்டி.
2574 பொ. செல்வரத்தினம், மிருசுவில்.
2575 மு. சிரிதரன், கைதடி.
2576 க. குலசிந்தாமணி, மண்டைத்தீவு கிழக்கு.
2577 மு. சிதம்பரநாதன், செம்பியன்பற்று.
2578 செல்வி. சுகுணவதி குருநாதபிள்ளை, திருகோணமலை.
2579 எஸ். பண்டாரம், கேகாலை.
2580 இரா. சந்திரசேகரன், பலாங்கொடை.
2581 செபஸ்தியான் பீரிஸ், மாத்தளை.
2582 வே. ஹரிதாஸ் செங்கலடி.
2583 குமாயூ கபீர் மூசா.
2584 வே. இரத்தினராசா, முள்ளியவளை.
2585 எம். எச். சம்ஸ், திக்குவலை.
2586 ஜி. ஜோன் சன்டிலக், அவிசாவெல்ல.
2587 ம. சுவாமிநாதன், டிக்கோயா.
2588 வ. தினகரன் ராஜாராம், பருத்தித்துறை.
2589 அ. பஞ்சாட்சரம், கிளிநொச்சி.
2590 ம. ம. பொன்னுசாமி, ஆல்கரனோயா.
2591 செ. கிருபைநாதன், செம்பியன்பற்று.
2592 மா. ஆறுமுகம், கலஹா.
2593 சினித்தம்பி தருமலிங்கம், மட்டக்களப்பு.
2594 என். எம். பாருக், தந்துறை.
2595 டப்ளியு. அஞ்சலோன், நரக்களி.
2596 எஸ். துரைராஜா, வவனியா.

## ஓதுவதொழியேல்

அறிவுதரும் நூல்கள் வாசிப்பதை இறக்கும் பரியந்தம் நீ கைவிடாதே என்பது இதற்குப் பொருள்.

வெறும் (பாடப்) புத்தகப் படிப்பு மட்டும் ஒருவனுக்குப் போதாது. உலக நடையறிந்து, பிறர் மதிக்கும் படியான சிறந்த வாழ்க்கை நடத்த விரும்பும் ஒருவன் அறிவு தரும் நூல்கள் பல வாசிக்க வேண்டும்—அதன் படி நடக்கவும் வேண்டும்.

பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் கிடைக்காத அறிவும் அனுபவங்களும் பிற நூல்கள் மூலம் கிடைக்கின்றன. மக்களின் வாழ்வையே மாற்றியமைக்கும் சக்தியுள்ள அருமையான நூல்கள் பல உண்டு. அவைகளை நாம் தேடித் தேடி வாசிக்க வேண்டும்.

ஓதி உணர்ந்த ஒருவன் கவலைகளாலும் கஷ்டங்களாலும் கலங்கமாட்டான். அவன் கற்றுணர்ந்த நூல்களே அவனுக்கு வழிகாட்டிகளாகப் பயன்படும்.

திரும்பத் திரும்ப ஓதும் போது எம்மை இறைவன் பால் இழுத்துச் சென்று முடிவிலா இன்பந்தரும் (வேதிய) நூல்களை வாசிப்பதை விட எமக்கு வேறு என்ன வேண்டிக் கிடக்கின்றது?

"விலங்கொடு மக்கள்
அனையர் இலங்குநூல்"
கற்ருரோடு, ஏனையவர்"

—ஏ. ஜீ. ஆனந்தம்.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

இல. 1.

பெயர்.....................................................

பாடசாலை.................................................

விலாசம்...................................................

..............................................

.................................. ..................................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் | கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## பாரதி விழா

கொழும்பு தெமட்டக் கொடை அரசினர் தமிழ்க் கலவன் சிரேஷ்ட பாடசாலை இலக்கிய மன்றத்தினரால் கடந்த 11-9-59ல் மேற்படி பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு செ. சிவலிங்கம் தலைமையின்கீழ் மகாகவி பாரதியாரின் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பாரதி விழாவைக் கொண்டாட வேண்டிய அவசியத்தை தலைவர் தமதுமுன்னுரையில் தெளிவாக விளக்கினார்.

அரசகரும மொழித் திணைக்கள வெளியீட்டு ஆசிரியர் திரு இ. இரத்தினம் பி. ஏ.யின் பேச்சில் பாரதியாரின் வாழ்க்கை, தேசத் தொண்டு, கவிதைகள் என்ற மூன்று பிரிவுகளும் அடங்கியிருந்தன. "பாரதியார், சிந்தனை, செயல் என்ற இரண்டுடனும் நின்ற பாரத நாட்டு மக்களுக்கு உணர்ச்சியையும் ஊட்டி சோர்வற்ற தீவிர வாதியாக—அஞ்சாமையின் சிகரமாக—திகழ்ந்தார்" என்றும், "அவரை நினைவுகூர்ந்து அவர் நாளைக் கொண்டாடி அவர் கூறியவற்றைக் கடைபிடிப்பதால் நமது வாழ்வும் ஓரளவாவது அவர் வாழ்வு போல் அமையக்கூடும்" என்றும் குறிப்பிட்டார்.

"தெளிவுற உணர்தல், தெளிவுற உரைத்தல், தெளிவுறச் செய்தல் என்ற பாரதியாரின் நோக்கத்தை அவருடைய கவிதைகள் அப்படியே எடுத்துக்காட்டுகின்றன" என்று மேற்படி பாடசாலை ஆசிரியர் திரு அகஸ்தின் தமது பேச்சின்போது கூறினார்.

பாரதி விழாக் கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற செல்வி செ. மரியசந்தனம், செல்வன் கா. நீலகண்டன், செல்வி இ. சீதாலட்சுமி எனும் மாணவர்களுக்குத் தலைவர் பரிசில்களை வழங்கினார். கூட்ட ஆரம்பத்தில் செல்விகள் இ. சீதாலெட்சுமி, கிறேஸ் செல்வரத்தினம், சிவனம்மா எனும் மாணவிகள் தமிழ்த் தாய் வணக்கமும், இடையில் செல்விகள் பெ. பஞ்சவர்ணம், செ. அமராவதி, அ. நாராயணி எனும் மாணவிகள் பாரதி பாடல்களும் பாடினர். இறுதியில் இக்கிய மன்றப் பொறுப்பாளர்கள் சார்பில் ஆசிரியர் திரு வ. நடராசா நன்றிகூறினார்.

## இளங்கோ படிப்பகம்

தமிழ்த் தந்தை மறைமலையடிகளினதும் மக்கள் கவி பாரதியினதும் நினைவு நாள் 20-9-59ல் இளங்கோ படிப்பகப் பணிமனையில் தலைவர் திரு கா. மெய்யப்பன் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் மறைந்த கோப்பாய் பாராளுமன்றப் பிரதிநிதி திரு கு. வன்னியசிங்கத்தின் மறைவு குறித்து இரண்டு நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப் பட்டது. அதன்பின் செயலாளர் வரவேற்புரை நிகழ்த்தினார். படிப்பக உறுப்பினர்களான அ. தாழைபாண்டியன், சின்னப்பெருமாள், உ. சுப்பையா, அ லாறன்சு ஆகியோர் உரைநிகழ்த்தினர். ஏனைய பிறமன்றத் தோழர்களும் கலந்துகொண்டனர்.

## பசறையில் பாரதியார் விழா

பசறை அரசினர் மத்திய கல்லூரி தமிழ் மாணவர்களால் 11-9-59ல் பாரதி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழா முற்சமய சங்கத் தலைவர் செல்வன் கே. தருமலிங்கம், தலைமையில் இனிது நடைபெற்றது.

பாரதியார் படத்தைத் திரு செ. இராஜசௌந்தரம் ஆசிரியரவர்கள் பாரதியாரின் வரலாற்றையும் அவர் செய்த தொண்டையும்பேசி அவரது பாடல்களையும் பாடினார்கள். அதன்பின் ஆசிரியர்கள் திரு எஸ். சின்னத்தம்பி, திரு ஐ. சாரங்கபாணி ஆகியோர் பாரதியாரின் சிறப்பை எடுத்துக்கூறினார்கள். பின்பு செயலாளர்செல்வன் எஸ். தியாகராஜ் நன்றியுரை கூறினார்.

## அறிஞர் அண்ணாவின் பொன் விழா

"எண்ணத்தில், எழுத்தில், பேச்சில், பாட்டில், திரைப் படத்தில் புதுத் திருப்பம் ஒன்றை ஏற்படுத்திய பெருமை அறிஞர் அண்ணாவுக்கே உரியது என்பதை இன்று மாற்றுக் கட்சியினரும், மாறுபட்ட கொள்கையினரும்கூட ஒப்புக்கொள்ளுகின்றார்கள். அண்ணாவின் அறிவுத் திறனுக்கு எவரும் தலைசாய்த்து மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்"

இவ்வாறு 16-9-59ல் யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவிலுள்ள இயக்கப் பணிமனையில், அகில இலங்கை பகுத்தறிவு இயக்க யாழ்ப்பாணக் கிளையின் சார்பில் கொண்டாடப் பட்ட அறிஞர் அண்ணாவின் பொன் விழாவுக்குத் தலைமைவகித்த திரு ந. பொ. இராசதுரை பேசுகையில் கூறினார்.

'தமிழினத்தின் முன்னேற்றத்துக்காகவும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், தனது வாழ்நாள் முழுவதையும் செலவிட்டதல்லாமல் வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி காண—விசையொடிந்த தேகத்தில் வண்மை காண—சூழ்ச்சிதனை, வஞ்சகத்தைத் துரோகம் தன்னைத் தொகையாக நேர் நிறுத்தித் துகளதாக்கும் காழ்ச்சிந்தை மறச் செயல்களை வளர்க்க, அல்லும் பகலும் அனவரதமும் ஆக ஐம்பதாண்டு காலத்தைத் தியாகம் செய்த பகுத்தறிவுச் செம்மல், அறிஞர் அண்ணா அவர்கள் ஐம்பத்தோராவது ஆண்டுப் பாதையில் எடுத்தடி வைக்கும் இந்தப் பொன்னுளை அகில இலங்கை பகுத்தறிவு இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளை பெருமையுடனும் பெருமிதத்துடனும் போற்றுவதோடமையாது, அறிஞர் அண்ணா நீடு வாழ்ந்து செந்தமிழும், செழுந்தமிழினமும் வளரவும், பகுத்தறிவு பரவவும் தொண்டாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியதோடு, இத்தீர்மானத்தின் பிரதி ஒன்றினை அறிஞர் அண்ணாவுக்கு அனுப்பி வைக்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப் பட்டது.

திரு ப. க. பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திருவாளர்கள்: செழியன், கனக எழிலன், ம. கனகசபை, முகிலன், செ.கோடீஸ்வரன், த. வேலழகன் முதலியவர்கள் அறிஞர் அண்ணா அவர்களைப்பற்றி உரை நிகழ்த்தினர்கள்.

## ஆசிரியரின் வெள்ளி விழா

நரக்களி ரோமன் கத்தோலிக்க சிரேஷ்ட தமிழ்ப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ம. தராசியுஸ் லெம்பட்டின் 25-வது ஆண்டு ஆசிரிய சேவைப் பூர்த்தியை முன்னிட்டு, அவரது சேவை நலன்களைப் பாராட்டும் முகமாக கடந்த 15-9-59 செவ்வாய்க் கிழமை பாடசாலைகளின் பகுதி முகாமைக்காரர் வண. பிதா. நீக்கிலாஸ் (ஓ எம் ஐ.) தலைமையில் வெள்ளி விழா உற்சவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

மாணவர் வாழ்த்துக் கீதங்கள் பாடினர். தொடர்ந்து உபசாரப் பத்திரமொன்று வாசித்து ஒப்படைக்கப் பட்டதுடன், விலை மதிப்புள்ள உபசாரப் பொருளொன்றும் வழங்கப்பட்டது. பின் வண. பிதா. நீக்குலாசும், ஆசிரியர் திரு. வீ. பிள்ளையவர்களும் ஆசிரியர் திரு. லெம்பட்டின் குண நலன்களையும் சேவைத் திறன்களையும் வியந்து பாராட்டி சொற்பொழிவுகளாற்றினர்.

## அருள் நெறி விழா

"தமிழருடைய மறை திருமுறையேயாகும். மொழியுரிமையிழந்து, குடியுரிமை இழந்து இன்னல்படும் தமிழர் நிச்சயம் உரிமை பெற்று வாழ்வர். துன்பம் வந்தபோது கலங்காது இறைவனிடத்தில் நம்பிக்கை வைத்து அயராது போராட வேண்டும். திருமுறைகள் எமக்கு நல்லவழி காட்டும்" என தவத்திரு குன்றக்குடி அடிகளார், சண்டிருப்பாய் இந்துக் கல்லூரியின் மாணவப் பேரவையினுல் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெற்ற அருள் நெறி விழாவில் பேசும் பொழுது குறிப்பிட்டார். திரு. ச. தையல்பாகர் தலைமை வகித்தார். ஆசிரியர் திரு. மு. சிவானந்தம் வரவேற்புரை நல்கினார்.

"குறள் காட்டும் நெறி" பற்றி மார்க்கண்டன் பி. ஏ; பி. எஸ். சி. விளக்கினார். விழாத் தொடக்கத்தில் தமிழ்த் தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் மறைவுக்காக ஒரு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## தொட்வத்தை வாலிபர் முன்னேற்றச் சங்கம்

பாணந்துறை தொட்டவத்தை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் 11-வது மீலாத் சரீப் விழா சென்ற 16-9-59-ல் தொட்டவத்வத பள்ளிவாசல் முற்றவெளியில் வெகு விமரிசையாக நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளும் பேச்சுப் போட்டிகளும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. கூட்டத்துக்கு மௌலவி எஸ். எம் .ஏ. எம். மில் B. A. தலைமைவகித்தார். கூட்ட முடிவில் பாணந்துறை பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனுப் எம். எல் புகாரி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார் இவ்விழாவிலும் போட்டிகளிலும் ஊர்ப் பொது மக்களும், அயலூர் மாணவ மாணவிகளும் திரளாகப் பங்கு பற்றினார்கள்.

## சுன்னுகத்தில் பாரதி விழா

சுன்னுகம் கிழக்கு மறுமலர்ச்சிக் கழக ஆதரவின் கீழ் சென்ற 19-9-59-ல் பாரதி விழா மிக சிறப்பாக நடைபெற்றது. தலைமை வகித்த திரு வே.தம்பு தமது தலைமை உரையில் இத்தகைய விழாக்கள் கொண்டாடுவதன் முக்கியத்துவத்தையும் பாரதியின் லட்சிய வாழ்க்கையைப் பற்றியும் சுருக்கமாக விளக்கினார்.

அவ்வமயம் வித்துவான் எஸ். என். கணேசன் பாரதி கண்ட சமுதாயம் என்பது பற்றியும் எம். சதானந்தன் பாரதியும் சமயமும் என்பது பற்றியும் எம். குமாரவேலு "பாரதி" யார் என்பது பற்றியும் எஸ். குமாரசாமி பாரதி கண்ட பெண்குலம் என்பது பற்றியும் பேசினர்.

## பொருளாதார அபிவிருத்திச் சங்கம்

"நெடுந்தீவு ஒரு காலத்தில் பசுந்தீவு என்ற பெயருடன் மிகவும் செழிப்புற்று இருந்தது. ஆனல் இன்றைய நிலையில் மிகவும் கீழ் நிலையில் அடைந்துள்ளது. எமது மக்களில் பலர் புதுக்குடியேற்ற திட்டப் பகுதிகளில் சென்று ஆங்கு நிரந்தரமாகியதால், பொருள் அபிவிருத்திக்கு ஏற்ற தகமையும், உணர்ச்சியும் உடையவர்கள் சிலரே காணப்படுகின்றனர். கொழும்பைப்போன்ற பிற நாடுகளில் வதியும் நாம் நெடுந்தீவின் பொருளாதார அபிவிருத்திக்கு தகுதியான திட்டங்களை வகுத்து ஆவன செய்தல் வேண்டும்."

இவ்வாறு நெடுந்தீவு பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய சங்கத் தலைவர் திரு கு. குணநாயகம் கூறினார்.

திரு ச. அ. செபரத்தினம் நீண்டதோர் சொற்பெருக்காற்றினர். "வீண் டாம்பீகமான செலவுகளில் உங்கள் பணத்தை கரியாக்காது உங்கள் தாய் நாட்டின் அபிவிருத்திக்காக எவ்வளவு தியாகம் செய்து பணம் சேமிக்க முடியுமோ அவ்வளவு தியாகத்தையும் செய்ய முன்வாருங்கள்" என்று திரு சபாரத்தினம் கூறினார்.

நெடுந்தீவில் உள்ள பனைமரங்களை பாதுகாத்து அபிவிருத்தி செய்தல், பருத்திச் செய்கையைப் பரப்புதல், தானியச் செய்கையை ஊக்குவித்தல் கால் நடைகளைப் பாதுகாத்தல், குடிசைக் கைத்தொழில்கடற்தொழில் முதலிய தொழில் அபிவிருத்திக்கு ஊக்கமளித்தல் என்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

# எல்லாம் அவனுல்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

அது போல, என் கணவர் குமுறினார். அந்த எரிமலைக் குழம்பு என் உடலையும்தான் பொசுக்கியது. ஆனுல் இப்போது அது குளிர்ந்து விட்டதே!

அவர் என் கரம் பற்றினர்; தூக்கி விட்டார்; அழைத்துச் சென்ருர். அப்போதுதான் நான் புரிந்து கொண்டேன். இத்தனை காலமும் உணராத ஏதோ ஒன்றை நான் உணர்ந்து கொண்டேன். அவர் இதயத்தை என் இதயத்தால் கண்டு புரிந்து கொள்ள முடிந்தது. இதயம் ஒன்றிவிட்டது. உயிர்கள் இரண்டற்றுவிட்டன. நான்தான் அவர், அவர்தான் நான். இத்தனை காலத்துக்கு-எங்களுக்கு மணமாகி இத்தனை நாட்களுக்கு அந்த உள்ளுணர்வு ஏற்படவேயில்லையே!

அவர் அழுதார். நான் அழுதேன். இருவருமே அழுதோம்-ஏன் அழுதோம்? எதற்காக அழுதோம்? குழந்தைகள் ஒன்றைக் கண்டு மற்றது அழுவது போல நான் அழுதேன். அவருமழுதார். அவர் பொருமிப் பொருமி என் மார்பிலே முகம் புதைத்து சிறுபிள்ளை போல விம்மினார். சினிமாவைப் போல் 'மன்னித்துவிடு மீனு' என்று வாயால் அவர் கேட்கவில்லைத்தான். ஆனுல் அதைத்தான் அவருள்ளம் நாடிப் பொருமியது.

"குழந்தை போல அழுகிறீர்களே வெட்கமில்லையா உங்களுக்கு", கண்ணீரைத் துடைத்துவிட்டேன். ஒரு நொடியிலே 'காப்பி' தயாரித்தேன். என் கையாலேயே ஊட்டினேன். அவர் சிரித்தார். நான் சிரித்தேன். இரண்டு உள்ளங்களுமே ஒன்ருக முறுவலித்தன மணமான அன்றிலும் விட ஆயிரம் மடங்கு இளமையும் புதுமையும் எனக்கு வந்துவிட்டதாக நான் உணர்ந்தேன். அந்த இரவுதான்......நான் சொல்ல மாட்டேன்.

## நடராஜன்

"சொல்ல மாட்டாயா மீனு! இதோ பார் எனக்குப் பொல்லாத கோபம் வரும்" என்றேன் நான்.

"கோபம் வருமா? கோபம் வந்தால் என் உடலெல்லாம் பிரம்பு கொஞ்சும். என் உள்ளத்திலே......" அவள் குனிந்து கொண்டாள். என் பின் புறமாக வந்தாள் அவள் "எங்கே வாயைத் திறவுங்கள்!" என்ருள். திறந்தேன். மதுரமாக இருந்தது அந்த மைசூர்ப் பாகு அதைவிட அமுதமாக விருந்தது. என் காதோடு காதாக அவள் கூறிய வார்த்தை.

"உன் அம்மா சாதகம் கிதகம் பார்த்தாளாமா? கண்டம் கிண்டம் ஏதாவது?" நான் கிண்டல் செய்தேன். மீனு சிரித்தாள்.

அதை நினைத்துத்தான் நான் சிரித்தேன். எதற்கெடுத்தாலும் சிரிக்கிறேனேயென்று நினைக்கிருள் அவள், என்னை நச்சரித்து நச்சரித்து எழுப்பிவிட்டது எதற்காக? என்னைக் கல்லுப் பிள்ளையார் என்று கூட கடிந்து கொண்டாளே! அவள் செல்வம் பசி தாங்க மாட்டானும். துடியாய்த் துடித்து விடுவானும். அத்தனை ஆத்திரம் அவனுக்கு. நான் கூட என்னவாம்; கொதிக்கும் வெய்யிலிலே உழுதிவிட்டு வந்த உடனேயே கடைக்குப் புறப்பட்டு விட்டேனே! ஏன்? அவனுக்காகத்தான். பால்மா முடிந்துவிட்டதாம். கெட்ட பழக்கம்தான். என்ன செய்ய; கொடுத்துப் பழக்கி விட்டோமே!

## மீனு

பழக்கம் பொல்லாதது தான். அவர் துரும்பாய்ப் போய்விட்டார். வெய்யிலிலே வயல் வேலை செய்யப் பழகியவரா அவர்? அந்த மனேஜர் வேலை வேண்டாமென்பதற்காக இப்படிக் கஷ்டப் படுகிருர். வந்த கையோடேயே கடிந்து கடைக்கனுப்பி வைத்திருக்கிறேன். பாவம்! அவர் எத்தனை மாறிவிட்டார்! எங்கள் வாழ்வே எத்தனை தூரம் மாறிவிட்டது. எங்கள் லட்சியமே எங்கள் செல்வம் என்ருய்விட்டது. வரதன்தான் அத்தனை இன்பமும். அன்றே இந்த வரதன் பிறந்திருந்தால்......இப்போதுதான் என்ன? என் கண்மணி வரதன் வந்த பின் தானே இன்பம் தவழ்கிறது துன்பம் அத்தனையும் இன்பமாக்கிவிட்டதே என் குழந்தைக் கனி. இடியும் புயலும் என்ருே பறந்து விட்டன. இன்ப நிலவு எங்குமே பரவுகிறது! அம்மாகூட வரதனின் பொக்கை வாய்ச் சிரிப்பிலே தன்னை மறந்து கிடக்கிருள்! நாங்கள் எங்களையே மறந்து விட்டோம்; எல்லாம் அவனுல்; வேறென்ன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான 2-வது வாரம்!

நேர்மைக்காக வாழும் ஆற்றல் மிக்க அஞ்சா நெஞ்சன்!
அவனை விரும்பும் வீர மங்கை! இருவருக்கும் இடையூறு செய்ய ஒரு அக்கிரமக்காரன்!

மூவரையும் பாத்திரமாகக் கொண்ட முன்னேடியான கதை!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கும்பனித்தெரு) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு)

**வெம்பிளி** (கண்டி) **ஸ்ரீகிருஷ்ணு** (திருகோணமலே) **மொடர்ன்** (பதுளே)

**சாம்ரொக்** (வென்னப்புவ) **விஜிதா** (மஸ்கெலியா)

ஆகிய தியேட்டர்களில்

## டி. என். ஆர். புரொடக்ஷன்ஸ்

# மின்னல் வீரன்

உழைத்துவாழ்பவன் ஒருவன்!
ஊதாரியாக இன்னெருவன்!
இருவருக்கும் சண்டை சச்சரவு!
நேர்மைக்காக வாள் ஏந்திஞன் நல்லவன்!
அவனுக்குத் துணே செய்கிறது குதிரையும் நாயும்




பகைவனை அழிக்க கொடுமை செய்கிறுன் பாதகன்!
களவும் கபடமும் அவனுக்குத் துணே செய்கிறது!
நல்ல கதை—அருமையான வசனம்
காதுக்கினிய சங்கீதம்—மயிர்க் கூச்செறியும் கத்திச் சண்டைகள்
பயங்கரமான குதிரைச் சவாரி

இன்னும் இனிய சம்பவக் கோவைகள் பார்க்கப் பார்க்க பரவசமூட்டும்

## பார்க்கத் தவருதீர்கள்

## ரஞ்சன் - வீரப்பா - சந்தியா - வனஜா
## காகா ராதாகிருஷ்ணன் - முத்துலட்சுமி

இன்னும் பலர் திறம்பட இணேந்து நடித்தது.

*பின்னணி பாடியவர்கள்:* டி. எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், எஸ். சி. கிருஷ்ணன், பி. பி. ஸ்ரீனிவாஸ், தங்கப்பன், பி. லீலா, எம். எல். வசந்தகுமாரி, ராதா-ஜெயலெட்சுமி, டி. வி. ரத்தினம், ரத்னமாலா, ஜமுனுராணி, கஸ்தூரி

கதை வசனம்:
## ஏ. எல். நாராயணன்

டைரக்ஷன்:
## ஜம்பனு


இப் பத்திரிகை கொழும்புதட்டாதெரு, 196-ம் [illegible] எஸ். [illegible] நாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 அக்டோபர் மாதம் 4-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org